
மங்கையர் மலர்
MANGAYAR MALAR
மார்ச் '86 விலை ரூ. 3/-



everest/85/PP/381-tm



நீங்களே தூபம் போடலாமா?

ஆண்கள் பகுதி

சென்ற இதழில் ஒரு 'பாவப்பட்ட ஜென்மம்' எழுதிய கடிதத்தைப் படித்தேன். பெண்களால் கொடுமைப்படுத்தப்பட்டு மனக் காயத்தின் ஊமைக் கண்ணீரைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால்... பொதுவாக ஏன் ஆண்களும், பெண்களும் இப்படி ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொள்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை. இந்த மாதிரி ஒரு போக்கினை உங்களை மாதிரி பத்திரிகைகள் தூபம் போட்டு வளர்க்கிறீர்களோ என்று கூடச் சந்தேகமாகத்தான் இருக்கிறது.

பொதுவான பத்திரிகைகளின் 'மனைவிக்குப் பயந்த ஆண்கள்' ஜோக்ஸ் மிகவும் விரசித்தம்.

''ஏன் உன் ஒய்ஃபுக்கும், உனக்கும் ஒரே கலரில் புடவையும், லுங்கியும் வாங்குகிறாய்?''

''அப்பதான் அவ புடவையைத் தோய்க்கும்போது மத்தவங்களுக்குத் தெரியாது!''

இது மாதிரி அசட்டுத்தனங்கள் அதிகம். இதற்கு யார் ஹாஹா... என்று சிரிப்பார்கள் என்று தெரியவில்லை. அதே மாதிரி இப்போது பெண்கள் பத்திரிகைகள் அதிகம். கொடுமையால் வதங்கிய பெண், இத்தனை வருஷத்திற்குப் பின் பெண்ணுரிமைச் சட்டத்தில் விளைந்த மாறுதல்கள், அதனால் ஏற்பட்ட உரிமைகள், உயர்ந்த வி. ஐ. பி. பெண்களின் பிரத்யேகமான பேட்டிகள் etc... etc......

ஏன்... ஏன்... என்றுதான் கேட்கிறேன். ஆண்களோ பெண்களைக் கிண்டல் செய்கிறார்கள். பெண்களோ கோபத்தால் புருவம் தூக்குகிறார்கள். இவ்விரண்டு பக்கமும் நின்று கோஷ்டிகள் கைதட்டி உற்சாகப் படுத்துகின்றனவே தவிர உண்மை வாழ்க்கையின் போக்கைப் பற்றிச் சிந்திக்கிறார்களா?

இப்படி எழுதுகிறேன் என்பதற்காக ஆண்களின் (அ) பெண்களின் கொடுமை சரியென்றோ, அவர்களுக்காக வாதாடக் கூடாது என்றோ சொல்லவில்லை. ஆண்களின் பகுதி என்றவுடனே அதிலே பெண்களைத் திட்டுவதுதான் வேலையா? அல்லது பெண்கள் பத்திரிகை என்றவுடனே உரிமைப் பிரச்னைதானா?

சிந்தியுங்கள். சமுதாயத்திற்கு, வீட்டிற்கு, குழந்தைக்கு எல்லோருக்குமே ஆண், பெண் இருவருமே அவசியம்தான். ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டே இருப்பதால் வளரும் சமுதாயம் எதிர் 'செக்ஸை' சந்தேகத்துடன்தான் பார்க்கிறார்கள். நெருங்கி வர பயப்படுகிறார்கள். தோழமையுடன் கைகுலுக்க மறுக்கிறார்கள்.

ஒரு கல்லூரி மாணவி திருமணமாகி புகுந்த வீட்டில் நுழையும்போதே மாமியார், நாத்தனார் என்றால் அரக்கிகளாகத்தான் உருவகித்துக் கொண்டு போகிறாள்.

அதேபோல் இளைஞர்களுக்குப் பெண்கள் என்றால் கேலிப் பொருள். அவன் வாழ்க்கையில் நுழையும்போது சிந்தனைமிக்க பெண்ணைத் தன் துணைவியாக்க மறுக்கிறான். கிராமத்து அடக்கமான பெண் தேவலையாம். நகரத்துப் பெண் லிப்ஸ்டிக் பூசிக்கொண்டு சேவைக்குச் சேரிக்குப் போவாள். வீடு தங்க மாட்டாள். இது அவனின் வாதம்.

ஏன் இரண்டு தரப்பில் இடைவெளியைத் தூபம் போட்டு வளர்க்கப் பார்க்கிறீர்கள்? வேண்டாம் இந்த விஷமப் பிரச்னை. கல்வி அறிவும், விஷய ஞானமும் ஆண், பெண்ணிடையே இங்கு அற்புதமாக மலர்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்க்கையை நடத்தினால் அந்தத் தோழமைமிக்க சமுதாயம் எத்தனை அழகாக இருக்கும்?

சிறுமை கண்டு பொங்குங்கள். ஆனால் அடங்க வேண்டிய இடத்தில் அடங்குவது அறிவுடைமை.

ஆபீசிற்குப் போனால் மேலதிகாரியின் 'மூட்' பார்த்து நடந்து கொள்கிறோம். முதலாளியின் முகம் பார்த்து அடங்கிப் போகிறோம். இதே நிலைமை ஏன் வீடுகளில் இருப்பதில்லை? பெண்ணுக்கு மட்டுமல்ல, ஆணுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

வாழ்க்கையில் வேறுபட்ட சிந்தனைகள் கொண்ட வளர்ந்த இருவர் சேரும்போது பல முரண்பாடுகள் ஏற்படலாம். அது கருத்து முரண்பாடாகலாமே தவிர, வாழ்க்கை முரண்பாடாக ஆகக் கூடாது.

யோசனை செய்யுங்களேன் நண்பர்களே!

உங்கள் நண்பன்,

அருண் பிரகாஷ், தில்லி.

வீடு வாசல்

மஞ்சுளா ரமேஷ்

டெலிபோன் மணி கிணுகிணுத்தது.

எடுத்துப் பேசியபோது, "திருக்கடவூர் அபிராமி அம்மன் சந்நிதியில் குத்து விளக்குப் பூஜை நடக்கிறது. நீங்கள் வந்து பார்க்கணும்" என்றது மறுமுனை.

"இப்பத்தான் ஊர் ஊருக்கு, ஏரியா ஏரியாவுக்குக் குத்துவிளக்குப் பூஜை நடக்கிறதே, என்ன அதிசயம்?" என்றேன்.

"இல்லை, இது இரண்டு கல்லூரி மாணவிகளாகச் சேர்ந்து செய்வது. தவிரவும் பள்ளி மாணவிகளும் செய்கிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி, பள்ளி மாணவிகள் யானை, புஷ்பப் பல்லக்கு முன்னே வர, ஊர்வலமாக திருவீதி சுற்றி, சீர்வரிசை ஏற்றி, அம்மன் சந்நிதியிலே குத்துவிளக்குப் பூஜை நடத்தப் போகிறார்கள்..." என்றார்.


ஆச்சரியமாக இருந்தது. கல்லூரி மாணவிகளா இப்படியெல்லாம் செய்யப் போகிறார்கள்? கல்லூரி கல்வித்துறை இயக்ககத்தின் துணை இயக்குநர் சிவ. பார்வதி டெலிபோனில் கூறியது அனைத்தும் உண்மை என்பது திருக்கடவூருக்குப் போன போது புரிந்தது.

தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, திருச்சி இந்திரா காந்தி மகளிர்க் கல்லூரி, குருஞானசம்பந்தர் மெட்ரிகுலேஷன் பள்ளி முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த மடத்தில் காலையிலேயே குழுமிவிட்டனர்.

துணை இயக்குநர் சிவ. பார்வதியும், கல்லூரி முதல்வர் வசந்தாவும், திண்டுக்கல்லிலும், மயிலாடுதுறையிலும், சென்னையிலும் மகளிரின் உரிமைக்காக ஊர்வலங்கள், கண்காட்சிகள் நடத்தியவர்கள். வரதட்சணை எதிர்ப்பு மாநாடு நடத்தியவர்கள். இவர்கள் இப்போது குத்துவிளக்குப் பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்ய மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

"பொதுவாக போராட்டம், மாநாடு நடத்துபவர்கள் இப்படி அதிகம் ஆன்மீகத் துறையில் ஈடுபடுவதில்லையே. நீங்கள் வித்தியாசமாக இருக்கிறீர்களே" என்றேன்.

பார்வதி சிரித்தார். "இப்போதைய வழக்கத்தில் இது முரண்பாடாக இருக்கலாம். ஆனால் உண்மையில் ஒரு புதுமைப்பெண்





எப்படி இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் சொல்ல முயலுகிறேன்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற கொடுமைகளுக்கு. அச்சுறுத்தல்களுக்கு அவள் கோழையாகி பயந்துவிடக் கூடாது. எதிர்த்து நின்று வாழ்க்கைப் பிரச்னையைச் சமாளிப்பவளாக இருக்க வேண்டும்.

இருக்கக் கூடாதா?



இப்படிப் புதிய சிந்தனைகளைக் கொண்டு ஒரு பெண் இருக்கிறாள் என்பதற்காக அவளுக்கு வீடு, வாசல் என எதுவும் இருக்கக் கூடாதா என்ன? நல்ல இல்லத்தரசியாக, சிறந்த மனைவியாக, தெய்வப் பற்று மிகுந்த பெண்மணியாகவும் இருக்க வேண்டும்.

அன்பு இல்லறம், சிந்தனை மிக்க வாழ்க்கை இதை இரண்டையும் இணைப்பதுதான் என்னுடைய நோக்கம் என் மாணவிகளுக்கும் அதைத்தான் சொல்கிறேன்...''

என்று நீண்ட விளக்கவுரையையே நிகழ்த்திவிட்டார் பார்வதி.

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளை கல்லூரி மாணவிகள் தரிசித்து மதியம் ஆசி பெற்றனர். அந்தச் சந்திப்பு மிக அழகிய கலந்துரையாடலாக அமைந்தது. பொதுவாக, ஆதீனகர்த்தாக்கள் பெரியவர்கள் அறிவுரைகளை வழங்குவார்கள். இவர்கள் மாணவிகளிடம் கேள்விகளைக் கேட்டார்கள்.

ஒரு மரத்திற்கு அடிப்படை எது?

ஒரு கட்டிடத்திற்கு அடிப்படை எது?

ஒரு சமுதாயத்திற்கு முக்கியமானவர் யார்?

வேர், அஸ்திவாரம், பெண் என உற்சாகக் குரலில் கூறினார்கள் மாணவிகள். ஏன் என அடுத்த கேள்வியை எழுப்பினார்கள் சந்நிதானம்.

ஒவ்வொருத்தர் ஒவ்வொரு பதில்.

* வேர் இல்லையானால் மரமே இல்லை. இலையோ தண்டோ போனாலும் மீண்டும் தளிர்க்கும். வேர்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை.

* அஸ்திவாரம் பலமாக இருந்தால்தான் மேலே எத்தனை மாடிகளையும் எழுப்பலாம் கட்டிடத்தை எத்தனை அழகுபடுத்தினாலும் அஸ்திவாரம் பலமாக இல்லையானால் விழுந்துவிடும்.



* குழந்தையைப்பெற்றுவளர்த்து, வீட்டைக் காத்து பண்பாடு, கலாசாரம் ஊட்டி வீட்டை நல்ல முறையில் உருவாக்குபவள் பெண்தான். அவள் சரியில்லையென்றால் வாழவே சரியாகாது.

வாதப் பிரதிவாதங்கள், வழக்குகள் — ''பெண்தான் முக்கியமா? ஆண் இல்லையா?''
சுவாமிகள் சிரிப்புடன் கேள்வி. மாணவிகள் 'பளிச்' பதில். மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் அந்த நேரத்தில் எத்தனை அழகான கருத்துக்களை அந்த மாணவிகளின் உள்ளத்திலே ஏற்றிவிட்டிருக்கிறார்கள் சுவாமிகள்! கடைசியில் சொன்னார்கள்...

''...அப்போதுஒருபெண்ணின்பொறுப்பு எவ்வளவு முக்கியம்னு புரியுது இல்லியா? மரம் பல கிளைகளை விடும். இலைகள் ஆயிரமா வளரும். பூக்கள் கனிகள்னுபிரியும். ஆனா அத்தனையையும இணைத்து உயிரைத் தருவது வேர் இல்லையா?

அதே மாதிரி பெண்கள் இருக்கணும் இல்லையா? குடும்பத்தில பலர் பலவிதமா இருப்பாங்க. எல்லோரையும் இணைத்து உயிர் கொடுக்க வேண்டியது பெண்ணில்லையா?

அதுக்காக வேர் மட்டுமோ, அஸ்திவாரம் மட்டுமோ இருந்தா அது முழுமைன்னு சொல்ல முடியுமா? மரத்திற்கு அழகூட்டுவது, தண்டு, மலர், கனி, இலை. அப்படித்தானே? கட்டிடத்திற்கு அழகூட்ட எத்தனை சாதனங்கள். சமுதாயத்திலே ஆணும் பெண்ணும் முக்கியமானவர்கள் தான்.

நான்தான் முக்கியம்னு பெண் உரிமைப் போராட்டம் நடத்தறதும், நான்தான் பெரிவன்னு ஆண் கொடுமைப்படுத்த நினைப்பதும் தப்பு. அவரவர்கள் அவரவர் நிலையிலே சிறந்த பணியாற்றணும்...''

இதைவிட அந்த 'மன் ஏஜ்' உள்ளங்களுக்கு அழகாக யார் அறிவுரை சொல்ல முடியும்?

மாணவிகள் சென்ற பிறகும் கூட அவர்களின் தைரியமான பேச்சுக்களை சிலாகித்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பள்ளி மாணவிகளைச் சேர்த்து அவர்களை பூஜைக்கு அனுப்பி வைத்த அலமேலு ராமமூர்த்தி. பூஜைக்கான ஏற்பாடுகளை வெகு சுறுசுறுப்பாக ஏற்பாடு செய்த ஆறுமுகம் பிள்ளை, பிரேமா ராமனாதன் அனைவரும் திருக்கடவூரில் மாலையில் ஒன்று கூடிவிட்டனர்.

நூற்றுக்கணக்கான மாணவிகளின் கையில் மலர்கள் ஏந்திவர, கோவில் யானை முன்னே வர, திருவீதி வலம் வந்து அபிராமி அம்மன் சந்நிதியில் பூஜையைத் தொடங்கினார்கள். தை வெள்ளிக்கிழமை அலங்காரத்தில் அபிராமி ஜொலிக்க, குத்து விளக்கின் முத்துச் சுடரொளிகள் பிரகாரத்தில் பட்டுத் தெறிக்க போற்றி வழிபாடும், 'நமஹ' கோஷமுமாக அந்த மாலை நேரம் அற்புதமாகப் பொலிந்தது.

துணை இயக்குநர் பார்வதி கூறியது உண்மைதான்.

வாழ்க்கையின் மேடு பள்ளங்களைச் சந்திக்கப் போகிறவர் கல்லூரி மாணவிதான். அவள் எப்படி இருக்க வேண்டும்?

அன்பே உருவான பெண்ணாகி அமுதம் வழங்க வேண்டும்,

அபிராமியைப் போல.

கொடுமைகளும், அவலங்களும் அவளைத் தொட நினைக்குமானால் —

தருமபுர ஆதீனத்தில் இருக்கும் —

பதினெட்டு கை துர்க்கை போல உக்கிர தேவதையாக மாற வேண்டியதுதான்.

வேறு வழியில்லை.

படங்கள், அட்டை வண்ணப்படம்:

குரு போட்டோ ஸ்டுடியோ.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: பாயச வகைகள்

கடைசி தேதி: 15-3-86

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.
அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Glaxo
Complan
COMPLETE PLANNED FOOD
STRAWBERRY FLAVOUR
23
மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான் — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
884. GLC. 120 Tm

பெண்ணாகவே பிறக்கக்கூடாது

வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, 'அப்பாடா' என்றவாறு உட்கார்ந்த மைதிலியை காலிங் பெல் அழைத்தது.

'அடாடாடா!' என்று அலுத்தவாறு கதவைத் திறந்தவள் கீதா நிற்பதைக் கண்டாள்.

"அடடே! கீதாவா?" என்று ஆச்சரியத்தோடு கூவியவள் "வாடி கீதா வா. இரண்டு பேரும் ஒரே ஊரில்தான் இருக்கோம்னு பேரு. ஆனா சந்திக்கவே முடியறதில்லே. இப்பவாவது வழி தெரிஞ்சுதா உனக்கு?" என்று சொன்னவாறு கையைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தாள்.

"உட்காருடி.

கீதா அருகில் உள்ள சோபாவில் அமர்ந்தாள். "இரு. இந்த வேகாத வெய்யில்ல வந்திருக்கே. முதல்ல ஜூஸ் கொண்டு வரேன். அப்புறம் பேசலாம்" என்று சொன்னவள் உள்ளே சென்றாள்.

ஜூஸ் கலந்துக் கொண்டு மீண்டும் ஹாலுக்கு வந்தாள். ஒரு டம்ளர் ஜூஸை அவளிடம்கொடுத்துவிட்டு."இப்போஎன்ன விஷயம் சொல்லு" கேட்டாள் மைதிலி.

"மைதிலி. அன்னிக்குஎன் நாத்தனாருக்குக் கல்யாணம் நிச்சயமாச்சுன்னு சொன்னேன் இல்லே: அடுத்த வாரம் கல்யாணம். நீயும் உன் ஹஸ்பெண்டும் கட்டாயமா வரணும்" என்று சொன்னபடி அழைப்பிதழை அவளிடம் நீட்டினாள்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். நாங்க நிச்சயமா வரோம்" என்றவள்– ஜூஸைக் குடித்தபடி அழைப்பிதழைப் படித்தாள்.

படித்து முடித்துவிட்டு கீதாவின் முகத்தை ஏறிட்டு நோக்கியவள் அவள் முகம் சோர்ந்து இருப்பதைக் கண்டாள்.

"ஏண்டி, என்னவோ மாதிரி இருக்கே? வேலை ரொம்ப ஜாஸ்தியா? சே! என்ன முட்டாள் தனமாக கேக்கறேன் பாரு. நாத்தனார் கல்யாணம்னா ஒரே மன்னியான உனக்கு வேலை இல்லாம இருக்குமா?"

"ஆமாண்டி, எக்கச்சக்கமான வேலை. இவருக்கோ, இப்போன்னு பார்த்து ஆபீஸ்ல ஆடிட் டைம். அதனால் லீவ் கிடைக்கலே. அடுத்த வாரம் கல்யாணத்துக்குத்தான் லீவு எடுத்திருக்கிறார். அதனால் எனக்குத்தான் ரொம்ப வேலை" சோர்வுடன் சொன்னாள்.

"என்கிட்டச்சொல்லக்கூடாதா?என்னால் முடிஞ்ச வேலைகளை நான் செஞ்சுத் தரமாட்டேன்?" மைதிலி உரிமையுடன் கோபித்தாள்.

"இப்போதைக்கு நீ செய்ய வேண்டிய வேலை ஒண்ணுமில்லேடி. ஆனா கல்யாணத்தின்போதுதான் ரொம்ப வேலை இருக்கும். அதனால் கல்யாணத்துக்கு நீ கட்டாயம் வந்து எனக்கு உதவி செய்யணும்டி" என்ற கீதா கண்கள் கலங்கினாள்.

"சீ, அசடு! இதுக்கு ஏண்டி அழறே? கல்யாணத்தின்போது நீ 'செய்'னு சொல்லாட்டாக்கூட நான் செய்யாமல் கைகட்டிண்டு உட்கார்ந்திருப்பேனா?"

கீதாவோ கட்டுக்கடங்காமல் குலுங்கி குலுங்கி அழுதாள்.

"என்னடி, என்னாச்சு? ஏண்டி அழறே?" பதறியபடி அவளை உலுக்கினாள் மைதிலி.

"ஒண்ணுமில்லேடி" என்று சொன்னவாறு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"கமான். என்னவோ விஷயம். என்ன சொல்லு. என்கிட்டச் சொல்லக்கூடாத அளவுக்கு நான் வேற்று மனுஷின்னா சொல்ல வேண்டாம்" என்றாள் மைதிலி.

"இல்லேடி. நேத்திக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது படி வழுக்கிக் குடத்தோட விழுந்துட்டேன்." அழுகையுடன் சொன்னாள்.

"ஐயையோ! அடிகிடி ஏதாவது பட்டுதா?" பதற்றத்துடன் கேட்டாள் மைதிலி.

"நீ கேட்கிற இந்த முதல் கேள்வியை என்

உஷா

மாமியார் கேட்கல்லேடி. குடம் நசுங்கிப் போச்சுன்னு ஒரே கத்தல்.''


''அதை விடு. உடம்புல அடி ஏதாவது பட்டுதா?'' மீண்டும் கேட்டான்.

''இடுப்பில் முதுகெலும்பு பக்கத்துல ஒரே வலிடி'' என்று பொங்கி வந்த கண்ணீரைக் கட்டுப்படுத்தியபடி சொன்னாள்.

''டாக்டர்கிட்டே காட்டறதுக்கு என்னடி? சரி, கிளம்பு.. இப்போ டாக்டர்கிட்டே போகலாம். ஏதாவது ஃப்ராக்சரா இருக்கப் போறது'' மைதிலி கலக்கத்துடன் சொன்னாள்.

''வேண்டாம் மைதிலி, ஃப்ராக்சரா இருந்தா இத்தனை நேரத்துக்குப் 'பொத பொத'ன்னு வீங்கிண்டு இருக்கும். அயோடக்ஸ் தடவிண்டே இருந்தா வலி தெரியலே. இப்போ டாக்டர்கிட்டே போனா ஏதாவது 'பெட் ரெஸ்ட்' அது, இதுன்னு சொன்னாங்கன்னு வச்சுக்கோ... இந்தக் கல்யாண சமயத்துல என்னால் படுக்க முடியுமா? 'நல்ல நாளிலேயே மாடு நாழி பால் கறக்கும்; இன்னும் கன்னுக்குட்டி செத்தாக் கேட்கணுமா?'' ஏற்கெனவே என் மாமியாருக்கு எங்கப்பா ஸ்கூட்டர் வாங்கித் தராதது பெரிய குறை! 'வேண்டாத மருமகள் கைப்பட்டாக் குற்றம்; கால் பட்டால் குற்றம்'ங்கிறா. இப்போ நான் படுத்திட்டேன்னா வேலை செய்யறதுக்குச் சோம்பல்'பட்டுண்டு வேஷம் போடறேன்னு சொல்லிக் காட்டுவா. அதனால் நான் எப்படியோ சமாளிச்சுக்கறேன். நீ எனக்கு ஒரே ஒரு ஹெல்ப் செய்தால் போதும்.''

''என்னடி? சொல்லு. நிச்சயமா செய்வேன்.''



''ஜானுவாசத்துக்கு அன்னிக்கு காலேயி லேயே நாங்க கல்யாண மண்டபம் போய் விடுவோம். அன்னிலேருந்து அடுத்த ரெண்டு நாளும் நீ என்கூட இருந்து கூடமாட ஹெல்ப் செய்யணும். உன் ஒருத்திக்கிட்டத் தானே நான் உரிமையோட எதையும் கேட்க முடியும்? என்னுல் குனிந்து நிமிரவே முடியல்லே. இப்போ எப்படியாவது சமாளிச் சுடுவேன். ஆனு கல்யாணத்தின் போது அப்படி இருக்க முடியுமா? ஒரு கோலம் போடணும்னுக் கூட குனிஞ்சுதானே ஆக ணும்?''

''இதெல்லாம் நீ சொல்லணுமாடி. நான் நிச்சயமா வரேன். கவலேப்படாதே...'' என்ருள் ஆறுதலாக.

''சரி, அப்போ நான் கிளம்பறேண்டி'' என்றபடி எழுந்தாள் கீதா.

''இரேன். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டுப் போயேன்.''

''இப்போப் போய் என்னுல் ரெஸ்ட் எடுக்க முடியுமா? அரை மணி நேரத்துல வந்துடறேன்னு என் மாமியார் கிட்டே சொல்லிட்டு வந்திருக்கேன். லேட்டாப் போனு ஏதாவது சொல்வா'' என்று சொன்னபடி சோர்வுடன் நடந்துச் சென்ற கீதாவை பரிதாபமாகப் பார்த்தபடி நின்ருள்.

கீதாவும் மைதிலியும் திருச்சியில் குளித் தலேயில் பிறந்து ஒன்ருகவே வளர்ந்தவர் கள். இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசித்ததால் பிறந்தது முதல் நெருங்கியத் தோழிகளாக பழகியவர்கள். வாழ்க்கைப் பட்டதும் ஸ்ரீரங்கத்தில்தான்.

மைதிலிக்கு மாமியார் மாமனுர் இல்லாத இடமாகக் கிடைத்துவிட்டது. கீதாவுக்கோ எப்போதும் எதிலும் குறை காண்கின்ற மாமியார். பின்னேக்கு ஸ்கூட்டர் வாங்கித் தரவில்லே என்ற குறை வெறும் வாயை மெல் லின்றவர்களுக்கு அவலாகியது.

கீதாவின் தந்தை வெங்கட்ராமன் மூன்று பெண்களில் மூத்தப் பெண்ணுனை அவனுக்கு, 'பெண்ணுக்கு நல்ல இடம் கிடைத்துவிட் டதே'' என்ற எல்லாத் தகப்பனுருக்கும் உள்ள சந்தோஷத்தில் தன்னுடையைச் சக்திக் கும் மீறியே செலவு செய்து திருமணத்தை முடித்துவிட்டார். திடீரென்று, 'ஸ்கூட் டரைக் கொண்டா' என்ருல் எங்கே போவார்? கல்யாணத்துக்கு முன்பே ஸ்கூட் டரைப் பற்றிச் சொல்லியிருந்தால் தன்னு டைய சக்திக்கு மீறிய இடம் என்று நினேத்து இந்த வரனே ஒதுக்கியிருப்பார். 'கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்ய முடியுமா? கொஞ்ச நாள் பொறுத்துச் செய்கிறேன் என்று சொன்னுர். அதனுல் ஸ்கூட்டர் வரும் வரை மாமியார் வாயை அடைப்பது கஷ்டம் என்பதைப் புரிந்து கொண்டும் ஒன்றும் செய்யத் தோன்ருமல் 'பூம்பூம்' மாடு மாதிரி மாமியார் சொல்வதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டு பேசாமல் இருக்கின்ருள்.

அவளுடைய நிலேயை எண்ணி இரங்கி ஞள் மைதிலி. 'எப்படியாவது அவரிடம் சொல்லி அவளுக்கு உதவி செய்யப் போய்த் தான் ஆக வேண்டும்' மனத்தினுள் முடிவு செய்து கொண்ட மைதிலி கண்ணயர்ந் தாள்.

அன்று இரவு.

கணவன் முரளியிடம் எல்லாவற்றையும் சொன்னுள்.

''அடுத்த வாரம் வியாழக்கிழமை மத் யானமே நான் போய்விடுவேன். நீங்க ஆபீஸ் முடிந்தவுடன் நேரா மண்டபத்துக்கு வந் துடுங்கோ'' தன்னுடைய திட்டத்தைச் சொன்னுள்.

''அடுத்த வாரம்தானே. அதைப் பற்றி அப்புறம் பார்ப்போம்!'' என்றவன் பத்திரிகையில் மூழ்கினுன்.

நாட்கள் வேகமாகப் பறந்தன.

வியாழன் காலே.

சமையலே முடித்துவிட்டு தங்களறைக்கு வந்த மைதிலி இரண்டு நாட்கள் மண்டபத் தில் தங்கப் போவதால் வேண்டிய துணி மணிகளே சூட்கேஸில் அடுக்கிக்கொண்டிருந் தாள்.

குளித்துவிட்டு உள்ளே நுழைந்த முரளி, ''என்னங்க? எந்த ஊருக்குப் போகிருப் போல?'' கிண்டலுடன் கேட்டான்.

''என்ன நீங்க? விடிய விடிய கதைக் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்கிற மாதிரி எங்கே போகப் போறேன்னு கேக்க றேள்? வியாழக்கிழமை கீதா நாத்தனுர் கல் யாணத்துக்கு ஹெல்புக்குப் போகப் போறேன். போன வாரமே சொல்லலேயா?''

''ஓ!'' என்ருன்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு, ''இன்னிக்கு நீ போக முடியாதே, மைதிலி'' என்ருன்.

''ஏன், ஏன், ஏன்?'' பதற்றத்துடன் கேட்டாள்.

''இன்னிக்கு ராத்திரி சங்கர் சாப்பாட் டுக்கு வரேன்னு சொல்லியிருக்கான். பாவம், சாப்பாட்டுப் பிரியன். ஹோட்டல்ல சாப் பிடறவன். வீட்டுச் சாப்பாட்டுக்கு ஏங்க ருன். அதனுல் அவனே இன்னிக்கு ராத்திரி 'சும்மா சாப்பிட வா'ன்னு சொல்லியிருக் கேன். நீ கல்யாணத்துக்குப் போயிட்டா எப்படி? அதனுல் நீ இன்னிக்குப் போக வேண்டாம்.''

வார்த்தைகள் சம்மட்டிகளாக நெஞ்சில் அறைந்தன. ''என்ன நீங்க? வரேன்னு

சொடு — அதன் மதிப்பைக் கவனி யாதே!
போராடு — காயங்களே கவனியாதே!
பாடுபடு — ஓய்வைத் தேடாதே!
— சரஸ்வதி.



பெண்களுக்குத் தேவையான

உபயோகமான

புத்தகங்கள் இவை!



திரு. தமிழ்வாணன்

திரு. லேனா தமிழ்வாணன்

ஆசிரியர் தமிழ்வாணன்; திரு. லேனா தமிழ்வாணன் எம். ஏ. மற்றும் ஆசிரியர் குழு எழுதியிருக்கும் பயனுள்ள புத்தகங்கள் இவை: அழகுக் குறிப்புக்கள் ரூ. 8.90; அழகாய் இருப்பது எப்படி? ரூ. 6.25; முக அழகைப் பாதுகாப்பது எப்படி? ரூ. 4.75; கொண்டை அலங்காரமும், கூந்தல் பராமரிப்பும் ரூ. 4.25; உடையலங்காரமும், நகையலங்காரமும் ரூ. 9.75; நீங்களும் மேக்கப் செய்யலாம்! ரூ. 8.75; குடும்பம் நடத்துவது எப்படி? ரூ. 7.00; வீட்டுக் குறிப்புகள் ரூ. 8.50; வீட்டு விஷயங்கள் ரூ. 4.25; வகை வகையான கோலங்கள் ரூ. 4.50; சாஸ்திரப்படி வீடு கட்டுவது எப்படி? ரூ. 10.00; சலவைக் கலையும் கறை நீக்கும் முறைகளும் ரூ. 4.00; வீட்டில் காய்கறித் தோட்டம் போடுவது எப்படி? ரூ. 5.75; குறைந்த செலவில்சிறந்தபூந்தோட்டம் அமைப்பது எப்படி? ரூ. 7.75; வீட்டுப் பராமரிப்பும், வீட்டுப் பிரச்சினை சமாளிப்பும் ரூ. 5.75; புகுந்த வீட்டில் பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் ரூ. 5.25; பெண்களின் வாழ்க்கை ஏக்கங்களும் தீர்வுகளும் ரூ. 11.75; மென்ஸஸ் தொல்லைகள் ரூ. 6.50; குழந்தை இல்லாத குறையா? ரூ. 5.90; கர்ப்பமாக இருக்கும்போது கவனிக்க வேண்டியவை ரூ. 7.00; சுலபமாகப் பிள்ளை பெறுவது எப்படி? ரூ. 6.00; குழந்தை பிறந்தவுடன் என்ன செய்ய வேண்டும்? ரூ. 4.90; குழந்தையை வளர்ப்பது எப்படி? ரூ. 5.50; குழந்தைகளுக்குச் சூட்ட அழகான பெயர்கள் ரூ. 5.50; பெண்களுக்கான யோகாசனம் ரூ. 8.00; பெண்களின் நோய்கள் ரூ. 14.00; செவ்வாய் தோஷப் பரிகாரமும், மாங்கல்ய பாக்கியமும் ரூ. 8.00; பெண்களின் ருது ஜாதகமும், வாழ்க்கைநலமும் ரூ. 11.75; ஆண்மைக் குறைவும், பெண்மைக் குறைவும் ரூ. 7.75; கர்ப்பத்தைக் கலைப்பது எப்படி? (அபார்ஷன்) ரூ. 5.00.

வட இந்தியச் சமையல் ரூ. 6.75; ஆந்திரச் சமையல் ரூ. 6.00; மலையாளச் சமையல் ரூ. 6.50; உடுப்பி சமையல் ரூ. 5.90; செட்டி நாட்டுச் சமையல் ரூ. 3.25; பிராமணச் சமையல் ரூ. 6 90; முஸ்லிம் சமையல் ரூ. 6.75; மேலைநாட்டுச் சமையல் ரூ. 8.00; நீங்கள் இதுவரை செய்திராத சமையல் ரூ. 6.00; திடீர் விருந்தாளிக்கான சமையல் ரூ. 6.25; விதவிதமான முட்டைச் சமையல் ரூ. 3.90; மீன் மற்றும் கடலுணவுச் சமையல் ரூ. 5.75; பலகார வகைகள், ரூ. 6.00; ஸ்வீட்ஸ் வகைகள் ரூ. 4.50; ஊறுகாய் வகைகள் ரூ. 3.50; சிக்கன் வகைகள் ரூ. 4.00; மட்டன் வகைகள் ரூ. 8.50; சீன உணவு வகைகள் ரூ. 7.50; சைவ, அசைவ சூப் வகைகள் ரூ. 4.00; பழரச பானங்களும், ஜாம் வகைகளும் ரூ. 3.75; கீரை வகைகளும், பொடி வகைகளும் ரூ. 4.25; வீட்டிலேயே ஐஸ்கிரீம், கேக் தயாரிப்பது எப்படி: ரூ. 7.00; சத்துள்ள காய்கறிப் பதார்த்தங்கள் ரூ. 5.25; சமையலறைக் குறிப்புகள் ரூ. 5.00; தனி ஒருவர் தானே சமைக்கும் முறைகள் ரூ. 11.00.

திருமணச் சட்டமும், விவாகரத்துச் சட்டமும் ரூ. 6.50; 1986 ஆம் ஆண்டு ராசிபலன் ரூ. 5.00; சனிப் பெயர்ச்சி ரூ. 6.00; ஞாபக சக்தி இல்லையா? ரூ. 6.00; வாழத் தெரிய வேண்டாமா? ரூ. 7.00; ஜெனரல் நாலெட்ஜ் (பொது அறிவு விஷயங்கள்) ரூ. 22.00; ஆங்கிலம் கற்றுக் கொள்ளுங்கள் ரூ. 19.00; ஆங்கிலத்தில் பேசுவது எப்படி? பாகம்—1 ரூ. 11.00; பாகம்—2 ரூ. 14.50; ஹிந்தி கற்றுக் கொள்ளுங்கள் ரூ. 20.00; தெலுங்கு கற்றுக் கொள்ளுங்கள் ரூ. 14.00; மலையாளம் கற்றுக் கொள்ளுங்கள் ரூ. 13.00;

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி. பி. பி. யில் பெறக் கடிதம் எழுதுங்கள். அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி.) சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோ ரூம் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447,
4, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர், சென்னை—600 017.
போன்: 442926.

கருவேப்பிலைச் செடிகள் தோட்டத்தில் வைத்திருப்பவர்கள் வாரம் ஒருமுறை அதன் வேரில் தண்ணீருக்குப் பதில் மோர் அல்லது தயிர் ஊற்றி வளர்த்தால், கருவேப்பிலை மிக்க மணமுள்ளதாக வளரும். இது அனுபவமான உண்மை.

— ஜெயலெக்ஷ்மி.

அவகிட்ட நிச்சயமா சொல்லியிருக்கேன். என்னை எதிர்பார்த்துண்டு இருப்பாளே?''

''ஆமா. நான் என் நண்பனை வரச் சொல்லியிருக்கேனே'' அழுத்தந்திருத்தமாகச் சொன்னான்.

''நான் போன வாரமே சொன்னேனு இல்லையா, வியாழக்கிழமை போகப் போறேன்னு'' அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள்.

''எனக்கு மறந்துப் போச்சு'' ரொம்ப சாதாரணமாகச் சொன்னான்.

''ஆமா, என் விஷயமெல்லாம் உங்களுக்கு மறந்து போகும். நீங்க ஏதாவது உங்க ஃபிரெண்டுக்கு ஹெல்ப் செய்யப் போகணும்னு மறக்கமாட்டீங்க'' 'வெடுக்'கென்று சொன்னாள்.

''மறந்துப் போச்சுன்னு அத்தோட விடேன். இப்போ என்ன செய்யணுங்கிறே?'' முரளியும்கேட்டான் ஆத்திரத்தோடு.

சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பின்பு,

''ஒண்ணு செய்யலாம். உங்க நண்பரை நேரா கல்யாண மண்டபத்துக்கு அழைச்சுண்டு வந்துடுங்களேன். உங்க நண்பர் என்னிடம் ஒரு சகோதரி போல் பழகுவார். அதனால் தப்பா நினைக்க மாட்டார்.''

''அழைக்காத விருந்தாளியா அவன் எப்படி வருவான்? என்ன முட்டாள் தனமாப் பேசறே நீ?'' கோபத்துடன் கேட்டான்.

''கல்யாணம்தானே. ஆயிரம் பேரோடு ஆயிரத்து ஒண்ணுவது ஆளா இவர் சாப்பிட்டா யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அப்படி யாராவது ஏதாவது சொன்னா நான் இருக்கேன்.''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். உன்னால் அவனுக்கு சமைச்சு வைக்க முடியுமா, முடியாதா? நான் முக்கியமா, உன் ஃபிரெண்டு முக்கியமான்னு நீயே முடிவு பண்ணிக்கோ'' டிரஸ் செய்து கொண்டு சாப்பிடாமல் கிளம்பிவிட்டான்.

கண்களிலிருந்து கண்ணீர் வழிய அவன் செல்லும் திசையையே வெறித்துப் பார்த்தவாறு நின்றாள்.

'சே! என்ன மனிதர் இவர்? இவருக்கு இவர் நண்பர் முக்கியமென்றால் எனக்கு மட்டும் என் தோழி முக்கியமில்லையா? இவர் ஒவ்வொரு தடவையும் சங்கரை அழைத்து வரும்போது நான் சமைத்துப் போடவில்லையா? இன்று நிலைமையை எடுத்துச் சொன்னால் சங்கர் என்ன தப்பாகவா நினைத்துக் கொள்ளப் போகிறார்? அப்படிப்பட்டவர் இல்லையே சங்கர்! எல்லாம் இவருடைய ஈகோதான். 'தன் நண்பனுக்கு சமைத்து வைக்காமல் அப்படி என்ன இவளுக்கு இவள் தோழி முக்கியம்?' என்ற ஆண்களுக்கே உரிய ஆணவம்தான்.

இவரைப் பொறுத்தவரை பெண்களென்றால் தோழிகள் இருக்கக் கூடாது. அவர்கள் ஆக்கபூர்வமாக எதையும் செய்யமாட்டார்களாம். அவர்களுடைய பேச்சு சினிமா, புடவை போன்று வம்பு பேச்சாகவே இருக்குமாம். 'லலிதாவோட மாமியார் இப்படி, கல்யாணியோட மாமனார் அப்படி' என்று சுற்றிச் சுற்றி ஊர்க் கதையையே பேசிக் கொண்டிருப்பார்களாம்.

நான் என்ன வம்பு பேசுவதற்காப் போகிறேன்? உயிர்த் தோழிக்கு உதவத்தானே போகிறேன் என்கிறேன். அவள் என்ன என்னிடமிருந்து பணங் காசா எதிர்பார்க்கிறாள்? என்னாலான சரீர ஒத்தாசையைத் தானே எதிர்பார்க்கிறாள். அதுவும் அவளுக்கு உடம்பு சரியில்லாததால்தானே எதிர்பார்க்கிறாள்?

— மைதிலி. மனத்தினுள் புலம்பினாள்.

கல்யாண மண்டபத்தில் கீதா இடுப்பு வலியுடன் வேலைகளைச் செய்து கொண்டு அவஸ்தைப்படும் காட்சி கண் முன்னே விரிகிறது.

என்ன செய்வது?

'உள்ளூரில் இருந்தும் உயிர் தோழிக்கு உதவ முடியாமல் போய்விட்டேனே?'—மனம் வெதும்பினாள்.

ஆண்கள் மட்டும் நண்பர்களாக ஆயுள் வரை நீடித்து இருக்க முடிகிறது. ஆனால் பெண்களால் மட்டும் முடிவதில்லையே அது ஏன்?

'சே! இனிமேல் பெண்ணாகவே பிறக்கக் கூடாது. பிறந்தாலும் நட்பு கொள்ளக் கூடாது. நட்புறவு கொண்டாலும் அது இரயில் ஸ்நேகம்போல் இருக்க வேண்டுமே' தவிர ஆத்மார்த்தமான ஸ்நேகமாக இருக்கக் கூடாது' — வெறுப்புடன் சொல்லிக் கொண்டாள் மைதிலி.

'கடவுளே! என்னைப் போல் அசட்டுத்தனமாக உயிர் தோழிகளாகப் பழகிவிட்டு பின்பு அவஸ்தைப்படும் நிலை என் எதிரிக்குக்கூட வரவேண்டாம். சின்ன வயதிலிருந்து தொடங்கிய நட்பு வயதாகிய பின்பும் யாருக்காவது தொடர்கிறது என்றால் அவர்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர்கள்தான்!

கண்களிலிருந்து ஆறாகப் பெருகிய நீரைத் துடைத்தபடி சூட்கேசில் அடுக்கி வைத்த துணிகளை மீண்டும் காட்ரேஜில் வைக்கத் தொடங்கினாள் மைதிலி.

சமையலறைச் சந்தேகங்கள்

பதில்கள் - திருமதி மல்லன்

திருமதி மதானி,
திருநெல்வேலி.

சிக்கன் பொரிக்கும் முறையை விளக்கவும்.

தேவையானவை:

சிக்கன் — 1,
வத்தல் மிளகாய் — 10 கிராம்
மிளகு — 5 கிராம்,
மஞ்சள்பொடி — ஒரு சிட்டிகை,
இலவங்கம் — 2,
இஞ்சி — 20 கிராம்,
பூண்டு — 20 கிராம்,
வறுப்பதற்கு எண்ணெய்.

சிக்கனைச் சிறு துண்டங்களாக்கி, நீரில் சுத்தம்செய்து வைத்துக்கொள்ளவும். மேலே குறிப்பிட்ட வற்றல் மிளகாய், மிளகு, இஞ்சி, பூண்டு ஆகியவற்றை தனித்தனியாக அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். எண்ணெயை அடுப்பில் வைத்துக் கொதித்த பின், இலவங்கம், இஞ்சி, பூண்டின் விழுதுகள், ஆகியவற்றை லேசாக வறுத்து, வற்றல் மிளகாய், மிளகுப் பொடி கலந்து வறுக்கவும். பச்சையான வாசனை போன பிறகு, சிக்கன் துண்டுகளை இந்த மசாலாவுடன் சேர்த்துக் கிளறி சிறிது மஞ்சள் பொடியும் வேண்டிய உப்பையும் போட்டுத் தேவையான தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து மூடிவிட வேண்டும். தண்ணீர் வற்றிய பிறகு மொறுமொறுப்பாகும் வரை வறுக்க வேண்டும்.

குக்கரில் சாம்பார் வைக்கும்போது சில சமயங்களில் 'வெயிட் வால்வ்' வழியாக மசாலா பொங்கி விடுகிறதே? இதை எப்படித் தவிர்க்கலாம்?

குக்கரில் சமைக்கும்போது சில சமயங்களில் அரிசி போன்ற திடப்பொருள்கள் வால்வின் வாயிலே அடைக்கலாம். இதனால் மசாலா வெளியே வந்திருக்கும். இதைத் தவிர்க்கத் தட்டை வைத்து மூடலாம். அது வெயிட் வால்வை அடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஜெயஸ்ரீ சீத்தாராமன், கடலூர்—3.

ஊறுகாய்கள் தயார் செய்து ஜாடியில் வைத்தாலும் பூஞ்சணம் பிடித்துக் கெட்டுப் போவதை தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

காய்கறிகள், பழங்களைப் பாதுகாக்க இரண்டு வழிகள் — ஒன்று கிருமிகளை அழிப்பது. மற்றொன்று அவற்றை வளர விடாமல் தவிர்ப்பது. காய்கறிகளைச் சுற்றி உப்பு நீரால் மூடி வைத்தோ அதிக உப்புக்களின் நடுவே அடைத்து வைத்தோ பாதுகாக்கலாம்.

ஊறுகாய்கள், நறுக்கி வைத்த காய்கள், பழங்களை வினிகர் எனும் அமிலத்தில் பாதுகாப்பது நலம். அதே சமயம் ஊறுகாய்கள் அதிக எண்ணெயில் மூங்கி இருப்பது அவசியம்.

சுகுமாரி, சென்னை—19.

'ரஷ்யன் சலாட்' செய்யும்முறைபற்றி, அதற்குத் தேவையானவை அளவுடன் விளக்கவும்.

ரஷ்யன் சலாட்: தேவையானவை:
உருளைக்கிழங்கு — 100 கிராம்,

பச்சைப் பட்டாணி — 100 கிராம்,
காரட் — 100 கிராம்,
நூல்கோல் (Turnip) — 30 கிராம்,
பீன்ஸ் — 50 கிராம்,
லெட்ரஸ் இலைகள் ('சலாட் இலைகள்') — 1 கொத்து.

'மயோனேசே சாஸ்' தயாரிக்கத் தேவையானவை:

முட்டை கரு — 1,
சலாட் எண்ணெய் — 150 மி. லி.
வினிகார் அமிலம் (வெள்ளை) — 15 மி. லி.
கடுகு, உப்பு, வெள்ளை மிளகு, சர்க்கரை ஆகியவை — சிட்டிகை அளவு.

செய்யும் விதம்:

உருளைக் கிழங்குகளை அரை அங்குல கன சதுர (Cube) துண்டுகளாகவும், காரட், பீன்ஸ், நூல்கோல், ஆகியவற்றை அதேபோல கன சதுரமாக நறுக்கி உப்பு நீரில் கொதிக்க விடவும். பின்னர் நீரை வடிகட்டி விடவும். மயோனேசே சாஸை கீழ்க் காணுமாறு தயாரிக்கவும்.

முட்டைக் கருவை நன்கு கலக்கி, சலாட் எண்ணெயை சொட்டுச் சொட்டாக ஊற்றி நுரை வரும்வரை இடையிடையே கலக்கவும். வேண்டுமானால் வாசனை எசன்ஸ் ஊற்றலாம். அதில் வினிகார் அமிலத்தைச் சேர்த்துக் கலக்கவும். இப்படித் தயாரித்த சாஸில் நறுக்கிய காய்களைச் சேர்த்துக் கலக்க வேண்டும். லெட்ரஸ் இலைகளைத் தட்டில் பரப்பி ...ஸாஸுடன் கலந்து காய்களைக் கொட்டி அதன் மீது வேக வைத்த முட்டை சில்லுகளை அலங்கரித்துச் சலாடை ஆற விடவும்.

மாலதி, ஹைதராபாத்.

இண்டாலியம் வாணலிகளில் எதை வைத்துத் தேய்த்தும் கரி போகவில்லை. இதை வெளுக்க ரசாயனப் பவுடர் இருக்குமா? அல்லது சுலபமான ஒரு முறையை விளக்க முடியுமா?

பவுடர் என்றால், எந்தப் பாத்திரத்தையும் தேய்க்க அதில் தேவையானது ஒன்று: சுத்தம் செய்யும் தன்மை, மற்றது பிசுக்கு, அழுக்குகளை நீக்கிவிடும் சுரசுரப்புத் தன்மை. தரமான வாஷிங் பவுடர்களில் அவை உள்ளன. அதோடு கூட சாம்பல் அல்லது அரப்புத் தூள் கலந்து உபயோகிக்கலாம். பிளாஸ்டிக் வலைகளை வைத்துத் தேய்ப்பது நலம்.

டி. ரஹமத், ஹைதராபாத்.

மைதா மாவினால் சமோசா செய்து, பத்து நிமிடம் ஆகிவிட்டால் மொறு மொறுப்பு போய்விடுகிறது. ஆனால் கடைகளில் எப்போதும் மொறு மொறுப்பாக இருக்கிறதே, காரணம் என்ன?

சமோசா செய்ய மைதா மாவை டால்டா அல்லது எண்ணெய் சேர்த்து அழுந்தப் பிசைந்து ஊற விட வேண்டும். பின்னர் அந்த மாவை மெலிதாக இட வேண்டும். மேலே குறிப்பிட்டவற்றில் சிறிது மாறினாலும் சமோசா நமுப்பது நிச்சயம்.

ஐஸ்கிரீம் எப்படித் தயாரித்தாலும் 'குவாலிடி ஐஸ்கிரீம்' போல வருவதில்லை. அதற்கான சரியான பக்குவம் என்ன?

'குவாலிடி ஐஸ்கிரீம்' போன்றவற்றைச் செய்ய ஐஸ்கிரீம் பொருள்களை நன்றாகக் கடைய வேண்டும். அதே நேரத்தில் அது குளிரவும் வேண்டும். அப்போதுதான் நுரையான கிரீம் கிடைக்கும். ஐஸ்கிரீம் செய்யும் சரியான முறையும் அதற்குத் தேவையான பொருள்களும் கீழே காணவும்.


முட்டை — 6 (1 முழுதாகவும், 5 மஞ்சள் கரு மட்டும்)
பால் — 600 மி. லி.,
சர்க்கரை — 4 டேபிள் ஸ்பூன்,
வெனிலா எசன்ஸ் — சில துளிகள்,
நுரையான கிரீம் — 300 மி. லி.,

முட்டையும் பாலும் சேர்த்துக் கலக்கி, அதனுடன் சர்க்கரையையும் வெனிலா எசன்ஸையும் சேர்த்துக் கெட்டியாகும் வரை கலக்கிக் கொண்டே இருக்கவும்.

முட்டையையும் பாலையும் சேர்த்துக் கலக்கி, அதனுடன் சர்க்கரை, வெனிலா எசன்ஸையும் சேர்த்துக் கெட்டியாகும் வரை கலக்கிக் கொண்டே இருக்கவும். அரை டீஸ்பூன் ஜெலாட்டினுடன் சேர்த்து ஐஸ்கிரீம் கடையும் மெஷினில் (Churner) போட்டுக் கடையவும். பின்னர் குளிர்ந்து 'செட்'டாக வேண்டும்.

(குறிப்பு: ஐஸ்கிரீம் கடையும் சின்ன Churner மெஷின்கள் கடைகளில் கிடைக்கின்றன.)

தொகுப்பு: — **எஸ். ஆர். சங்கர்.**



கடந்த எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற நாகர்கோவில் எஸ். எம். ஆர். வி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி விஜயசாரதாவுக்குத் திருப்பூர் சுடர்மணி நடராஜனின் பரிசு ரூ. 1000 த்தை நடிகை லட்சுமி வழங்கினார்.

குறையுங்கள்

உங்கள் வரிச்சுமையைக்



வருமான வரிச் சட்டம் 80 ஸி பிரிவின் கீழ் 15 ஆண்டு பொது பிராவிடண்ட் நிதியில் (பி.பி.எப்) முதலீடு செய்வதன் மூலம்.

- குறைந்தபட்சம் ரூ. 100 அதிகபட்சம் ரூ. 40,000 (டாக்டர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்ற சுயமாகத் தொழில் செய்வோருக்கு ரூ. 60,000) வரை ஓராண்டில் மொத்தமாகவோ 12 தவணைகளிலோ முதலீடு செய்யலாம்.
- ஆண்டுக்கு 10% வரி இல்லாத வட்டி. (1985-86ம் வருடத்திற்கு)
- கடன் பெறலாம்; ஓரளவு பணம் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.
- நீதிமன்ற 'டிக்ரி'யிலிருந்து பாதுகாப்பு.
- சுயமாகத் தொழில் செய்வோருக்கு ஏற்ற திட்டம்.
- சார்ந்துள்ள மனைவி, குழந்தைகள் பெயரில் செய்யப்படும் முதலீட்டுக்கும் வருமானவரி, சொத்து வரியில் விலக்கு உண்டு.
- எல்லா தலைமை தபால் அலுவலகங்கள், ஸ்டேட் பாங்க் மற்றும் பிற அரசுடைமை பாங்குகளின் அங்கீகரிக்கப்பட்ட கிளைகளில் கணக்குகளைத் தொடங்குங்கள்.
- கணக்கில் உள்ள தொகைக்கு, சொத்துவரியிலிருந்து முழுவிலக்கு உண்டு. 6 மாத 'வைப்பு' நிபந்தனையும் பொருந்தாது.

தேசிய சேமிப்பு நிறுவனம்

12, செமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.

davp-85/440

லூப் உபயோகிக்கும் பெண்களே



'இன்ட்ரா யூடிரின் கான்ட்ராஸெப்டிவ் டிவைஸ் (Intra-uterine Contraceptive Device) – IUCD என்று அழைக்கப்படும் 'லூப்' நாம் நினைத்திருந்தது போல அத்தனை உத்தமமானதல்ல என்று சமீபத்தில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது இளம் பெண்களை 'மலட்டுத்தனத்திற்கு' உட்படுத்துகிறது என்று ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன!

யூனிவர்ஸிடி ஆஃப் வாஷிங்டனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான டாக்டர் ஜேனெட் டாலிங், மற்றும் பாஸ்டனிலுள்ள பெண்கள் மருத்துவமனையின் மருத்துவ நிபுணரான டாக்டர் டேனியல் கிராமர், என்னும் இருவரும் சேர்ந்து IUCD – யின் பாதிப்புக்களைப் பற்றி ஒரு ஃபீல்டு ஸ்டடி செய்தனர். இவர்களது ஆராய்ச்சியின் முடிவுகள் அதிர்ச்சியளிப்பதாய் உள்ளன.

முதலில் IUCD என்பது என்ன என்று பார்ப்போம். பிளாஸ்டிக், அல்லது தாமிரத்தினால் தயாரிக்கப்பட்ட சிறிய நெளிவடிவான இது கருப்பையின் வாய்ப்பகுதியில் உட்புறம் நுழைக்கப்படுகிறது. இது அங்கு இருந்து கொண்டு, கருவுறும் அணுக்கள் கருப்பையின் உட்சுவரில் போய் ஒட்டிக் கொள்ளாதவாறு தடுக்கிறது. இதன் மூலம் கருவுறுவதைத் தடுக்கிறது. குடும்பக்கட்டுப்பாட்டிற்கு உதவுகிறது.

இதன் அடிப்படைக் கொள்கையில் ஏதும் தவறு இல்லைதான். ஆனாலும் நம் மனித உடம்பு இருக்கிறதே. அது விசித்திரமானது. இயற்கையாய் இருப்பதைத் தவிர அனாவசியமாய் எந்த வெளிப்பொருள் உட்புகுந்தாலும் நம் உடல் உடனே அதை எதிர்க்கிறது. அதை எப்படியாவது வெளியேற்ற முயற்சிக்கிறது.

இதே ரீதியில் நமது கருப்பை இந்த லூப்பை வெளியேற்றச் செய்யும் முயற்சியால், கருப்பையே சிறிது சிறிதாகச் சேதமுறத் தொடங்குகிறது. கொஞ்ச நாளில் இந்தச் சேதம் எவ்வளவு அதிகமாகிறது என்றால், அந்தக் கருப்பை மீண்டும் கருவைத் தரிக்கும் சக்தியை முற்றிலும் இழந்துவிட, அந்தப் பெண் கருவுறும் தன்மையையே இழந்து மலடியாகிவிடுகிறாள் என இந்த ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

அதிலும் தாமிர லூப்களைவிட பிளாஸ்டிக் லூப்கள் அதிக விரைவில் சேதம் விளைவிப்பதாய்க் கண்டுபிடித்துள்ளார்கள். லூப்பை உபயோகிக்கும் பெண்கள் மலடாவதற்கான சாத்தியம், மற்ற பெண்களைவிட இருமடங்கு அதிகம் எனக் கூறப்படுகிறது.

எனவே இந்த ஆராய்ச்சியாளர்கள் புதிதாகத் திருமணமான இளம் பெண்களை, மகப்பேற்றைக் கொஞ்சம் தள்ளிப் போடுவதற்காக லூப் உபயோகிக்க வேண்டாம் என்று எச்சரிக்கிறார்கள். கொஞ்ச நாள் திருமண வாழ்வை ஜாலியாக அனுபவித்துவிட்டு, ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குப் பிறகு பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கும் இளம் பெண்களே! தயவு செய்து லூப் உபயோகிக்க வேண்டாம்! அது உங்களை ஒருவேளை மீண்டும் கருவுறவே இயலாதவராய்ச் செய்துவிடக் கூடும்!

இதேபோல் ஒரு குழந்தை இருந்து, இன்னொரு குழந்தைக்கு நடுவே இடைவெளி வேண்டும் என்று நினைப்பவர்களும் 'லூப்' உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். வேறு எத்தனையோ கருத்தடை முறைகள் உள்ளன அல்லவா? அவற்றில் ஏதாவது ஒரு முறையை அனுசரிக்கலாம்! எல்லாவற்றையும் விட வசதியானதும், எளிதும், உடலுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காத இயற்கை முறை, Safety Period என்னும் பாதுகாப்பான நாட்கள்தாம்.

28 நாட்கள் கொண்ட இயற்கையான மாதவிலக்குச் சக்கரத்தின் முதல் ஆறு நாட்களும், கடைசி ஆறு நாட்களும் உடல் உறவு கொள்வதால் கருத்தரிக்க வாய்ப்பு இல்லை என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். எனவே எல்லாக் கருத்தடைச் சாதனங்களையும் விட, இந்த இயற்கை முறை சாலச் சிறந்தது.

வி. கீதா



இதற்கு என்ன செய்வது?

டி. ஆர். ரமேஷ்

என். ராஜாமணி, பெரம்பலூர்.

1985 ல் நடந்த +2 தேர்வில் ஆங்கிலம் முதல் தாள் நடந்து கொண்டிருந்த சமயம். என் பையனின் அருகில் இருந்த இன்னொரு பையன் என் மகனின் மெய்ன் பேப்பரைப் பிடுங்கிவிட்டானும். இதை அவனிடமிருந்து உடன் என் பையன் பேப்பரை வாங்குகின்ற சமயத்தில் ''பறக்கும் படை'' வந்து இருவரையும் உடன் கூட்டிக் கொண்டு இருவர் பேப்பரின் முதல் தாளிலும் 'Exchange of Papers at 12.00" என்று எழுதி விட்டார்கள். அதன் பிறகு என் மகன் தொடர்ந்து தேர்வுக்குச் சென்றான். ஆனால் தேர்வின் ரிசல்ட் வரும் போது என் மகன் மார்க் ஷீட் வரவில்லை. மற்றும் டி. சி. கேட்டதற்கு. ''Mal Practice'' என்றும், இதை டி. ஈ. ஓ. கையெழுத்து இல்லாமல் நாங்கள் கொடுக்க மாட்டோம் என்றும் பள்ளியில் கூறிவிட்டார்கள்.

நன்றாகப் படித்த என் மகன் வாழ்வு இப்படியிருக்க என் பையனின் பேப்பரைப் பிடுங்கியவன் எப்படியோ 10 வது பாஸ் செய்து, ஒரிஜினலோ அல்லது டூப்ளிகேட்டோ வைத்துக்கொண்டு பாலிடெக்னிக்கில் சேர்ந்துவிட்டான்.

இப்போது என் பையனுக்கு எப்படி டி. சி. வாங்குவது?

தங்களுடைய பையனுக்கு டி. ஈ. ஓ. விடமிருந்து Final Order வந்ததா என்று தெரியவில்லை. அப்படி வந்திருக்குமானால் அதை வைத்துக் கொண்டு முறையீடு செய்யலாம். தங்களுடைய பையனின் மீது எந்தத் தவறும் இல்லை என சாட்சிகளின் மூலம் நிரூபிக்க முடியுமானால், பைனல் ஆர்டரை எதிர்த்து, டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு முறையீடு செய்யலாம்.

அங்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையானால் அரசுக்கு (செயலாளர், கல்வித் துறை) மேல்முறையீடு செய்யலாம். இவ்விரண்டிலும் பலன் கிட்டவில்லையென்றால் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு போடலாம்.

இவை அனைத்தும் டி. ஈ. ஓ. விடமிருந்து தங்களுடைய பையனுக்குத் தீர்மானமான பதில் வந்திருந்தது என்றால்தான். அப்படி இல்லையென்றால் டி. ஈ. ஓ. விடமே இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரை என்ன முடிவு என்பதைத் தீர்மானித்து Final Order தருமாறு கேளுங்கள்.

ஜெகதீசன் சாந்தி, மதுரை.

எனது வகையில் என் தகப்பனார் அவர்கள் சுய சம்பாத்தியத்தில் பலவகையான சொத்துக்கள் (நிலம்—வீடு, கார்) உள்ளது. ஆனால் எனது தந்தையார் திடீர் என்று மரணம் அடைந்து விட்டார். என் தந்தையார் இறந்த சில மாதங்களில் என் தாயாரும் இறந்து விட்டார்கள்.

என் உடன்பிறந்தவர்கள் ஆண்கள் 5 பேர் என்னையும் சேர்த்துப் பெண்கள் 5 பேர் ஆக மொத்தம் 10 நபர்கள். (என் தந்தை 1969 ல் இறந்தார்) நாங்கள் பெண்கள் எல்லோரும் சேர்ந்து எங்கள் தந்தையின் சொத்தில் சட்டப்படி கொடுக்க வேண்டுகிறோம்.

பல முறைகள் கேட்டும் இதற்கு எங்கள் அண்ணன்மார்கள் ஒத்துப் போகவில்லை. எங்களுக்குச் சொத்து கிடைக்குமா? என்ன செய்ய வேண்டும்?

இப்படிப் பல கடிதங்கள் பெண்களுக்குச் சொத்துரிமை பற்றிக் கேட்டு வருகின்றன. 1956 ல் இயற்றப்பட்ட சட்டப்படி பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் மகனுக்குச் சமமாக உரிமையுண்டு. தந்தை 1956 க்குப் பின் இறந்திருந்தால் இந்தச் சட்டம் பெண்களைப் பொறுத்தவரை அமலுக்கு வரும். எனவே ஐயமுள்ள பெண்கள் உள்ளூர் வழக்கறிஞரைக் கலந்தாலோசித்து சமரசமாகவோ, முடியவில்லையெனில் நீதிமன்றத்

தில் வழக்குத் தொடர்ந்தோ சட்டப்படி தங்கள் பங்கைப் பெறலாம்.

ஜெ. கலா, சென்னை — 1.

எனது அம்மாவின் தந்தை 1975 ஆம் வருடம் இறந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகளும், என்னுடைய தாயும் ஆவார்கள். தாத்தாவுக்கு கிராமத்தில் நிலமும் வீடும் உள்ளன.. தாத்தாவின் சொத்தை மாமா விற்பதாகக் கேள்வி. என்னுடைய அம்மாவும் 1981 ஆம் வருடம் இறந்துவிட்டார். அம்மாவின் பாகத்தைப் பெற முடியுமா?

முடியும். சொத்து எந்த ஊரில் உள்ளதோ அந்த ஊர் சப் கோர்ட்டில் உங்களுடைய மாமாக்களை எதிர்பார்ட்டியாக வைத்து வழக்குத் தொடரலாம்.

உமார்த்தி, கோவை.

மருத்துவமனைக்குப் பக்கத்தில், எதிரில், லவுட்ஸ்பீக்கர்வைத்துநோயாளிக்குஇடைஞ்சல் செய்பவரைத் தடுக்கத் தனி நபரோ, அல்லது குழுவோ சட்டம் மூலம் ஏதும் நடவடிக்கை எடுக்க முடியுமா?

அப்படி ஒலி பெருக்கியை வைத்து அதன் மூலம் மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்பவர்களைப் பற்றிக் காவல்துறைக்குப் புகார் செய்ய வேண்டும். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இப்படி பொதுநலத்திற்கு ஊறு விளைவிப்பவர்களின் மேல் மேலைநாடுகளில் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் நஷ்டஈடு கோரி வழக்கு மன்றங்களில் வழக்கு தொடருகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் இன்னும் அந்த அளவிற்கு மக்களின் விழிப்புணர்வு வளரவில்லை.

எனக்குத் திருமணமாகி 6 ஆண்டுகள் ஆகின்றன. எனக்கு இரு பெண் குழந்தைகள்இருக்கின்றனர்.என் கணவர் அவருடைய தாயார்பேச்சைக்கேட்டுக்கொண்டுஎன்னை இந்த 6 வருட காலத்தில் மூன்றரை வருட காலம் என் பெற்றோர் வீட்டிற்கு விரட்டிவிட்டிருக்கிறார். அவரோடு சேர்ந்திருக்கும் காலத்தில், என்னை செய்த கொடுமைகளுக்கு ஓர் அளவில்லை. இப்பொழுது நான் என் பெற்றோர் வீட்டிற்கு வந்து ஒரு வருடமாகிறது. எனவே என் கணவரிடம் இருந்து ஜீவனாம்சம் எனக்கும் என் குழந்தைகளுக்கும் வாங்க வேண்டும். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

நான் ஏதாவது ஒரு வேலைக்குச் செல்ல நினைக்கிறேன். நான் வேலை விஷயமாக எந்த அலுவலகத்தில் தொடர்பு கொள்ள வேண்டும்?

என் துணிகள், குழந்தைகளின் துணிகள், என் பெற்றோர் வீட்டில் எனக்குச் செய்த சீர்வரிசைகள் எல்லாம் அங்கேதான் என் கணவர் வீட்டில் இருக்கிறது. இவைகளை எந்த முறையில் கேட்டு அவரிடம் வாங்கலாம்?

நீங்கள் திருமணம்செய்துகொண்ட ஊர், அல்லது கடைசியாகச் சேர்ந்து வாழ்ந்த ஊர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி வழக்குத் தொடரலாம். நீங்கள் வேலைக்குச் செல்லசான்றிதழ்கள் அவசியம். அவற்றைத் திரும்பப்பெற வக்கீல் நோட்டீஸை அனுப்பலாம். சீர்வரிசை, நகைகளைத் திரும்பப் பெற தனியாக 'சூட்' போட வேண்டும்.

கோகுலம்

இதழுக்கு இதழ் விற்பனை அதிகரிக்கிறது!
மார்ச் இதழ் இப்போது விற்பனையாகிறது!



* 16 பக்க வண்ணப்படக் கதை
— கடலைக் கடைந்த கதை

* குன்றக்குடி அடிகளார்
— என் குழந்தைப் பருவம்

* சிறுவர் தேர்ந்தெடுத்த திரைப்படம்.





யார் ஜாடை

'பியூலா டீச்சர் இருக்காங்களா? வீட்டி லேருந்து ஆள் வந்திருக்கு.'

பியூன் மாணிக்கத்தின் குரல், ஆசிரியர்கள் அறையின் சலசலப்பை நிறுத்தியது. 'இல்லையே! அவங்க க்ளாஸுக்குப் போயிருக்காங்க' என்ற மீரா,

'பாவம், பியூலா! காலையில் அவள் குழந்தையைப் பார்க்கும் ஆயா வரவில்லையாம். பக்கத்து வீட்டுலே விட்டுட்டு வந்தாளாம். ஸ்கூலுக்குக் கூட லேட்டாத்தான் வந்தாள். நான் போய் யாரு வந்திருக்காங்க'ன்னு பார்த்துட்டு வரேன்' என்று பொதுவாகக் கூறிவிட்டு, விஸிட்டர்ஸ் ஹாலை நோக்கிச் சென்றாள். ஆசிரியைகளின் பேச்சு, அவரவர் குழந்தைகளை வளர்க்கப்பட்ட பாட்டை விமர்சிக்க ஆரம்பித்தது. விரைவிலேயே விஸிட்டர்ஸ் ரூமுக்குச் சென்று திரும்பிய மீராவைக் கண்டதும், எல்லோர் முகமும் மலர்ந்தது. அவள் கையில், துணிச் சுருளுக்குள் அழகான மழலை, கருவண்டு மாதிரி கண்கள்.

'ஐயோ, பாவம்! என்ன மீரா! குழந்தையே அம்மாவைத் தேடிட்டு வந்திட்டுதா? ஆவலுடன் கையை நீட்டினாள் மாதவி டீச்சர். எல்லா ஆசிரியைகளும் குழந்தையைப் பார்க்கும் ஆவலில் குழந்தையைச் சூழ்ந்தனர்.

'டீச்சர்! தலைமுடியைப் பாருங்களேன்! சுருள் சுருளா இருக்கு இல்லே! பியூலா மாதிரியே சுருட்டை முடி.

குழந்தையின் தலை மயிரை வாஞ்சையுடன் வருடினாள், மரகதம்.

'நல்ல கலர்! நம்ம பியூலா கூட இவ்வளவு நிறம் இல்லை' — இது பாமா டீச்சரின் விமர்சனம். பியூலாவை இறக்கியதில் ஒரு பெருமை.

'ஏன், அவங்க மிஸ்டர் வீட்டுலே எல்லோரும் நல்ல நிறம் தெரியுமா?' — இது விமலா.

'ஏய்...! குட்டிப் பையா! சிரிப்பைப் பாரு! அப்படியே அம்மாதான்' — பாரிஜாதம் டீச்சர்.

'கடவுள் எப்படித்தான் மறக்காமல் உருவாக்குகிறாரோ! கண்ணு, மூக்கு எல்லாம் அப்படியே பியூலாதான்!' — இது ஞானம் டீச்சர்.

'எப்படியோ, அவளுக்குத் தன் நாத்தனாரைக் கொண்டு இருக்கக் கூடாதே, என்று தான் கவலை. நல்லவேளை, குழந்தை அப்படியே பியூலாதான்.' — சீனியர் மோஸ்ட் சாவித்திரி.

புதிய முகங்களையும் பேச்சையும் உணர்ந்த குழந்தை சிணுங்க ஆரம்பித்தது. உடனே, மீரா, 'டொட்ட டொய்ங்' என்று பாடிக் கொண்டே குழந்தையை மேஜை மீது நிறுத்தினாள்.

"ஐயையே! பெண் குழந்தை!" கூவினர் எல்லோரும்.

"ஏன் மீரா! பியூலாவுக்குப் பையன் தானே பிறந்திருக்கு?" — கீச்சுக் குரலில் கத்தினாள் ஷீலா.

"யாரு இல்லன்னு சொன்னது? பியூலாவின் மிஸ்டர்தான் வந்திருந்தாரு. ஆயா வந்துவிட்டாள் என்று சொல்லத்தான் வந்தாராம். அதுக்குள்ளே நம்ம ஹெட்மாஸ்டரைப் பார்க்க ஒரு ஸ்டூடண்டோட அம்மா வந்தாங்க. அவங்க கையிலே இருந்த இந்தக் குட்டி என்னைப் பார்த்துச் சிரிச்சா. தூக்கிட்டு வந்தேன். நான் வாயைத் திறக்கறதுக்குள்ளே, நீங்களே முடிவு செஞ்சுட்டீங்க. நானும் வேடிக்கை பார்த்தேன். எங்கே, இப்போ சொல்லுங்க, பார்ப்போம், இந்தக் குழந்தை யார் ஜாடை?" என்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள், மீரா.

எல்லா ஆசிரியைகள் முகத்திலும் அசடு வழிந்தது.

கோகிலா ராமன்

கோல ஆராய்ச்சிக்குப்

'தமிழர் பண்பாட்டில் கோலங்கள்' எனும் தலைப்பில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார் பாத்திமா கல்லூரி தமிழ்ப் பேராசிரியை திருமதி சரோஜா. கோலங்களைப் பற்றிய தகவல்களைத்திரட்ட அவர் சென்றபோது ஏற்பட்ட சில சுவையான அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்: —



பெண்மையின் மங்கலங்களுள் ஒன்றான கோலம் குறித்து நான் ஆராய்ச்சி செய்கிறேன். கோலம் குறித்த செய்திகளைத் திரட்டுவதற்குள் நாய்பட்ட பாடாகிவிட்டது.

ஓர் அந்தணர் வீட்டில்...

நேரடியாகத் தகவல்களைத் திரட்ட பாத்திமாக் கல்லூரிக்கு மிக அருகில் உள்ள ரயிலார் நகருக்கு, அதிகாலை 5 மணி போலச் சென்றேன். அங்கு பல வீடுகள் இன்னும் திறக்கப்படவேயில்லை; சில வீடுகளிலிருந்து காப்பியின் மணம் காற்றில் கலந்து வந்தது— ஆனால்? பசுஞ்சாணத்தின் தூய மணத்தை வாசலில் நுகர முடியவில்லை. நாகரிகம்(!) மக்களின் பண்பாட்டை ,எந்த அளவில் மாற்றியிருக்கிறது என எண்ணியவாறு இன்னும் சிறிது தொலைவு நடந்தேன்.

வடக்குமுகமாகத் தொடங்கிக் கிழக்கு நோக்கி நின்று கோலமிட்ட ஒரு மாமி (அந்தணர்)யின் அருகில் சென்று நின்றேன். என்னை . நிமிர்ந்து நோக்கிய அவர்கள் பார்வை என்னைச் சுட்டெரித்தது. 'காலங்காத்தால உன் முகத்தில் விழிப்பதா?' கேட்காமல் கேட்டது அப்பார்வை. எப்படிப் பேச்சைத் தொடங்குவது என நான் காலம் பார்த்துக் கொண்டிருக்கையில் — ஒரு நாடகமே நடந்து முடிந்தது.

மாமி: ''கோலம் போடுவது நோக்கு வேடிக்கையாடிம்மா ...?''

நான்: (மிக மென்மையான குரலில்) நான் பாத்திமா காலேஜில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

மாமி: எங்க வேலை பார்த்தா நேக்கென்ன? வேலை பார்த்து வாங்கிய பணத்தை நேக்கா தரப் போறேள்? (இது சத்தமாக— தொடர்வது மெதுவாக) — குளிச்சாச்சோ என்னவோ, மடியாயிருக்கேன். காலங்காத்தால இப்படி வந்து நிக்கணுமா?

நான்: மாமி! நான் குளிச்சுப் பூஜை கூட முடிஞ்சாச்சு. மங்கிக்கிட்டு வர்ற கோலத்துலே 'ரிசர்ச்' செய்து அதனோட சிறந்த சில மரபுகளையெல்லாம் அழியாத கோலமாக்கப் போறேன். நீங்க எனக்குச் சில தகவல்கள் சொல்வேளா?

மாமி: ரிசர்ச் செய்யறதெல்லாம் சரிதான். ஆனால் அதுக்கு நேரம் காலம் வேண்டாமா? காலங்காத்தால வந்து நிக்கணுமா? இன்னும் அடுப்புக் கூடப் பத்த வெச்ச பாடில்லே...


இப்படிக் கூறியவாறு என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் போகும்போது படியில் மேலும் 2 இழைகளை இழுத்துவிட்டு உள்ளே சென்று மறைந்தார் — நாகரிகமான கதவடைப்பு. வேண்டாத விருந்தாளியாக நின்றாலும் வேண்டிய செய்திகளை அந்த மாமி கூறாமலேயே கிரகித்துக் கொண்டது மனம்.

1. கோலமிட்ட பின்னரே அடுப்பைப் பற்ற வைப்பார்கள்.
2. எதற்கு நேரமிருந்தாலும் இல்லாவிட்

டாலும் கோலமிடுவதில் நேரம் செலவழிப்பதைப் பற்றிக் கவலை கொள்ள மாட்டார்கள்.

3. படியில் கோலமிடுவது சம்பிரதாயம்.
4. இரட்டை இழைகளை போட வேண்டும்.

'அதிகாலையில் சென்றால்தானே வம்பு!' என நினைந்து பிற்பகல் 2, 3, மணி சுமாருக்கு வீடு வீடாக அலையத் தொடங்கினேன். பெரும்பாலும் அந்தணர்களே விருப்பத்துடன் என் வினு நிரலை நிறைக்க உதவினர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.



போனேன்

நாய்கள் ஜாக்கிரதை....

நான் கோலம் பற்றிச் சில செய்திகளைச் சொல்வீங்களா?'' என்று கேட்டு முடிப்பதற்குள், 'படா'ரென்ற ஒலியுடன் கதவு அடைக்கப்பட்டது. அடைக்கப்பட்ட கதவைத் திக்பிரமையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். எந்தப் பிச்சைக்காரியை விரட்டிய பாவமோ? தொடக்கத்தில் இந்தப் 'போ, போ'க்களையெல்லாம் கேட்டுத் துடித்துப் போன உள்ளம் பின்னால் கொஞ்சங்கூடக் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. ஏறத்தாழ ஓராண்டுக் காலம் வெயிலையெல்லாம் தலையில் தாங்கிக் கொண்டு பிற்பகல் 3 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மதுரை வீதிகளை எல்லாம் வலம்வரத் தொடங்கினேன்.

சில வீடுகளில் கட்டப்பட்டுக் கிடக்கும் உறுமும் நாய்கள்... சில வீடுகளில் (செல்லமாக!)ப் பாயும் நாய்கள்... இவற்றையெல்லாம் கூடச் சமாளிக்க முடிந்தது. ஒருநாள்...! கோ. சாலைப்புதூர் திருவள்ளுவர் தெருவில் ('நாய்கள் ஜாக்கிரதை' என்ற பலகை இருந்ததால்) மிக வேகமாக நடந்தோம். ஒன்றல்ல... இரண்டல்ல... ஒன்பது நாய்கள் — கலித்தொகை முல்லைக் கலி வர்ணிக்கும் காளைகள் போல வெள்ளை, மரவண்ணம், கறுப்பு, கறுப்பு + வெள்ளை, சாம்பல் நிறமெனப் பலவகை நிறத்தன — எங்களை நோக்கிக் குரைத்துக் கொண்டே ஓடிவந்தன. ''ஐயோ, செத்தேனே!'' என்று என் மாணவி அலற, நானும் பயந்து அப்படியே நின்றுவிட்டேன். சிலர் ஓடிவந்து, ''ஷ்ஷ்... டைகர்! இது நம்ப ஆளுங்கதான்'' என்று கூறி நாய்களை விரட்டினர். சிலர், ''செல்லமா பாயும் — கடிக்காதும்மா, சும்மா வாங்க...'' என்றனர். உயிரே போனபின் கடித்தால்தான் என்ன, கடிக்காவிட்டால்தான் என்ன?

அதிலிருந்து ''உள்ளே நாயிருக்கா?'' எனும் மந்திரத்தை ஒவ்வொரு வீட்டிலும் ஓத வேண்டியிருந்தது.

அண்ணா நகரிலிருக்கும் என் கல்லூரித் தோழி மீனாவைக் கண்டு செய்திகள் திரட்ட எண்ணினேன். வழக்கம்போல 'நாயிருக்கா?' எனும் மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தபோது,

''இத்தனை நாளும் நீ பாத்திமா காலேஜிலதான் வேலை பார்த்துக்கிட்டிருக்கேன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். என்னைலருந்து கார்ப்பரேஷன்ல வேலை பார்க்கற'' என்று குறும்பாகக் கேட்டாள்.

சுத்துது சனியன்... சுத்தது சனியன்:...

விழா நாட்களில்தகவலாளிகளைச்சென்று காண்பதில் பயனில்லைதான். சிலர் கோவிலுக்குப் போயிருப்பார்கள். சிலர் அப்போதுதான் கிளம்புவார்கள். எனினும் ஆற்றில் அழகர் இறங்கும் அந்த விழா நாட்களை வீணாக்க மனமின்றி அருகிலிருக்கும் ஒரு பிள்ளைமார் வீட்டிற்குப் போனோம்.

நான் வினாக்கள் கேட்க, அவர் பதில் கூற, என் மாணவி வினா நிரலை நிரப்பி நிறைத்துக் கொண்டேயிருந்தாள். அருகிலிருந்த கோவில்மணி ஒலிக்கவும், ''செத்த இருங்க. சாமிக்கு மாலை போட்டுட்டு வர்றேன்'' என்று கூறிவிட்டுப் போனவர் ½ மணி நேரம் (அவருடைய அகராதியில் 'இந்தால' என்பதற்கு ½ மணி நேரம் என்பது பொருள் போலிருக்கிறது.) கழித்து, ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தார். அந்தக். குழந்தையோ ஒலிபெருக்கியின் 'அசத்து, பிசத்து' பாட்டுக்கு எதிரொலியாக இரட்டை நாயனம் வாசித்தது.

''அடடா, ரொம்ப நேரம் காக்கப் போட்டுட்டேனா?'' என்று கூறிக் கொண்டே அந்த அம்மாள் உட்காரவும் குழந்தை இன்னும் கட்டைக் குரலில் கத்தியது. நான் அதற்கும் மேலே கத்தி — இல்லை, கதறி... — அலறிக் கேள்விகளைக் கேட்டேன். ஊஹூம்! எந்த ஒலியிலும் தெளிவில்லை. அந்த அம்மாள் தன் குழந்தையை என் மாணவியிடம் தள்ளி, ''இந்தா பாப்பா! சனியன் (யார் சனியன்? 'பாப்பா' என்று அழைக்கப்பட்ட என் மாணவியா அல்லது அந்தக் குழந்தையா?) பிறச்

சத்தம் கேட்க விடாமக் கத்துது. செத்த அங்கிட்டுத் தூக்கிட்டுப் போ'' என்று கூறி விட்டு, நான் பயந்தது போலவே ஆத்துல அழகர் இறங்குவது, சித்திரைத் திருவிழா வின்போது நடக்கிற எல்லா வைபவங்களை யும் தப்பும் தவறுமாகக் கூறி விட்டுத்தான் என் கேள்விக்கு வந்தார். அவருடைய குழந் தைக்கு வேறு 'புது ஆயா' கிடைத்து விட் டாளே! திருமணமாவதற்கு முன் தாயாகிய என் மாணவி அக்குழந்தையுடன் படும் பாட்டைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே, விறு நிரலை நிறைக்கும் வேலை யையும் சேர்த்து நானே செய்தேன்.

செய்வினையும் கற்றுக் கொள்ள வேண்டும் —

சாமியார் லைனில் ஒரு கோனார் வீட்டுப் பெண்ணிடம் தகவல்கள் கேட்டுக் கொண் டிருந்தேன். ''குழாயில தண்ணி வருது'' என்ற குரல் கேட்டதும், ''அம்மா! தண்ணி விட்ருவும், மீதிய நீயே சொல்லு'னு தன் தாயார்க்குக் கூறிவிட்டுப் பானைகளை இடுக்கிக் கொண்டு பறந்துவிட்டார். 'அமு தத்தை ஊற்றினுல் கூடத் தண்ணீர்தான் வேண்டும் என்று கேட்குமளவுக்கு நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்!' என்னையே நான் தேற்றிக் கொண்டு படுத்திருந்த அந்த அம்மாளைப் பார்த்தேன். அவர்கள் என்னை 'ஒரு மாதிரி' யாகப் பார்த்தவாறு எழுந்து உட்கார்ந்தார்.

கொல்லுவது போன்ற அந்தப் பார்வை எனக்கு அச்சத்தைக் கொடுத்தது. என்னுடன் துணைக்கு வந்திருந்த என் மாணவி என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள். எனக்குப் பின்னுல் ஒரு அலமாரி; அதன் கதவின் மேல் சங்கும் சக்கரமும் ஓவியமாகத் தீட்டப்பட் டிருந்தன. அல்மேராவையும் என்னையும் மாறி மாறிப் பார்க்கிறுர் அந்த அம்மாள் — ஆனுல் ஏதும் பேசவில்லை.

வேறு வழியின்றி நானே கேள்வியைக் கேட்கிறேன் — ''கோலம் போடும்போது ஏதேனும் முறைகளைக் கையாள்வீர்களா?'' ''ம்'' என்ற உறுமலுடன் தொடர்கிறுர். ''முறையாவது ஒண்ணுவது? இந்தக் காலத் துல யார் அதையெல்லாம் கேட்கிறு? விதம் விதமாக் கோலம் போடறுகளே தவிர (தவிர), மொப்பனையா (முறைப்படி) எவ போட்று? நீ கூட சாமி பீரோனுக்கு முதுகைக் காட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்க... ஏதாச்சும் சொல்ல முடியுமா?'' —

கேட்டாரே ஒரு கேள்வி! ஒரு ஓடை நதியா கிறது போல ஒரு அல்மேரா பூஜையறை யானது எனக்கெப்படித் தெரியும்? உட்கார்ந் திருந்த கூடைச் சேரை வேகமாக நகர்த்திக் கொள்கிறேன். ''முறையாருக்கா'னு கேட் டியே! இது நல்ல கேளுவி... நாங்கள்லாம் வீட்ட நோக்கித்தான் சாணியைத் தெளிப் போம்...''

'Point' என்று என் மனம் குதிக்கிறது — ''ஏன்?''

''வீட்டை நோக்கித் தெளிச்சா வாசக் கரைல குந்திக்கிட்டிருக்கிற சீதேவி 'உள்ளே வா'னு சொல்றதா அர்த்தம். (அதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா, தொடர்கிறுர்) இப்போல்லாம் சாமிய நம்பறதில்லே... அதனுலதான் பேயைக் கும்பிட்டுக்கிட்டுச் செய்வினை வெச்சுப்புடறுனுக. என் சொந்தக் காரனே எனக்குச் செய்வினை வச்சுப்புட் டான்...''

''எப்படி?''

''ஒரு வேலைக்கார முண்டம் அவன் வீட்ல யும், என் வீட்லயும் வேலை பார்த்துக்கிட்டி ருந்தா. அவகிட்ட தலைமுடி, முட்டை, எலுமிச் சம்பழத்தைக் கொடுத்தான். அத என் வீட்டு மாட்டுக் கொட்டகைல வச்சுப் போட்டா, அந்த நாசமாப் போற மூதி. என் காலு முறிச் சிப்பிட்டான்.''

''வைத்தாலே கால் போயிடுமா?'' — இது என் மாணவி.

''அட ஒண்ணும் தெரியாமத்திரியுது எழவு! அது தெரியாம இந்தக் குருட்டுமடம் அதைத் தாண்டிப்பிட்டேன். அதுலருந்து பிடிச்சான் சனி. என் காலைக் கொண்டு போயிட் டான்...''

''வெட்டி எடுத்துக்கிட்டுப் போயிட் டானு?'' கேட்டாள் அப்பாவியாக.

''நீ வேற! எட வாரத்துல கொடவாரம். தடுக்கித்தான் விழுந்தேன். நரம்பு விட்டுப் போச்சாம். அதிலிருந்து மொடமா இங்கனயே கெடக்கேன். எம்மா தாயி! உனக்கு இந்தச் செய்வினை மாந்திரீகமெல் லாம் தெரியுமா?''

புள்ளி வைத்துக் கோலமிடுவது மிகவும் கடி னம். அவ்வாறு குனிந்து நிமிர்ந்து கோலமிடுவது உடலுக்கு மிகவும் நல்லது. அதுமட்டுமின்றி அழ காகத் தவறின்றிக் கோலமிடும் பெண்ணானவள், தன் வாழ்வில் ஏற்படும் சிக்கலான பிரச்னைகளை யும் மன உறுதியுடன் தீர்த்துக் கொள்வாள்.

வீட்டினுள் நல்லது கெட்டது நடந்திருப்பதைக் கட்டியம் கூறும் சங்கேதக் குறி கோலம் என்பதால் அதனைச் செய்தி அறிவிக்கும் 'பிட் நோட்மஸ்' (Bit Notice) எனலாம். பெண்கள் பருவம் எய்தி னுலும், குழந்தை பிறந்தாலும், அது இரவு நேரமானு லும் அந்நேரத்தில் கோலமிடக் கூடாதென்ற சம்பிரதாயத்தையும் மீறிக் கோலமிடுகின்றனர். தஞ்சாவூர்ப் பகுதியிலுள்ள ஐயரினத்தார் இக் கோலத்தைச் 'சித்தடிக் கோலம்' என்பர்.

காட்பரிஸ்

போர்ன்விடா



சுறு சுறுப்புப் பானம்!



"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே நல்மான சுவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.

என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி."

போர்ன்விடாவின் இனிமைக்காலம். போர்ன்விடா அளித்தவரை பாசமனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்.



இப்போது ... ரூ. 2/- ஒவ்வொரு ... பேக்கிலும்.

OBM/4688/TAM



“பெற்று, பேணி வளர்த்த பெண்ணுக்கு கல்யாணமென்றால் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சிதானே?

எங்கள் பெண்ணிற்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது.

"கல்யாணம் செய்துப் பார்" என்று பெரியவர்கள் சொல்வது உண்மைதான்!

எவ்வளவு அலைச்சல், எவ்வளவு ஏற்பாடுகள்!

வசதியான கல்யாண மண்டபத்தைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, கல்யாணப் பத்திரிகைகள் அனுப்புவது வரை ஆயிரம் வேலைகள்!

ஸ்பெஷலாக நெய்த கூறைப்புடவை, எங்கள் மகளே டிசைன் செய்த தங்க நகைகள், பாத்திரம் பண்டங்கள் என்று நீண்ட பட்டியலே போட்டு வாங்கினோம்.

இதையெல்லாம் பொறுக்கியெடுக்க கடை கடையாக ஏறி அலைந்தாலும், எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கும்போது எதை வாங்கலாம் என்பதில் எங்களுக்கு ஒரு சந்தேகமும் இல்லை.

வேறென்ன, சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்கள்தான்!

அந்த காலத்தில் கிடைத்த பாத்திரங்களைப்போலவே நல்ல தரமானவை. கரும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வாழ்நாள் முழுவதும் பளபளப்பு குறையாமல் உழைக்கக்கூடியவை.

வேறென்ன வேண்டும் எங்கள் மகளுக்கு!”

சேலம் எவர்சில்வரினால் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் எல்லா பிரபலமான பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

சேலம் உருக்காலை

Sista's-SSP. 366. 85 TM B

கேரளப் பகுதியில் நவராத்திரி சமயம் வெளிச்சப்பாடு எனும் விழா நடைபெறும். காளி தேவியின் படத்தைக் கோலமாக இட்டு, வழிவழியாகப் பூசாரியாக இருக்கும் வம்சத்தில் வந்த ஒருவருக்கு ஆவேசம் வந்து அக்காளியை வரைந்த படத்திலிருந்து கோலமாவை அள்ளி எடுத்துத் தன் முன்னால் வரும் பக்தரிடம் தந்து அவருக்கு நடக்கவிருக்கும் பலன்களை எல்லாம் கூறுகிறார்; அது அப்படியே நடப்பதாகவும் நம்புகின்றனர். (இது சங்க காலத்தில் காணப்படும் வேலன் வெறியாட்டோடு ஒப்புநோக்குதற்குரியது.) இதனால் கோலத்தைத் தெய்வமென்கின்றனர்.

'என்னைப் பார்த்தால் சூனியக்காரி போலவா தெரிகிறது?' — கேட்க நாவு துடிக்கிறது. ஆனால் பூதாகாரமான அந்த உடலையும், அவளுடைய பயங்கரமான பேச்சையும் நினைத்துப் பேசாதிருந்தேன்.

தண்ணீர் பிடித்துக் கொண்டு திரும்பிய பிச்சம்மாள், எங்கள் பேச்சு திசை மாறிவிட்டதை உணர்ந்து அவசரம் அவசரமாகப் பதில் கூறி அனுப்பினாள்.

கோலத்தில் மும்மூர்த்திகள்...

பிள்ளைமார் ஜாதியில் ஒரு வித்தியாசமான வழக்கம் இருக்கிறது; கோலப் புத்தகங்களையும், ஏடுகளையும் மணப்பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுப்பார்களாம். பிள்ளைமார் வீட்டில் விஞ நிரலை நிறைத்து முடித்தாகிவிட்டது. அப்போது அந்த அம்மாளின் மருமகள் என்னிடம், "இத்தனை பெரிய 'ரிசர்ச்' எல்லாம் செய்திகளே! எங்க, நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்க பார்க்கலாம்?" என்றார்.

"எனக்குக் கேட்கத்தான் தெரியும் சொல்லத் தெரியாது" என்று திருவிளையாடல் வசனத்தை எடுத்துவிட்டவுடன் எல்லாரும் 'கொல்'லெனச் சிரித்துவிட்டார்கள். நேரமாகிவிட்டது உணர்ந்து, "என்ன, கேளுங்கள்" என்கிறேன்.

'வாசலில் சாணமிட்டுப் பெருக்கிக் கோலம் போட்டுச் செம்மண் கட்டுகிறீர்களே, அது ஏன்?' என்று கேட்டார். ஏறத்தாழ 300 விஞ நிரல்களை நிறைத்திருக்கிறேன். 500 வீடுகளுக்குச் சென்று தகவல்கள் சேகரித்துள்ளேன். இதுதானா பிரமாதம்?' என நினைத்த நான், சேகரித்த செய்திகளை ஒவ்வொன்றாக எடுத்து விடுகிறேன். எல்லாவற்றிற்கும் 'ஊஹூம், ஊஹூம்' என்று 'பூம், பூம்' மாடு போல ஒரேமாதிரியாகத் தலையாட்டுகிறாள். கடைசியாகச் சொல்கிறாள்.

"எங்கள் ஊர்ப் பக்கம் (திருச்செந்தூர்) இதுக்கு ஒரு புது விளக்கம் தர்றாங்க. வாசல் கோலம் மும்மூர்த்திகளை — முழுமுதற் கடவுளரை நினைவூட்டுகிறது..."

"எப்படி?" — வியந்தபடி வினவுகிறேன்.

"சாணம் — திருமால் (பச்சை வண்ணம்); கோலம் — சிவன் (வெள்ளை); செம்மண் — பிரம்மா (சிவப்பு). இதை ஒப்புக் கொள்கிறீர்களா?"


வியப்பால் என் கண்கள் மேலும் விரிகின்றன.


"ரொம்ப நல்லாருக்கு உங்க விளக்கம். எனக்கு இப்ப இன்னொண்ணு கூடத் தோணுது. நமது நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தரப் பாடுபட்ட காங்கிரஸ் கொடியின் வண்ணங்கள் கூட அவைதாமே! பண்பாட்டுச் சிறப்புடைய இந்தியக் கொடியில் இந்துமதத்தாத்பரியங்களை விளக்கும் கோலத்தின் தத்துவமே விளங்கக் காண்கிறோம். பச்சை — வெள்ளை — சிவப்பு — அரி, அரன், அயன்..."

போட்டேனே ஒரு போடு. இப்போது எல்லாருடைய விரிந்த கண்களும் என் பக்கம்.


சில வித்தியாசமான சிறந்த கோலங்கள் —


ஐயர்க்கே உரித்தான வரலட்சுமி நோன்புக் கோலம். இந்த ஒன்பது தாமரைக் கோலத்தை நோன்றன்று இடுவர்.






ஐயங்கார்க்கே உரித்தான ரங்கசேத்திரக் கோலம் — 108 சங்குக் கோலம்.







இந்த ரங்கச் சேத்திரக் கோலத்தைப் போடுவதால் ஸ்ரீரங்கப் பெருமான் சன்னிதானத்தைச் சுற்றிவந்த பலனைப் பெறலாம். நான்கு பிராகாரங்களும் திருமாலின் வைகுண்டத்தையும் குளம் பாற்கடலையும், அரவுப் படுக்கையையும் குறிக்கிறதாக நம்புகின்றனர்...

108 சங்குக் கோலத்தைக் கன்னிப் பெண்கள் இட்டால் மனத்துக்குப் பிடித்த கணவனை அடைவார்கள் என்றும், குழந்தைப் பேறில்லாதோர் இட்டால் குழந்தை பிறக்குமென்றும் நம்புகின்றார்கள்.







மனைக் கோலம் ஜாதியினரிடையே வேறுபடுகிறது. ஐயரினத்தார் சதுரமாகவும், ஐயங்காரினத்தார் குழிவான சதுரமாகவும், செட்டியார் சதுர வடிவமிட்டுச் சுற்றிலும் இரட்டைப் புள்ளி இட்டும் மனைக்கோலமிடுகின்றனர். அந்தணர்களின் தாக்கமே தாங்கள் மனைக் கோலமிடக் காரணம் என்கின்றனர் செட்டியாரினத்தார்.

இவ்வாறாகப் பல ஜாதியினரிடையே — பல ஊர்களுக்கிடையே கோலங்கள் போடுவது வேறுபடுகிறது.

— வே. சரோஜா.

பெண்கள் நகைக்கு ஆசைப்படுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அது எப்படிப்பட்ட விபரீதங்களில் கொண்டுவிடும் என்பதை சமீபத்தில்தான் புரிந்து கொண்டேன்.

இரவல் நகையைத் தொலைத்துவிட்டு, அதைத் திருப்புவதற்காகத் தங்களை ஓடாகத் தேய்த்துக் கொண்டுள்ள ஒரு ஏழைத் தம்பதியைச் சந்தித்தேன். அந்தப் பெண் என்னிடம் கதறி அழுதாள். "நகை ஆசையுள்ள எல்லாப் பெண்களுக்கும் புத்தி வரட்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.. அதன் விளைவாக எழுந்ததுதான் இந்தக் கதை. — உஷா சுப்ரமணியன்

இரவல் நகை

"நான் வரமுடியாது" இரண்டு காலையும் தரையில் அழுத்தமாகப் பரப்பி நின்றுக் கொண்டு ஆங்காரத்துடன் முழங்கினாள் சுமதி.

"சுமதி, ஆப்டர், ஆல் கல்யாணி என் கூடப் பிறந்த அக்கா. அவ பெண்ணுக்குக் கல்யாணம். ஒரே மாமா நான். அவ என்ன அம்மான் சீர் எடுக்கச் சொன்னாளா, 'தன் பெண் கல்யாணத்துக்கு வரச் சொல்லி அழைத்தாள். அதுவும் ஒரு நடையில்லை. எத்தனை முறை அலைஞ்சுட்டா. போகாம இருந்தா நன்னா இருக்காது."

"ஆமா, நீங்க போகாம இருந்தா நன்னா இருக்காது. ராஜாவாட்டம் போங்கோ. யாரு வேணாம்னா? நான் வரமாட்டேன்."

"அதுதான் ஏன்னு கேக்கறேன்?"

"சொல்லித்தான் தெரியணுமா என்ன? வைரத்தோடும், பேசரியும், கல் அட்டிகையுமா மினுக்கறா உங்கக்கா. மூளிக் கழுத்தோட நான் வரமாட்டேன். முடிஞ்சா, கல் அட்டிகை வாங்கிப் போட்டுக் கூட்டிண்டு போங்கோ."

"சுமதி, எனக்கு வாங்கற வசதியிருந்தா வாங்கித் தர மாட்டேனா என்ன, அதுக்காக கல்யாணியை அவமானப்படுத்தக் கூடாது."

நாராயணன் எவ்வளவு எடுத்துக் கூறியும், சுமதி பிடிவாதத்துடன் கல்யாணத்திற்கு வர மறுத்துவிட்டாள். "நகை வாடகைக்காவது எடுத்து வரது" என்று சாடினாள். வாடகைக்கு நகை எடுத்து வர, ஆயிரம் ரூபாய் அட்வான்ஸுக்கு நாராயணன் எங்கே போவான்?

சுமதி மேல் ஆத்திரம் பொங்கினாலும், ஒரு சமயம் பாவமாகவும் இருந்தது. சுமதியின் கொள்ளை அழகுக்கு அவளை ராஜகுமாரி போல் காக்கும் கணவன் கிடைக்க வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். பக்கத்து வீட்டில் வசித்த நாராயணன் அவள் அழகில் மயங்கி அவள் ஏழ்மையை எண்ணாமல், அவளை மணக்க முன்வந்ததும், அவள் சம்மதித்தது, அவன் பணத்தால் தான் செளகரியமாக வாழலாம் என்ற எண்ணத்தால் தான். ஆனால் நடந்தது என்ன?

சுமதியின் அதிர்ஷ்டமோ அல்லது அவள் ஜாதக ராசியோ, அவள் திருமணமாகி வந்த

உஷா சுப்பிரமணியன்

இரண்டே வருஷத்தில் நாராயணனின் பிஸினஸ் திடீரெனச் சரிந்தது. வீடு, நகைகள், ஸ்கூட்டர் எல்லாம் ஏலம் போயிற்று. வசதியாக இருந்தபோது பெரிய இடத்தில் திருமணமாகியிருந்த நாராயணனின் சகோதரிகள் வசதியாக வாழ, சுமதியின் வாழ்வு மட்டும் அவள் திருமணத்திற்கு முன்பு இருந்தது போலவே ஏழ்மை, பற்றாக்குறை எனத் தொடர்ந்தது. நாராயணன் பிஸினஸை மூடிவிட்டுத் தனியார் அலுவலகம் ஒன்றில் குமாஸ்தா வேலையில் சேர்ந்தான்.

நாராயணன் நல்லவன். நேர்மையானவன். மனைவியின் மனம் கோணப் பொறுக்காதவன். ஆனால் அவனால் தற்சமயம் மனைவியின் தேவைகள், ஆசைகள் எதையும் பூர்த்தி செய்ய முடியாத நிலை. எனவே வசதியாக வாழும் அவன் சகோதரிகளை ஜன்ம வைரியாக எண்ணினாள் சுமதி. கல்யாணி தன் ஒரே மகளுக்குத் திருமணம் என்று சகோதரனை மனமார அழைத்திருந்தாள். திருமணத்தை முன்னிட்டு சகோதரனுக்கு வேஷ்டி, மதனிக்குப் புடவை என்று உதவலாம் என்றும் எண்ணியிருந்தாள். சுமதியோ திருமணத்திற்கு வர மறுக்கிறாள். என்னதான் செய்வான் நாராயணன். யோசித்தான்.

''சரி, நீ சொல்றதைக் கல்யாணிகிட்டேயே சொல்றேன். அவ நகை ஏதாவது இரவல் தந்தா வாங்கிட்டு வர்றேன். அதையாவது போட்டுண்டு வருவியா?''


சுமதி ஒரு நிமிடம் யோசித்தாள். பின் ''சரி வருகிறேன்'' என்று சம்மதித்தாள்.

நாராயணன் மிகவும் தயங்கித் தயங்கித்தான் விஷயத்தைச் சொன்னான். ஆனால் கல்யாணி சிறிதும் தயங்காமல் தன் நகைகளை எடுத்து நீட்டினாள். ''என்ன நாணா, யாரோ வேற்று மனிதர்கிட்டே கேட்கிறது மாதிரி...... என்கிட்டே கேட்க என்னடா தயக்கம்? இந்தா, இந்த முத்து செட்டை மாப்பிள்ளை அழைப்புக்குப் போட்டுக்கட்டும். பவழ செட்டை முகூர்த்த சமயத்தில் போட்டுக்கட்டும்.''

இரண்டு செட் நகையா. இருபது பவுனுக்கு மேல் இருக்காதா?

''இல்லை கல்யாணி' ரெண்டு வேணாம். அந்த பவழ செட்டை மாத்திரம் கொடு போதும். நான் கல்யாணம் முடிந்த மறுநாளே திருப்பித் தந்துவிடுகிறேன்.''

பத்து பவுன் என்றால் பதினைந்தாயிரம் ரூபாய். பஸ்ஸில் நகைப் பெட்டியை உடம்புடன் சேர்த்துப் பையில் மடித்து அமுக்கியவாறே சென்றான் நாராயணன். திருட்டுச்



சொத்தை எடுத்துச் செல்வதுபோல் அவன் உடம்பும், மனமும் பதறியது.

சுமதி அலட்சியமாக நகைப் பெட்டியைத் திறந்தாள். அவள் சிவப்பு உடம்பில் இந்தப் பவழம் எப்படி மினுக்கும். அதோடு, அவன் கல்யாணத்துக்கு வாங்கிய அரக்கு ஜரிகைக் கொட்டடிப்புடவை.இரவுமுழுவதும்அவள், தான் பவழ நகை அணிந்து, சிவப்புப் புடவை உடுத்து, மேக மண்டலத்தின் நடுவில் நடனம் ஆடுவதாகக் கனவு கண்டாள்.


அவள் நினைத்தபடியே கல்யாணத்தில் ஒவ்வொருவரும் 'யார் அந்தப் பெண், கல்யாணியின் தம்பி பெண்டாட்டியாமே, கோவில் சிலையாட்டம் என்ன அழகு' என்று வியந்து கொண்டிருந்தார்கள். ரிஸப்ஷனின் போது பந்தி உபசாரம் செய்து கொண்டிருந்த கணவனின் தோளில் இடித்தாள். ''நீங்க பேசாம கல்யாணி தர்றேன் என்று சொன்ன முத்து நெக்லஸையும் சேர்த்தே வாங்கி வந்திருக்கலாம். இரண்டு வேளையும் ஒரே நெக்லஸைப் போட்டுண்டு அலுத்துப் போச்சு'' என்றாள் பெருமையுடன்.

''கவலைப்படாதே. எப்படியாவது பணம் சேர்த்து இந்தத் தந்தக் கழுத்துக்கு நானே முத்து நெக்லஸ் பண்ணிப் போடறேன்'' என்று மனைவியின் மூக்கை நிமிண்டினான் நாராயணன்.

அத்தனை சந்தோஷமும் ஒருமணி நேரம் தான் நீடித்தது. கல்யாணியின் காரில் வீட்டில் இறங்கி, புதுப் புடவையை அவிழ்க்கும் போது, ''ஐய்யய்யோ, "நெக்லஸைக் காணோமே'' என்று உரக்கக் குரல் கொடுத்தாள் சுமதி.

கிளம்ப இருந்த காரை நிறுத்தி அதன் உள்ளே தேடினான் நாணு. ஊஹூம். ''இரு இந்தக் காரிலேயே போய் மண்டபத்தில் தேடிட்டு வந்துடறேன்'' என்று கிளம்பினான்.

சுமதி, படபடக்கும் நெஞ்சத்துடன் புடவையை உதறிப் பார்த்தாள். கைப்பையைக்



கவிழ்த்துப் பார்த்தாள். கடவுளே, இது என்ன சோதனை. மண்டபத்திலே எங்கே யாவது கிடைக்க வேண்டும். ஆஞ்சனேயா, வடைமாலை சாத்தறேன். கண்களில் கண்ணீரும் உதட்டிலே ஜபமுமாகக் காத்திருந்தாள்.

பதினொரு மணி சுமாருக்கு நாணு சோர்ந்த முகத்துடன் திரும்பி வந்தான். இதுவரை நம்பிக்கையுடன் காத்திருந்த சுமதி, நாணுவின் முகத்தைப் பார்த்ததும், 'பகீர்' என அதிர்ந்தாள். ''ஐய்யய்யோ, நான். இப்ப என்ன செய்வேன். உங்கக்கா ராட்சசி என்னை உசிரோட விடமாட்டாளே'' என்று அலறத் துவங்கினாள்.

''சீ. வாயை மூடு. நாலு வீடு கேட்கிறுப்பலே கத்தி, அழுது அழிச்சாட்டியம் பண்ணினுயோ, பொளி போட்டுடுவேன். நான் மானஸ்தன். என் உசிரை வித்தாவது கல்யாணி நகையைத் திருப்பிடுவேன். அது முடியாமப் போனா நான் தூக்கிலே தொங்குவேனே தவிர, என் பெண்டாட்டி நகையைத் தொலைச்சுட்டாள்னு அவகிட்டே சொல்ல மாட்டேன். இது மட்டும் நிச்சயம்.''

அரண்டுவிட்டாள் சுமதி. தன் கணவன் பிடிவாதக்காரன். சொன்னபடி செய்தாலும் செய்துவிடுவான் என அவள் அறிவாள். ''நீங்க அப்படி எதுவும் செய்துடாதீங்கோ. நான் பொழுது விடிந்ததும் கல்யாணிகிட்டே போய் நெக்லஸில் கொக்கி கழண்டு வந்து விட்டது. ரிப்பேர் செய்து திருப்பித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு வருகிறேன். எப்படியாவது பத்து நாளில் நெக்லஸை திருப்பித் தந்துடலாம்.''

''எப்பிடி.... அதுதான் கேட்கிறேன் நானும். பத்தாயிரத்துக்கு மேல் என்னை நம்பி எவன் கடன் தருவான்?''

பத்து நாட்களுக்குள் எப்படியோ ஏற்பாடு செய்தாகிவிட்டது. சுமதி திருமாங்கல்யத்தை மஞ்சள் கயிற்றில் கட்டிக் கொண்டு, அவளுக்கு இருந்த ஒரே நகையான கொடியைக் கழற்றித் தந்தாள். காது, மூக்கிலிருந்த அரைப் பவுனும் சேர்ந்து கொண்டது. பாக்கிக்கு சுமதிதான் பக்கத்து வீட்டு மாமி உதவியுடன் பத்தானிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி வந்தாள்.

இரட்டை வட்டி. மாதம் பிறந்து ஐந்து தேதிக்குள் வட்டி கட்டாவிட்டால் பத்தான் வீடு தேடி வந்து சத்தம் போடுவான். மானத்திற்குப் பயந்த நாணு, ஆபீஸ் விட்டு வந்ததும், தெரு முனையிலிருந்த வெல்டிங் ஷாப்பில் நடு இரவு வரை உழைத்தான். சுமதி மதியம் முழுவதும் அக்கம் பக்கத்திற்கு பட்சணம், வடகம் என்று செய்து தந்தாள். பவழக் காதணியை அடையாளம் காட்டி, அதே டிசைனில் நெக்லஸ் செய்து, கல்யாணியிடம் நடந்ததைச் சொல்லாமல் திருப்பிய பிறகும், இவர்கள் வாழ்க்கை நரகமாகவே தொடர்ந்தது.

அண்ணாச்சி கடையில் ஆர்டர் செய்திருந்த அதிரசத்திற்கு மாவு இடித்து வைத்துவிட்டு, சுமதி சோர்வுடன் கை, காலை முறித்து நீட்டும்போது மணி ஏறக்குறைய பதினொன்று. அவர் திரும்பும் சமயம்தான்.

''அம்மா, அம்மா, கதவைத் திறங்க'' வாசற் கதவை நாலைந்து பேர் இடிக்கும் சத்தம் கேட்டது. இந்த நேரத்தில்....?

''அம்மா, வெல்டிங் பொறி ஐயா கண்ணில விழுந்திடிச்சு. அதிர்ச்சியிலே மயக்கமாயிட்டாரு. ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போறோம். நீங்க வர்றீங்களா?'' நாணுவுடன் வேலை செய்யும் ஆட்கள்.

சுமதிக்குப் பதற்றத்தில் தலை சுற்றியது. 'ஐயோ, இவர் கண்ணே போய்விடுமா? எனக்கு உதவ யார் இருக்கிறார்கள்?' கல்யாணி.... அவசரமென்றால் கல்யாணி கட்டாயம் ஓடி வருவாள். ''கடவுளே, நான் என்ன செய்வேன். இந்தாங்கோ, இந்த நம்பருக்குப் போன் செய்து இவர் அக்காவை ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லுங்க.'' வீட்டைப் பூட்டிக்கொண்டு கணவனுடன், அழுதபடியே ஆஸ்பத்திரிக்குச் சென்றாள் சுமதி.

ஆஸ்பத்திரியில் கண்ணில் விழுந்திருந்த இரும்புத் துண்டை ஆபரேஷன் செய்து எடுத்தார்கள். பத்து நாளைக்கும் மேல் விதவிதமான சிகிச்சைகள். சுமதி கேட்காமலேயே கல்யாணி செலவுகளைக் கவனித்துக் கொண்டாள்.

''எனக்கு ஒண்ணுதான் புரியலை. ஆபீஸ்ல வேலை செய்யற நாணு நடு இரவுக்கு மேல் வெல்டிங் ஷாப்பிலே என்ன செய்துண்டு இருந்தான்? கேட்டா ஏன் பதில் சொல்ல மாட்டேங்கறே?'' கல்யாணி வருத்தத்துடன் துருவித் துருவிக் கேட்டாள்.

சுமதி உடைந்து போனாள். 'ஓ' என்ற அழுகையுடன் நடந்ததைக் கொட்டித் தீர்த்தாள்.

''அடப்பாவி, நான் தந்த பவழ நெக்லஸுக்காகவா இரண்டு பேரும் இப்படி உழைச்சு ஓடாப் போனீங்க. எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லமாட்டீங்களா? அது ஐநூறு ரூபாய் கூடப் பெறாத விஷயமாச்சே; நாணு நகை கேட்ட சமயத்தில பாம்பேயிலிருந்து இந்த வெள்ளி கவரிங் பாஷன் நகையெல்லாம் வந்திருந்தது. யார் கண்டா என்று ஒண்ணைத் தாராளமாக எடுத்துத் தந்தேன். அதை தொலைத்ததற்காகவா இப்படி...? என் தம்பிக்கு நானே எமனாயிட்டேனே... சுமதி நான் தப்பு செய்துட்டேனே'' கல்யாணி பெரிதாக அழுதாள்.

சுமதி அப்படியே திகைத்து நின்றாள்.

பொட்டுக் கடலை சட்னி, தேங்காய்த் துவையல் அரைக்கும்போது, இரண்டு, மூன்று அரை நெல்லிக்காய்களைக் கூடச் சேர்த்து அரைத்துப் பாருங்கள். பிரமாதமான சுவையும், மணமும் ஏற்படும். மேலும் மேலும் சாப்பிடத் தூண்டும்.

— திருமதி தேவனாதன்.

அசல்

டாட்டா உப்பு

இப்போது
வீட்டு உபயோக பேக்குகளிலும் கிடைக்கிறது



இதுவரை பெரிய அளவில் விற்பனை செய்யப்பட்டுவந்த **டாட்டா உப்பு** இப்போது கம்பெனியின் சொந்த அதிகாரத்தின் கீழ் 1 கிலோ பேக் கிலும் பேக் செய்யப்படுகிறது.

டாட்டா உப்பு சாதாரண உப்பு அல்ல. இதர சாதாரண உப்பின் அநேக ரகங்கள் தனியாகவோ அல்லது பாலி பைகளிலோ விற்கப்படுகின்றன. அவை திறந்த களங்களில் கடல் நீரின் ஸோலார் எவாப்பரேஷன் மூலமாக கிடைக்கின்றன. ஆகவே அவை தீமை விளைவிக்கும் துகள் மற்றும் தூசிகள் இல்லாமலில்லை. மாறாக **டாட்டா உப்பு டாட்டா கெமிக்கல்ஸ் லிமிடெடின்** தொழிற்சாலையில் விசேஷமான முறையில், முழுவதும் **வாக்குவம் எவாப்பரேஷனின்** இடையற்ற ப்ராஸஸினால் தயாரிக்கப்படுகிறது.

அதனால்தான் **டாட்டா உப்பு** அதிக சுத்தமாகவும் அபார வெண்மையாகவும் இருக்கிறது—சுற்றுப்புற தூய்மைக் கேட்டினால் பாதிக்கப்படுவதில்லை.

சுத்தமான வெண்மையான டாட்டா உப்பு—சுகாதார சமையலுக்கு உங்கள் உறுதுணை.

ஒரு டாட்டா தயாரிப்பு

அசல் டாட்டா உப்பு வாங்க வேண்டுமாயின், கம்பெனியின் சொந்த பாலி பைகளை மட்டுமே வற்புறுத்தி வாங்குங்கள். டிஸைன் ட்ரேட் மார்க்கினால் பாதுகாப்பு கொண்டது.

வர்தமான் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிட்

எ/2 ஜே.பி. டவர்ஸ், 7-2 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை-600 034.

உப-விநியோகஸ்தர்கள் மற்றும் டீலர்களுக்கு வர்த்தக கோரிக்கைகள் வரவேற்கப்படுகின்றன.

AFCO

ஒரு வியக்கத்தக்கச் சாதனை,
ஒரு வளமான பணி... இப்பொழுது
ஒரு வெள்ளி விழாக் கொண்டாட்டம்!

ஆம், எச்பிஎப்பில் அது 1400வது பாட்சிகரமான வாரம். 1961-ஆம் ஆண்டு முதல் போட்டோ தொழில் நுணுக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு வழி காட்டியாக இருந்து வருகிறது எச்பிஎப். 1000 இலட்ச சதுர மீட்டர்களுக்கும் மேலான சிறிய தரம் மிக்க போட்டோ பிலிம் களைத் தயாரித்து உள்ளது.

☆ எச்பிஎப் ரூ. 2500 கோடி மதிப்புள்ள தொழிலுக்கு ஒரு சிறந்த அஸ்திவாரம்

எச்பிஎப், சினி பாஸிடிவ், சினி சவுண்ட் நெகடிவ் மற்றும் மருத்துவ எக்ஸ்ரே பிலிம்களின் மொத்தத் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்துள்ளது. அத்துடன் தொழில்களுக்குத் தேவையான எக்ஸ்ரே, கிராஃபிக் ஆர்ட்ஸ், ரோல் பிலிம் மற்றும் ப்ரோமைட் பேப்பர் — இவற்றின் தேவையில் ஒரு கணிசமான அளவினையும் பூர்த்தி செய்துள்ளது. இவைகளுக்கான மொத்த முதலீடு ரூ. 2000 முதல் ரூ. 2500 கோடி வரை ஆகும்; 2,00,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

☆ பெருகிடும் இலாபம் வளர்த்திடும் சொத்து

எச்பிஎப், 3200 ஊழியர்களைக் கொண்டு படிப்படியாக இலாபம் அளித்திடும் பொதுத்துறை நிறுவனமாக முன்னணிக்கு வந்துள்ளது. 1984-85இல் விற்பனை ரூ. 100 கோடிகளைத் தாண்டியது; இலாபம் ரூ. 6 கோடிகள் நிலையை எட்டிப் பிடித்தது. உற்பத்தி அளவு 200% உபயோகப் படுத்தப் பட்டது.

☆ தன்னிறைவினையும் தாண்டி நீண்டதொரு பயணம்

எச்பிஎப், ரூ 330 கோடிகள் மதிப்புள்ள பிரம்மாண்டமானதொரு விஸ்தரிப்புத் திட்டத்தைத் தீட்டி முற்றிலும் புதிய வகை தயாரிப்புகளைத் தயாரித்து, போட்டோ பிலிம் தொழில் நுணுக்கத்தில் இந்தியாவை 21-வது நூற்றாண்டிற்குச் செல்ல முதலில் வழி காட்டியுள்ளது.

ஆம், இன்று எச்பிஎப் என்றாலே போட்டோ பிலிம்தான். உங்களால் ஒன்றில்லாமல் மற்றொன்றினைத் தனித்துப் பார்க்கவே முடியாது.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
உதகமண்டலம் 643 005.

எச்பிஎப்: போட்டோ தொழில் நுணுக்கத்தில் இந்தியாவை 21ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்கிறது.



SAA/HPF/3490

ராசி பலன்

மார்ச் '86

மேஷம்



(அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் வரை)
மேஷ ராசிக்காரர்கள் தாங்கள் எண்ணிய எண்ணங்களைச் செயல்வடிவாக்க மார்ச் 14 ம் தேதிக்குள் தொடங்குதல் நலம். வெற்றி உறுதி. வித்தை, பேச்சு வன்மை, மற்றும் கலை ஆர்வம் கொண்டவர்களுக்கு மார்ச் 5 ம் தேதிக்குமேல் புகழும் மதிப்பும் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம் — முன்னேற்றம் பெற வாய்ப்புண்டு. புத்திரர்களால் மகிழ்ச்சியும் நன்மையும் கூடும். நீண்ட நாள் தடைப்பட்டு வந்த காரியங்கள் நிறைவேறும். இல்லத்தரசிகளுக்குக் குடும்பப் பொறுப்பு அதிகரிக்கும்.

ரிஷபம்




(கார்த்திகை, 2, 3, 4 ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் முதல் இரண்டு பாதம் முடிய)
மேற்படி ராசிக்காரர்களுக்கு இம்மாதம் சுமாரான பலன்கள் நடைபெறும் காலம். எண்ணிய எண்ணங்கள் நடைபெறும். மார்ச் முதல் வாரத்தில் வாகனத்தால் தொல்லை, விபத்து ஏற்படும். களவு, பொருள் பறிபோதல் ஏற்படும். மன வாதை கூடும். செய்யும் காரியத்தில் உண்மையான ஈடுபாடு ஏற்படாது. பலவித இடைஞ்சல்கள் ஏற்படும். கணவன் மனைவி ஒற்றுமை பாதிக்கப்படும். பெரியோர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துரை பயனற்றுப் போகும். கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மற்றும் இவ்வகைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு மதிப்புக் குறைவுடன் அவமானமும் ஏற்படும்.

மிதுனம்




(மிருகசீரிடம், 3, 4 ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, ம் பாதம் முடிய.)
மேற்படி ராசியில் பிறந்த திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் கூடிவரும் காலம். சுப நிகழ்ச்சி நடைபெறும். மனத்தில் சந்தோஷம் — திருப்தி — அமைதி ஏற்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் நன்மை கிட்டும். கணவன் மனைவி உறவு வலுப் பெறும். தெய்வ தரிசனம் — ஸ்தல யாத்திரை செல்லும் பாக்கியம் கிட்டும். வியாபாரி களுக்கு எதிர்பார்த்ததற்கும் மேலாக லாபம் கிட்டும். உத்தியோகம் புரிபவர்களுக்கு மேலிடத்தில் நல் ஆதரவும் மதிப்பும் கிட்டும். கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். அரசியலில் ஈடுபடுபவர்களின் செல்வாக்கு ஓங்கும். இந்நாள்வரை தாமதப்பட்டு வந்த, குழந்தைப்பேறு — உடன் கிட்டும்.

கடகம்



(புனர்பூசம் நாலாம் பாதம், பூசம், ஆயில்யம்.)
உத்தியோகஸ்தர்களுக்கு, முன்னேற்றமும் — உத்தியோகத் துறையில் தனது எண்ணம் பலிதமடையும் காலம். இந்த இராசியில் பிறந்தவர்கள் — பிறர் உதவியின்றித் தாங்கள் எ ்ணிய எண்ணங்களை எண்ணியவாறே செவ்வனே செய்து முடிக்கும் காலம். மனணக்கம், தைரியம் அதிகரிக்கும். உஷ்ண சம்பந்தப்பட்ட பிணி ஏற்பட்டு விலகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். மார்ச் மாதம் முதல் வாரத்திற்குப் பின் திருமணமாகாத வர்களுக்குத் திருமணம் கூடி வரும் காலம். தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தொழிலில் முன்னேற்றமும் ஸ்திரத் தன்மையும் ஏற்பட்டாலும் — லாபம் கிட்டுவதில் தாமதம் ஏற்படும். பெண்களுக்கு வேலைப்பளு குறையும். மன நிம்மதி ஏற்படும்;

சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)
சுகக்குறைவு ஏற்படும். தொழிலில் மந்தத்தன்மை, நண்பர்கள் சேர்க்கை — தெளிவான முடிவு பெறல் மனத்தில் நீண்ட நாட்களாக இருக்கும் சஞ்சலம் நீங்கி அமைதி ஏற்படல் — முதலிய காரியங்கள் நிகழும். கணவன் மனைவி உறவு சுமுக நிலையிலிருக்கும். அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மார்ச் 14 க்குமேல் எது விஷயத்திலும் கவனமாய் இருத்தல் நலம். வித்தை மற்றும் கலையார்வம் மிக்கவர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடும் போது மிக்க கவனம் தேவை. அடிபடுதல் — உடலில் காயம் ஏற்பட வாய்ப்புண்டு. வாகனஓட்டிகளும் கவனமாயிருத்தல் நன்று. குழந்தைகளால் நன்மை ஏற்படும். சொந்த வீடு, பூமி, மனை — வாகனம் வாங்கும் யோகம் கைகூடும். பூர்வீக சொத்து கைகூடும். பாக்கியம் ஏற்படும். தெய்வ அனுகூலம் ஏற்படும்.

ஜோதிடர் கலையரசி

கன்னி



(உத்திரம் 2, 3, 4 ம் பாதம், அஸ்தம், சித்திரை, 1, 2 ம் பாதம் முடிய.)

சுகக்குறைவு, பொருட்செலவு, நிம்மதிக் குறைவு ஏற்படும். மனத்தில் பயம், கிலேசம் ஏற்படும்., தெளிவு இருக்காது. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு — மந்தமான காலம். எதிர்பார்த்த லாபம் கிட்டாது. விஷ ஜந்துக்களால் தொல்லை ஏற்படும். அந்நியரால் நன்மை — உறவினரால் தொல்லை. சினிமா நாடகம் முதலிய துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு நன்மையும் உயர்வும் ஏற்படும். பள்ளி மாணவ மாணவியருக்கு விளையாட்டுத் துறையில் நாட்டம் கூடும். மேடைப் பேச்சாளர்களுக்கு ஆதரவு அதிகரிக்கும்.

துலாம்



குடும்பத்தில் சண்டை சச்சரவு ஏற்படும். வார்த்தைகளை மிகவும் அளந்து பேசுதல் நலம். பெண்களால் — குடும்பத்தில் சண்டை, பிளவு, சஞ்சலம் ஏற்படும். சிறப்பான சுபகாரியங்களின் முடிவில் — அதிருப்தியும் — நிராசையும் உண்டாகும். கணவன் — மனைவியிடையே கருத்து 'முரண்பாடு அதிகரிக்கும். பெற்றோர்களின் சொல்லுக்குக் குழந்தைகள் மத்தியில் மதிப்பு — பலன் எதுவுமிருக்காது. ஆக்கபூர்வமான காரியங்களில் மனது ஈடுபடாது கேளிக்கைகள் பயனற்ற பொழுது போக்குகளில் காலத்தை விரைக்க நேரிடும். அரசியலில் ஈடுபடுகிறவர்கள் மிகுந்த தைரியத்துடன் செயல்படுவார்கள். உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றம் ஏற்படும்.

விருச்சிகம்



விசாகம் 4 ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய.)

புகழ் செல்வாக்கு ஓங்கும் காலம். சத்ருக்களால் தனக்கு வெற்றி. சுகமனுபவிக்கும் பாக்கியத்துடன் அயனசயன போக பாக்கிய இன்பம் அதிகரிக்கும் காலம். உஷ்ண சம்பந்தப்பட்ட கோளாறினால் வயிற்றுக் கோளாறு அதுவகையில் மருத்துவ செலவு — அலைச்சல் — பொருள் விரயம் ஏற்படும்., விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் காலம். தானிய வகைகள் உற்பத்தி அதிகரிக்கும். வியாபாரிகள் மற்றும் புரோக்கர் தொழில் புரிவோருக்கு அரசாங்கத்தின் மறைமுக ஆதரவு கிட்டும். சகோதர ஒற்றுமை வலுப்பெறும்.

தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் முதற் பாதம் முடிய.)

இதுநாள் வரை மனத்தில் குடிகொண்டிருந்த அச்சம் நீங்கி மனவைராக்கியம் ஊக்கம் அதிகரிக்கும். புதிய வீட்டில் குடிபுகுதல் — வீட்டு வாடகைக்கு (Modification) பொருட் செலவு செய்ய நேரும். கல்வி பயிலும் மாணவ மாணவியருக்குக் கல்வியில் முன்னேற்றமும் மதிப்பும் அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகம் கொண்ட (Bank L. I. C.) துறையில் பணிபுரிபவர்களுக்கு நன்மையுடன் முன்னேற்றம் கிட்டும். கலையார்வம் மிக்கவர்களுக்கு — தங்கள் கலையார்வத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புண்டு. பொருளாதாரச் செழிப்பு ஓங்கும்.

மகரம்



உத்திராடம் 2, 3, 4 ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 1, 2 ம் பாதம் முடிய.)

கிரக, வாகன சுகமனுபவிக்கும் காலம். எண்ணியவாறே, திருமணம் முதலான சுப காரியங்கள் நிறைவேறும். சொந்தத் தொழில் மற்றும் விவசாயத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு எதிர்பார்த்ததற்கும் மேலான நன்மை — முன்னேற்றம் உண்டு. மனமுற்றவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு அவர்களின் துயரம் — குறைய அதிக வாய்ப்புண்டு. நண்பர்களால் முக்கிய இடங்களில் அவமானப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் குழந்தை ஜனித்தல் முதலிய சுப நிகழ்ச்சி நடைபெறும். கால் நடை பராமரிப்புத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மிகுந்த லாபம் கிட்டும்.

கும்பம்




நீண்ட காலம் மனத்தில் உள்ள ஐயம் நீங்கி ஜெயம் உண்டாகும். மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு கிட்டும். கணவன் மனைவி உறவு நல்ல நிலையிலிருக்கும். புத்திரர்களால் இன்பமும் மகிழ்ச்சியும் பெருமையும் கிட்டும். குடும்பத்தில் விசேஷமான வகையில் சுபகாரியங்கள் நடைபெறும். புரோக்கர் தொழில் — மற்றும் இரும்புத் தொழில் — நிலம், தானியம் வாங்கி விற்றல் — தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு மிகுந்த லாபம் — முன்னேற்றம் உருவாகும். திருமணமாகாதவர்களுக்கு — திருமணம் ஏற்பட வாய்ப்புண்டு.

மீனம்



(பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி 4 ம் பாதம்.)

குல தெய்வங்கள் மற்றும் — அம்மன் கோவில்களுக்குச் செய்ய வேண்டிய தெய்வ காரியங்கள் சிறப்புடன் நடைபெறும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். சுப விரயம் ஏற்படும் — உறவினரிடையே பகைமை ஏற்படும். நண்பர்களால் உதவியும், பொருள் வரவும் ஏற்படும். உஷ்ண சம்பந்தப்பட்ட பீடை வந்து விலகும். அரசியல்வாதிகள் கலைஞர்கள் மற்றும் சூதாட்டம் முதலியவற்றில் ஈடுபடுகிறவர்களுக்கு நினைத்ததற்கும் மேல் நன்மை மதிப்பு — செல்வாக்கு உயரும். இம்மாதம் கலைநிகழ்ச்சியில் ஈடுபடும் பாக்கியம் கிட்டும். பெரியோர்கள் ஆசியும் நன்மதிப்பும் பெறுவர். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு — கல்வியில் மிகுந்த நாட்டமும் முயற்சியும் உருவாகும் — விளையாட்டுத்துறையினருக்கு இம்மாதம் மிகவும் இனிப்பான காலம்.



Every one attains this, YOU can plan for it now... with KCUB!

Old age is inevitable. Security is most desirable. Plan and save for a peaceful retired life with KCUB.

At KCUB we have many saving schemes to suit specific needs.

- MONTHLY SAVINGS • CASH CERTIFICATES.
- VAMANA VISWARUPA DEPOSIT
- FIXED DEPOSIT

KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam-612 001

KCUB—The Bank that's committed to growth — your growth.

MCS/KCUB/195

விளம்பரப் படங்களில் வருவது போல் ஒருமுறை என் கையில் இருந்த தேசல் சோப்பை 'ஹூம்' என்று மூச்சை இழுத்து முகர்ந்துவிட்டு உடலில் தேய்த்துக் குளிக்க ஆரம்பித்தேன். அன்று விடுமுறை நாளாத லால் அழுக்கு போக அநுபவித்துக் குளிக்க வேண்டும் என்ற எண்ணம் வேறு. ஆகா! என்ன சுகம்! என்ன வாசனை! இந்த வாசனை எந்த சோப்பிற்கு வரும்! என்று முனகியபடி ஆனந்தமாக லா...... லாலாலாலா என்று கையைக் காலை ஆட்டி ராகம் பாடியபடி குளித்து முடித்துவிட்டு உடலைத் துவட்டிக் கொண்டேன். துடைத்தும் போகாத சோப் பின் மணம் எனக்கு மிகவும் பிடிக்கும். என் நினைவு தெரிந்த நாளிலிருந்து இந்த ஒரே பிராண்ட் சோப்பையே நான் உபயோகித்து வந்தாலும் அலுக்காத ரம்யமான என் அபி மான சோப் அது. எதை எதையோ என் வாழ்க்கையில் மாற்றியிருக்கிறேன் (மாற்றப் பட்டு இருக்கிறேன் என்பதே பொருந்தும்) ஆனால் இதுவரை என் அபிமான சோப்பை மட்டும் மாற்றவே இல்லை.

ஆடையை உடுத்திக் கொண்டு, பாதி படித்து விட்டு வைத்திருந்த செய்தித்தாளைப் படிக்க ஹாலுக்குள் நுழைந்த நான் திடுக் கிட்டேன். என் மனைவி அன்றைய செய்தித் தாளின் ஒரு பகுதியைக் கத்தரித்துக் கொண் டிருந்தாள்.

இது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிதான். அப்படி அடிக்கடி நடக்கும்போதும் நான் அடிக்கடி திடுக்கிடுவதும் வழக்கம்தான்! ஏன் என்று கேட்கிறீர்களா? சஸ்பென்ஸ் எதற்கு? என் மனைவிக்கு ஒரு பொழுது போக்கு உண்டு. ஒரு பொழுதுபோக்கு என் பதை விட இது ஒன்றே பொழுதுபோக்கு என்று சொல்வதே உத்தமம். வேறு ஒன்று மில்லை!

இந்தப் பத்திரிகைகளில் வரும் விளம்பர பரிசுப் போட்டிகளில் தவறாமல் (கட்டாயம்) கலந்து கொள்வது அவள் வாடிக்கை. அவ ளுக்கு இது வாடிக்கை என்றால், எனக்கும் என் குழந்தைகளுக்கும் இது வேடிக்கை யும், வேதனையும் ஆகும்!

பாருங்களேன்! இப்படித்தான் ஏதோ ஒரு சேமியா தயாரிக்கும் கம்பெனி ஒரு போட்டி அறிவித்து விளம்பரம் செய்திருந்தது. அந்த விளம்பர போட்டியின் நிபந்தனைகளில் ஒன்றாக, 'போட்டியில் கலந்து கொள்பவர் கள் எவ்வளவு கூப்பன்கள் வேண்டுமானு



பரிசோ பரிசு

லும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொருக் கூப்பனுடனும் ஒவ்வொரு..... சேமியாவின் மேலுறையைக் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும்' என்று கண்டிருந்தது. (என் மனைவிக்கு ஒரு கூப்பன் அனுப்புவதோடு நிறுத்திக் கொள்ளும் வழக்கம் எல்லாம் கிடையாது) அவ்வளவுதான்!

வீட்டில் தினம் குறிப்பிட்ட பிராண்ட் சேமியா உப்புமா, சேமியா பாயசம், சேமியா இட்லி, சேமியா கட்லெட், சேமியா புலவு, சேமியா, சேமியா....... பாரதியாரின் 'எங்கும் வெற்றி, எதனிலும் வெற்றி' என்ற வாக்கியங்களைப் போல, எங்கும் சேமியா! எதனிலும் சேமியா (சரியாக சாப்பிடப் பிடிக்காமல் குழந்தைகளும் நானும் சேமியா குச்சி மாதிரி மாறியது வேறு விஷயம்.)

ஒரு மாதிரியாக இந்த சேமியா கல்யாணம் முடிந்ததோ இல்லையோ ஒரு துணி கம்பெனியின் போட்டி விளம்பரம்! வீட்டு ஜன்னல் திரைச்சீலையிலிருந்து என் அண்டர்வேர், கர்சீப்வரை அந்தக்கம்பெனியின் துணிதான்!

அடுத்தது காப்பி, டீ வாசனையையே ஜன்மத்திலும் நினைத்துப் பார்க்க முடியாதபடி ஓர் ஆரோக்கிய பானத்தின் பரிசுப் போட்டி விளம்பரம்! (ஒரு பரிசு போட்டி முடிந்ததும் உபயோகித்து வந்தவைகளை அடுத்த விளம்பர போட்டி மாற்றிவிடும். இதனால் பல கம்பெனித் தயாரிப்புகளைப் பார்த்தப் பெருமை எங்களுக்குண்டு) மூன்று வேளையும் நோயாளிகளைப் போல் பாலில் இதைத்தான் கரைத்துக் குடித்துக் கொண்டிருந்தோம். குடும்பம்



முழுவதும். வரும் விருந்தாளிகளுக்கும் அந்த பானம்தான் — ஐய்யயே, அவங்க வீட்டுக்கா, போனு ஒரு காப்பித் தண்ணி கிடைக்காது. அங்கே கஞ்சி மாதிரி ஒரு திரவம் தருவாங்க நான் வரலேப்பா — இதனால் நண்பர்கள் வருவது கணிசமாகக் குறைந்தது எனலாம்! (சேமியா வடிவத்தில் இருந்த எங்களின் எடையை இந்த பானம் ஈடு செய்ததே! சந்தோஷம்தான்! ஒரு விஷயம்! இந்தச் சமையல் பதார்த்த விளம்பர போட்டிகளால் எங்கள் தேக எடையில் அடிக்கடி ஏற்றத் தாழ்வு ஏற்படுவது சகஜம்!)

. போட்டி விளம்பரக் கூப்பன்கள், விளம்பரப்படுத்தப்பட்ட பொருள்களின் அட்டைப் பெட்டிகள், உறைகள் இத்யாதிகளை பத்திரமாக வைக்க என்று தனியாக ஒரு பீரோவையே ஒதுக்கியிருந்தாள் என் மனைவி என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அப்படியாவது அதிர்ஷ்டம் அடித்து ஆறுதல் பரிசுகளாவது கிடைத்தனவா என்றால் அதுதான் இல்லை! அதிர்ஷ்டத்திற்கும் எங்களுக்கும்எவ்வளவோ கிலோமீட்டர் இடைப்பட்ட வித்தியாசம் வேறு!

அதனால்தான் என் மனைவியின் இன்றைய பேப்பர் கட்டிங் என்னைத் திடுக்கிட வைத்தது. அடிக்கடி கட்சி மாறும் அரசியல்வாதிகளைப் போல் இன்று எந்த விஷயத்தில் என்ன மாற்றம் நிகழப் போகிறதோ என்று 'பொது ஜனம்' போல் காத்திருந்தேன்.

என்னைப் பார்த்ததுமே என் மனைவி "இதைப் பாருங்க. இன்றையப் பேப்பரில் ஒரு பரிசுப் போட்டி விளம்பரம் வந்திருக்கு" என்று தன் கையில் இருந்த பேப்பர் கட்டிங்கை என்னிடம் நீட்டினாள்.

அந்த விளம்பரத்தைப் பார்த்தேனோ இல்லையோ அமெரிக்க, ரஷ்ய அணுகுண்டு அத்தனையும் என் தலையில் வெடித்தாற்போல் அப்படியேசோபாவில்சாய்ந்தேன்.(ஆமாம், காலையில் பேப்பரை பார்த்தேனே, இது அப்போது என் கண்களில், எப்படிப் படாமல் போயிற்று? சரியாகப் பார்க்காமல் போய் விட்டேனே, பார்த்திருந்தால் மறைத்து வைத்திருக்கலாம். ஹூம் இனி என்ன செய்ய முடியும்?)

"என்னங்க ஏன் இப்படி உட்கார்ந்திட்டீங்க? இது ஒரு சாதாரண குளியல் சோப் விளம்பரப் போட்டிதானே. இதைப் பார்த்ததும் ஏன் இப்படி உட்கார்ந்திட்டீங்க" என்று என் மனைவியின் அதட்டலில் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தேன்.

"பங்கஜம், இந்த குளிக்கும் சோப் விளம்பரப் போட்டியில் கட்டாயம் கலந்துக்கப் போறியா?" என்று பரிதாபமாகக் கேட்டேன்.

"ஆமாம். ஏன்?" என்று நிர்தாட்சண்யமாகக் கேட்டாள் என் மனைவி.

'ஐய்யோ என் ஆசை நாயகி — அபிமான சோப்பை என்னிடமிருந்து பிரிந்துவிடுவாளோ இந்த பாதகி என்று எண்ணியபடி,

"இந்த விளம்பரப் போட்டியில் மட்டும் கலந்துக்க வேண்டாம். சொன்னாக் கேள். சமர்த்தோல்லியோ. நாளைக்கு வேறு ஏதாவது பரிசுப் போட்டி விளம்பரம் பத்திரிகையில் வராமலா போய் விடும்? தினம் ஒன்று தான் இப்போது வருகிறதே! அதில் கலந்துக்கயேன்!" என்று கெஞ்சினேன்.

"அதெல்லாம் முடியாது. விளம்பரத்தை சரியாகப் பாருங்கள் என்ன பரிசு என்று. நம்ம வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சோப் தேய்த்துக் குளிக்கிறோம் இல்லையா? அதையெல்லாம் நிறுத்திவிட்டு, இந்தப் போட்டி விளம்பர சோப்பையே எல்லோரும் உபயோகிப்போம்" என்றபோது இடைமறித்த நான்,

"அந்த சோப் வாசனை நல்லா இல்லை என்றால்....?" என்றேன்.

"அதனால் என்ன? தேய்த்துக் குளிக்க ஆரம்பித்தால் போகப் போக அதுவேப் பழகிப் போய்விடும்" என்றாள்.


'ராட்சசி' என்று மனத்திற்குள் திட்டிக் கொண்டே விளம்பரத்தை ஊன்றிப் படித்தேன். நான்கு மாதம் தள்ளித்தான் போட்டியின் முடிவு தேதி இருந்தது (சில சமயங்

மல்லிகைப்பூ தலையில் வைக்க மட்டும் என்று எண்ணுகிறீர்கள். மல்லிகை மலர்களைத் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் போட்டு வைக்கவும். 2 முறை வெயிலில் வைத்தபின் மலர்கள் வதங்கிவிடும். எடுத்துவிட்டுப் புது மலர்கள் போட்டு வைக்கவும். எண்ணெய்க்கு மல்லிகை மணம் வரும். இதைத் தலைக்குத் தடவி வந்தால் கண்ணுக்குக் குளுமை. எரிச்சல் இராது. அனுபவமான பாட்டி வைத்தியம்.


— சித்ரா.




ஐடெக்ஸ்
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 48 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX
அரவிந்த லெபரட்டரீஸ், சென்னை-600 033.



GOPI
Kitchen Machine



"சமையலறையில் எனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறது கோபி. என் தெரியுமா?

கோபி மெஷினுடன் நவீன தொழில் நுட்பத்தையும், எந்தவிதக் கூடுதல் செலவின்றி, ஒன்றல்ல மூன்று ஜாடிகளும் கிடைக்கின்றது.

ஆகவே ப்ளெண்டிங், ட்ரை க்ரைண்டிங், வெட் க்ரைண்டிங், அல்லது எது வேண்டுமானுலும் கோபியில் மட்டுமே நொடிகளில் செய்ய முடியும். கூர்மையான பிளேடுகளைக் கையாளுதல் போன்ற தொல்லை எதுவும் இல்லை.

ஒவ்வொரு ஜாடியையும் தனித் தனியாக உபயோகிக்கலாம். அவற்றை தனித் தனியாக வாங்க வேண்டிய அவசியமில்லை. அதனுல் எவ்வளவு பணம் மிச்சப்படுகிறது தெரியுமா!

கோபி மெஷின் மிகவும் சிறந்தது. அதனுல் தான் உங்களுக்கு 5 ஆண்டு உத்தரவாதமும் (மோட்டார் உள்பட) ஆயுள் முழுவதும் இலவசச் சேவையும் கிடைக்கின்றன.

ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்? கோபி இருக்கும்போது நான் சமையல் கலை வல்லுனராகவே உணர்கிறேன்"

கோபியை இப்பொழுது உங்களுக்கு 'தெர்மாகோல்' பேக்கிங்குடன் அளிக்கின்ருேம். தெர்மாக்கோல் பேக்கிங்கை 1) ஹாட்கேஸ் 2) ஐஸ் பாக்ஸ் 3) பிக்னிக் கேஸ் ஆக உபயோகிக்கலாம்.

கர்னடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு டிற்கு வினியோகஸ்தாகள்

திரிப்தா மார்கேட்டிங் பி. லிட்.,

139, பாரதி சாலை (பைக்ராப்ட்ஸ் ரோடு) சென்னை-600 014 போன்: 88599

தமிழ்நாட்டில் உள்ள சர்வீஸ் சென்டர்ஸ் முகவரிகள் :-

சென்னை: திரிப்தா மார்கெட்டிங் பிரைவேட் லிமிடெட், 139, பாரதி சாலை, பைகிராப்ட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, தொலைபேசி 88599 ஸ்ரீ பாலாஜி ஹோம் கீட்ஸ், 2 வடமலை மேஸ்திரி தெரு, போன் 39526 ; **கோயம்பத்தூர்:** கோபால் அஸோசியேட்ஸ், 9 ஜுவான்ஸ் பவன், 27, T. B. ரோடு, தொலைபேசி 25997 ; **மதுரை:** ஆனந்தம் எண்டர்பிரைசஸ், 13 கிழக்கு மாசித் தெரு, தொலைபேசி 23377 ; **சேலம்:** ஸ்ரீ காமதேனு டிரேடர்ஸ், 39 பஜார் தெரு, தொலைபேசி 7524 ; **திருச்சி:** சித்திக் சேல்ஸ் கார்பரேஷன், 32 இரண்டாவது தெரு, ஷீ காலனி, மன்னார்புரம், தொலைபேசி 31727 ; **வேலூர்:** நவீன் டிரேடர்ஸ், 324, C.S.I. காம்ப்ளெக்ஸ், ஆபீஸர்ஸ் லைன், தொலைபேசி 23443 ; **கும்பகோணம்:** மூர்த்தி ரேடியோஸ், 144, பெரிய தெரு, கும்பகோணம் 612 001 ; **பாண்டிச்சேரி:** N. சங்கர்தாஸ், N. கோபால் பிரதர்ஸ் & கோ., 579 & 80, நேரு தெரு, Phone 4513

இந்தியா முழுவதும் சர்வீஸ் சென்டர்கள் உள்ளன



முதன் முதலாக 1953 ஆம் ஆண்டில், இந்திராகாந்தி சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அந்நாட்டில் அவருக்கு ஒரு பெரிய வீராங்கனைக்கு அளிக்கப்படும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின் இரண்டு ஆண்டுகள் கழித்து இந்திரா காந்தி திரும்பவும் தன் தந்தை ஜவஹர் லால் நேருவுடன் சோவியத் நாடு சென் றிருந்தார். அது சமயம் ஏராளமான தாய்மார்கள் தங்களின் பெண் குழந்தை களுக்கு நேருஜியின் மகளான இந்தி ராவின் பெயரை வைக்க அனுமதி அளிக் கும்படி தந்தி மூலம் விண்ணப்பித்துக் கொண்டனர். நேருஜியும் அதற்கு மகிழ்ச்சியுடன் அனுமதி அளித்திருந் தார். அவ்வாறு பெயரிட்டப் பெற்ற சோவியத் இந்திராக்கள் ஏரான மானோர், நம் மறைந்த பிரதமர் இந்திரா காந்தியுடன், கடிதத் தொடர்பு கொண் டிருந்தனர்.

—தேவகோட்டை பி. நாராயணன்.

களில் போட்டி முடிவு தேதிகள் இன்னும் தள்ளிக் கூடப் போவதுண்டு) ஒவ்வொரு சோப்பின் மேலுறையுடன் உட்புறத்திலும் ஒரு பிரபல திரைப்பட நடிகையின் கையோ, காலோ, இடக் கன்னமோ, வலக் கன்னமோ, கண்களோ, மூக்கோ (நல்லவேளை, ஒரு மூக்கை மட்டும் வைத்தான் இறைவன்!) இப்படி இருக்குமாம். அந்தத் திரைப்பட நடிகையின் முழு உருவப் படமும் கிடைக்கக் கூடிய சோப்பின் மேலுறைகளை சேகரித்து அனுப்பினால் ஒவ்வொருவருக்கும் 'தங்க நகை' செட்டாம் (விடுவாளா என் மனைவி!) சுமாராக இரண்டு சோப்புகள் வாங்கினால் இரண்டின் மேலுறையிலும் 'கைகளே' மட்டும் இருந்தால் 'காலுக்கு' எவ்வளவு சோப் வாங்க வேண்டும் என்று கணக்குப் போட்ட எனக்கு தலைச் சுற்றியது. இந்த சோப் விளம் பரத்தால் பணம் மட்டுமல்லாமல் 'மண'மும் போகுதே என்று சோக கீதம் தனிமையில் பாட விரும்பிய நான் சுதாரித்துக் கொண்டு எழுந்து, ''சரி போய் நாலு சோப்புகள் வாங்கி வருகிறேன்'' (நாலு சோப்புடன் முடித்துவிட விரும்பினேன்!) என்று எழுந் தேன்.

''நாலு சோப்பா? எந்த மூலைக்கு? அதெல் லாம் நீங்க போக வேண்டாம். உங்களுக்கு இந்த மாதிரி போட்டிகளில் எல்லாம் கலந் துக்க அநுபவம், திறமை போதாது. நான் போய் வாங்கி வருகிறேன். முதலில் அனுப் பும் கூப்பனுக்கு போனஸ் பரிசு வேறு இருக் காம் (இது வேறையா?) அதனால் இப்பவே போய் வாங்கி இன்றே அனுப்பிவிட வேண் டும்'' என்று கிளம்பிவிட்டாள்.

நான் மிச்சமிருந்த பேப்பர் செய்தியில் விதியே என்று மூழ்கினேன். அப்படியே உறங்கியும் விட்டேன். உறக்கத்தில் என் அபிமான சோப் வேதாளம்போல் ஸ்லோ மோஷனில் பறப்பது போலவும் விக்ரமாதித் தனைப் போல் கத்தியை உருவிக் கொண்டு நான் என் அபிமான சோப்பை பிடிக்க ஓடு வது போலவும் கனவு!

காலிங் பெல் சத்தம் கேட்டு அலறி புடைத் துக் கொண்டு எழுந்த நான் வாசல் கதவைத் திறந்தபோது எதிரில் ஆட்டோவில் இருந்து அட்டைப்பெட்டிகளை இறக்கிக்கொண்டிருந் தாள் என் மனைவி. நானும் பெட்டிகளை உள்ளே கொண்டுவந்துவைத்து உதவினேன். பிறகு பெட்டிகளைத் திறந்துப் பார்த்தால், அநேகமாக செங்கல் வடிவத்தில் வைத்தால் ஒரு மாஸ்டர் பெட்ரூம் கட்டிவிடலாம் அவ் வளவு சோப்புகள்! இவ்வளவும் போட்டியின் முடிவான நான்கு மாதக் கோட்டாவா அல்லது ஒரே ஒரு மாதத்திற்கான கோட் டாவா என்பதை மனைவியிடம் கேட்கப் பய மாக இருந்தது.

குறைந்தது என் பேரனின் ஆயுட் காலம் வரை இந்த சோப்புகள் உபயோகத்தில் இருக்கும் என நினைத்த நான் ஒரு நீண்ட பெருமூச்சுடன் புறங்கையை முகர்ந்து பார்த் தேன். என் அபிமான சோப்பின் இறுதி வாசனை என்னை சோகத்தில் ஆழ்த்தியது நிஜம்!

பன்னிரண்டிலிருந்து இருபது வரை குழந்தைகளுக்கு முக்கியமான பருவம். உள்ளத்தில் குழந்தையாக் இருந்தாலும் தான் வளர்ந்துவிட்டதாகவும் தனக்கு எல்லாம் தெரியும் என்றும் ஓர் நினைப்பு. உபதேசங்களை விரும்பாத வயது. கட்டுப்பாடுகளைக் கண்டாலே வெறுக்கும் மனோபாவம். மற்றவர்களுக்கு என்ன தெரியும் என்று ஒரு அலட்சியம். ஆற்றல் மிக்கவராக உருவாவதும் அலங்கோலமாக அழிந்து போவதும் இந்தப் பருவத்தில் தான்.

கைதவறினால் உடைந்து விடக் கூடிய இந்தக் கண்ணாடிப் பருவத்தைப் பற்றி அந்த வயதினர் அவ்வளவு கவலைப்படுவதில்லை. ஆனால், அவர்களது பெற்றோர் எப்படி இருக்கின்றனர்?

பிரச்னை மிக்க இந்த விடலைப் பருவத்தில் குழந்தைகளை அவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்? ஆர்வத்துடன் சில பெற்றோரை அணுகிய போது அவர்கள் சொன்னது:—

—விட்டுத்தான்

திரு. அப்துல் ரஹ்மான், திருமதி ஹலீமா பீவி:

தந்தை: எனக்கு 27 வயசுலயிருந்து 7 வயசு வரைக்கும் எட்டுப் பிள்ளைங்க இருக்குதுங்க். இந்த விடலைப் பருவங்கிறது மனசு பலவிதத்துலயும் அலைபாயற சமயம். பசங்க முழுசா நம்ம கையில இருக்க மாட்டாங்க. நான் பெரிய பையனை ரொம்பக் கண்டிச்சு வளத்தேங்க. இப்ப சவூதில பெரிய வேலையில இருக்கான். ரொம்ப மரியாதையா வீட்டுக் கஷ்டம் தெரிஞ்சு இருக்கான். அந்த அளவு மத்த பசங்க இல்ல

பொதுவாகவே இந்தக் காலத்துப் பிள்ளைங்க VCR வேணும், கலர் டீ. வி. வேணும்னு நினைக்கறாங்களே தவிர, நம்ம வீடு, நாம பொறுப்பா இருக்கணும் னெல்லாம் தோணறதில்லை.

இந்தவயசுலஒருபெண்ணோ,பையனோ கெட்டுப் போறதும் நல்லா இருக்கறதும் அவங்க சினேகிதங்களாலதான். நல்ல சேர்க்கை இருந்தா பசங்க நல்லா வளருவாங்க. அவ்வளவுதான்.

தாய்: இப்பல்லாம் பசங்களைக் கண்டிச்சா அதுங்களுக்குப் பிடிக்கறதில்லீங்க. நம்ம நல்லதுக்குத்தான் சொல்றாங்கன்னு விளங்கறதில்ல. ரொம்பச் சொன்னா வீட்டை விட்டு ஓடிப் போயிடுவாங்க.



* அப்துல் ரஹ்மான், ஹலீமா.

நான் என் பிள்ளைங்களுக்கு நல்லதெல்லாம் சொல்றேன். அதுக்கு மேலே அவங்க கேட்கலேன்னு அனுபவிச்சுத்தான் தெரிஞ்சுக்கணும்.

திரு அருணாசலம், திருமதி கோமதி:

தந்தை: (மலையேறும் பயிற்சியாளர்) என்னுடைய 'காம்ப்' பில் 10 வயசிலிருந்து 18 வயது வரை நிறையப் பெண்கள் இருக்காங்க. பொதுவாகவே பெண் குழந்தைகளுக்குத்தானாகவேஓரளவு பொறுப்பு வந்துடுது. கூடப் பழகற ஆண் பிள்ளைகளை சரியா எடை போடறாங்க. அளவோடத்தான் பழகறாங்க. Infact — சில விஷயங்களையெல்லாம் அவங்க என்கூடப் பேசும்போது நானே அசந்து போயிடுவேன்.

ஆண் குழந்தைகளைப் பொறுத்தவரை, நம்ம சமூகத்துல 'அவனுக்கென்ன ஆண் பிள்ளைன்னு' நாம கொடுக்கற இடம்தான் பின்னால் அந்தப் பசங்க தறிகெட்டு ஓடக் காரணமாயிருக்கு. அம்மாக்களும் பெண்களுக்கு நல்லது கெட்டது சொல்லித் தர அளவு பிள்ளைகள் கிட்ட பொறுமையா உட்கார்ந்து பேசறதில்லே. குழந்தைகளைப் பத்திக் கவலைப்படறதுல அர்த்தம் இல்லை. இந்த வயசுல அவங்களை நண்பர்களா நடத்தணும்னு எதிர்பார்க்கறாங்க. பெற்றோர் அதைப் புரிஞ்சிக்கிட்டா பிரச்னையே இல்லே.

தாய்: பெண் குழந்தைகள் மேலே நமக்கு நிச்சயம் கண்டிப்பு வேணுந்தான். என் பெண் லியோ கிளப்புல மெம்பர். காலேஜ் யூனியன் பிரசிடென்ட். பார்க்கறதுக்கு இதெல்லாம் பெருமையா இருந்தாலும் வெளியில் கொஞ்சம் கெடுபிடியாகத்தான் இருப்பேன். அவளும் என்னை மீறி ஒண்ணும் செய்ய மாட்டான்னு ஒரு நம்பிக்கைதான்.

பிள்ளையை சில சமயத்துல விட்டுத்தான் பிடிக்க வேண்டியிருக்கு. 'வெளியிலே ரொம்ப நேரம் தங்கப்படாது. போற எடத்தைச் சொல்லணும்' — அப்படின்னெல்லாம் கேட்டுப்பேன். முன்ன மாதிரியெல்லாம் ரொம்பக் கட்டுப்படுத்தவும் முடியாது. போற வழியிலேயே போய்தான் சரிப்படுத்தணும்.

திரு. சபேசன், திருமதி சரஸ்வதி:

தந்தை: அன்பும் அரவணைப்புமாக வளர்க்கப்படும் குழந்தைகள் கெட்டுப் போகச் சான்ஸே இல்லே. இப்பப் பொதுவாகவே பசங்க புத்திசாலியாக இருக்காங்க. எல்லாம் தெரிஞ்சுக்கணும்னு ஆசை இருக்கு. ஓரளவுக்கு நல்ல விஷயங்களைச் சொல்லலாமே தவிர கட்டுப்படுத்தக் கூடாது. பெண் குழந்தைகளையும், அந்தக் காலம் மாதிரி, 'அங்க போகாதே இங்க போகாதே'ன்னு கட்டுப்படுத்தக் கூடாது. இப்பல்லாம் பார்த்தும் கேட்டுமே நிறையத் தெரிஞ்சுக்கறாங்க. அவங்களை வெளியில பழகவிட்டு நாம கண்காணிச்சுக்கிட்டு இருக்கறதுதான் சரி.

என் பையனுக்கும் நல்ல சுதந்திரம் கொடுத்திருக்கேன். அவனுக்கே தெரியும் அப்பாவுக்கு எப்படி இருந்தா பிடிக்கும், எதுபிடிக்காதுன்னு. காலேஜுக்கு அவனை பஸ்ஸுலதான் அனுப்பறேன். எங்கே



பிடிக்கணும்

* காந்தி, புனிதவதி





• பேசன், சரஸ்வதி.

யாவது வெளியில போகும்போது 'கார் எடுத்துக்கிட்டுப் போகவா' ன்னு கேட்டா சரின்னுடுவேன். நம்ம கண் பார்வையில பசங்களை வச்சுக்கிட்டா போதும். ஹாஸ்டல்ல இருக்கற பசங்களுக்குத்தான் பல விதத்திலேயும் கெட்டுப்போக சான்ஸ் ஜாஸ்திங்கறது என் கருத்து.


தாய்: நான் அதை ஒப்புக் கொள்ள மாட்டேன். வீட்டுலேயே இருந்து கெட்டுப் போற பசங்களும் இருக்கு. எதையும் தன் மேலே திணிக்கப்படறதை குழந்தைங்க விரும்பறதில்லே. லீவு நாளில் நான் ஏதாவது வேலை செஞ்சுக்கிட்டு இருந்தா என் பசங்க தானே வந்து, "அம்மா ஹெல்ப் பண்ணட்டுமா?" ம்பாங்க. ஆனா இதை நீதான் செய்யணும்னு கண்டிப்பாச் செய்ய மாட்டாங்க. படி, படின்னு நச்சரிக்கறதைவிட அவங்க போக்குல விட்டுட்டா நல்லாத்தான் படிக்கிறாங்க. மொத்தத்துல பசங்களைச் சின்ன வயசை விட இந்த வயசுலதான் ரொம்ப அன்பும் கண்டிப்புமா வளர்க்கணும். நாம சிலதுல விட்டுக் கொடுத்தா பிரச்சினையேயில்லே.

திரு. சாந்தி, திருமதி புனிதவதி

தந்தை: நம்ம ஆசையைப் பிள்ளைங்க மேலே திணிக்கக் கூடாதுன்னுட்டு நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். முதல் பையன் "ஏரோநாடிக்ஸ்" படிக்கணும்னு ஆசைப்பட்டான். முடியாது, மெடிகல்தான் அப்ளை பண்ணணும்னு ஃபார்ம் வாங்கிக் கொடுத்தேன். லிஸ்ட் வந்த பிறகு பார்த்தால், இவன் பேரே இல்லே. கேட்டால் அப்ளையே பண்ணலேங்கறான். அதுலேயிருந்து அவங்க போக்குலேயே போக

நமக்குள்ளே ஒரு கடிதம்

நம்மை நாமே



பிறருக்கு உதவ முடியாவிட்டாலும் மற்றவர் மனம் புண்படப் பேசாமல் இருப்பது, எல்லோராலும் செய்யக்கூடிய நற்செயல். அதுவும் பெண்களே பெண்களை வினைக இழித்துரைப்பது வருந்தத்தக்கது. விதவைகளின் மீது இருந்த வெறுப்பு ஓரளவு குறைந்திருக்கிறது எனலாம். விதவைகளும் சமூகத்தில் மதிக்கப்படுபவர்களே என்று பத்திரிகைகளும் சமூகநல அமைப்புகளும் பாடுபட்டு வருவதால் ஏற்பட்ட நற்பயன் என்று இதைச் சொல்லலாம்.

இதைப் போலவே போராடத்தக்க சில பிற்போக்கு எண்ணங்கள் நம்மிடையே இருக்கின்றன. சில தம்பதியர்கள் எவ்வளவோ முயற்சிக்குப் பிறகும் மழலைச் செல்வம் பெற முடியாமல் நமது அனுதாபத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்களை மலடி என்று பட்டம் சூட்டி இழித்துரைத்து கேவலமாக நடத்துகிறது நம் சமூகம். வெந்த புண்ணில் வேலைச் சொருகுவது போல இது மோசமானது. மழலைச் செல்வம் இயற்கையின் அருளால் கிடைப்பது. இயற்கை தோற்றுவிக்கும் குறைகளால் சிலருக்கு இந்த பாக்கியம் கிடைக்காமல் போகிறது.

குழந்தைகளைப் பெற்றவர்கள் தங்களது



• அருணாசலம், கோமதி.

ஆரம்பிச்சிட்டேன். பையன் சினிமாவுக்குப் போயிட்டு வந்து போனேம்பான். கண்டிச்சா போனதைச் சொல்லவே மாட்டான். 'சரிப்பா'ங்கறதுதான் வழி. தினப்படியே 7 அல்லது 8 மணிக்குத்தான் வீட்டுக்கு வருவான். பரீட்சையின் போது ஒரு மாசம் ராப்பகலா பிசாசு மாதிரி படிப்பான்.

பொதுவாக, இப்ப இருக்கிற இளைஞர்களுக்கு நல்ல பொறுப்புணர்ச்சி இருக்குங்கறதுதான் என் அபிப்பிராயம். அன்பால அவங்கள நடத்திக்கிட்டுப் போகணும்.

தாய்: நம்ம காலம் மாதிரி பசங்களை எதிர்பார்க்க முடியாதுங்க. பிக்னிக்கெல்லாம் போகட்டுமான்னு கேட்கறதில்ல. போறேம்னுதான் சொல்றாங்க.

பொண்ணு சமையலறையில வந்து ஹெல்ப்பெல்லாம் பண்ண மாட்டா. நான் இதையெல்லாம் பெரிசு படுத்தறதில்ல. அவர் காலையில போனா ராத்திரி தான் வருவார். பிள்ளைங்க, அவங்களுடைய சிநேகிதங்க இதையெல்லாம் அம்மாதாங்க கவனிச்சுக்கிட்டே இருக்கணும். தவறிப் போகிற மாதிரி இருந்தால், உடனே ஒரு தாய்க்குத் தெரிஞ்சிடும்.

எப்பவும் எல்லாத்துக்கும் கண்டிக்க, ஆரம்பிச்சாத்தான் வீட்டுல நிம்மதியில்லன்னு வெளியில வேண்டாததைத் தேடிக்கிட்டுப் போவாங்க. நல்ல அமைதியான வீட்டுச் சூழ்நிலையைக் கொடுக்கறது நம்ம கையிலதான் இருக்கு.

பேட்டி: கிரிஜா ராகவன்.

புகைப்படங்கள்: யோகா.

இழிவு படுத்தலாமா?

ஆண்மையைப் பற்றியும், தாய்மையைப் பற்றியும் இறுமாப்பு அடைவதில் என்ன பொருள் இருக்கிறது? இதில் அவர்களது பங்கு என்ன? எல்லா உயிரினங்களும் எறும்பும், சயும்கூட இந்த ஆண்மையையும் தாய்மையையும் பெற்றவைதானே! இதில் இறுமாப்பு கொண்டு பறைசாற்றுவதற்கு என்ன இருக்கிறது? எத்தனையோ கதைகள், உபன்யாசங்கள், இலக்கியங்கள் எல்லாம் இந்தத் தவறைச் செய்கின்றன. குழந்தைச் செல்வம் கிடைக்கப் பெறாத குடும்பப் பெண்களும் நமது மதிப்புக்கு உரியவர்களே.


இன்றைக்கு ஆண் குழந்தை பெற்றால் தாயைப் போற்றுவதும் பெண் குழந்தையென்றால் தூற்றுவதும் வழக்கமாகிவிட்டது. எத்தனையோ பெண் கருக்கள் கலைக்கப்படுகின்றன. ஆனால் வசதியில்லாத சாதாரண பெண்கள் என்ன செய்வார்கள்? இரண்டு மூன்று பெண்களைப் பெற்றுவிட்டால் ஒதுக்கி வைத்து இழிவாகப் பேசுவது வருந்தத் தக்கது.

முற்போக்குச் சிந்தனையும் பரந்த தெய்வ நம்பிக்கையும் கொண்ட பெண்கள் தங்கள் வீட்டு நல்ல காரியங்களில் தாம்பூலமும் குங்குமம் கொடுக்கும்போது குடும்பப்பாங்கான தாய்மைப் பேறு கிட்டாத பெண்களையும், பெண் குழந்தை பெற்ற தாய்மார்களையும், கல் மனம் கொண்ட கணவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டுத் துன்பப்படும் தூய பெண்களையும், ஏழைப் பெண்களையும் மதிப்பார்களானால் அதுவே பெரும் சமூகநல சேவையாகும். நிச்சயம் அவர்களை ஆண்டவன் பாராட்டி அருள்வான். பத்திரிகைகள், உபன்யாசங்கள், சினிமா, டீ. வி., நாடகம், சமூகநல அமைப்புகள் ஒன்றிணைந்து மக்களிடையே இதற்கான முற்போக்குச் சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

— சுகன்யா.




இந்நிலையைப்பாருங்கள்.
இவர்கள் அவ்வளவு
எடுப்பான தோற்றத்தில்
வாழ்க்கையைத்
தொடங்கவில்லை.



அந்த நாள் நினைவிருக்கிறதா? உடையிலே நாகரீகம், உள்ளத்திலே மகிழ்ச்சி! முல்லையெனத்திகழும் பல் வரிசை, பால் முகம்மாறு பருவம். மெரிட் கொண்டு உருவாக்கினீர்கள் அந்த அழகிய உடைகளை உங்கள் வாழ்க்கையில் ஒன்றரக்கலந்து விட்ட, உங்களுக்கே சொந்தமான தையல் மெஷின் ஏன், அதே போல் உங்கள் தாயும் பராமரித்து வைத்திருந்த ஒன்று தான். உங்கள் குடும்பத்தில் இது ஓர் அங்கம் என்றே கூறினாலும் மிகையாகாது. உதவாது என்று ஒதுக்கிய துணிகளுக்கு உரு தந்ததே உங்கள் மெரிட்தானே, நினைவிருக்கிறதா? ஒவ்வொன்றையும் உங்களுக்கே உரிய பாணியில் தைத்திட கைகொடுத்ததும் மெரிட்தானே.

உடையணிவதிலே உங்கள் குடும்பத்தினர்க்கு இணை இல்லை என்று பார்ப்போர் கூறினர்.



பிறகு எதையும் உங்கள் மெரிட் கொண்டு செய்தீர்கள்.

மெரிட்*

வழங்குவோர் **ஸிங்கர்**

மெரிட் – அநேக மக்களுக்கு தையல் மெஷின் என்றாலே இதுதான்.

இண்டியன் ஸீயிங் மெஷின் க.லிட்.

* ஸிங்கர் கம்பெனியின் டிரேட் மார்க்

SPEER 621 85 TAM

இவர்களை யாரென்று

1 இந்தியாவின் முதல் ஐ. ஏ. எஸ். பெண்மணி இவர் தான். இன்று பிரதமர் ராஜீவ்காந்தியின் காரியதரிசிகளில் ஒருவராக இருக்கிறார். இவர் முதன் முதலாக கல்வித்துறை இயக்குனராகவும், பின்பு படிப்படியாகத் தொழில் துறை, உணவு வழங்கும் துறை, போக்குவரத்து, கண்காணிப்பு ஆகிய மத்திய அரசு இலாக்காக்களில் காரியதரிசியாக இருந்திருக்கிறார்.

2 புவி இயல் அமைப்புத் துறையில் கல்கத்தா ஜடவப்பூர் பல்கலைக்கழகத்தில் ரீடராக இருக்கும் இந்தப் பெண்மணிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அன்டார்டிகாவிற்கு ஆராய்ச்சி செய்ய இந்திய விஞ்ஞானிகள் குழு சென்றபோது இந்தப் பெண்மணியும் மண்வளம் பற்றி சோதனை செய்யச் சென்றார். இந்தியாவிலிருந்து அன்டார்டிகாவிற்குச் சென்ற முதல் பெண் விஞ்ஞானியும் இவர்தான்.

3 மத்திய அமைச்சரவையை அலங்கரிக்கும் மந்திரிகளில் இவரும் ஒருவர். இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை ராஜாங்க மந்திரியாகவும் பெண்கள் முன்னேற்றத்துக்கான மந்திரியாகவும் பதவி வகித்து வருகிறார். கல்யாண சீர்திருத்த சட்ட கமிட்டியிலும், வரதட்சணை எதிர்ப்பு சட்ட அமைப்பு சீர்திருத்தக் கமிட்டியிலும் இவர் அங்கம் வகித்து இருக்கிறார்.

4 செஸ்விளையாட்டில் இவர் கெட்டிக்காரர். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த இவர் அகில இந்திய அளவில் பெண்களுக்கான செஸ் போட்டியில் முதலாவதாக வந்த பெண்மணி. கடைசி கட்ட செஸ் ஆட்டத்தில் ஒன்பது புள்ளிகள் எடுத்து வெற்றி பெற்ற முதல் பெண்மணியும் இவர்தான்.

1

2

3


4

5

5 கர்நாடக சங்கீதத்தில் ஒளிவிடும் சுடராக இனிய குரல் வளம் கொண்டவராக இருக்கும் இவர் இந்த ஆண்டு இசை விழா சீசனில் 'சங்கீத கலாநிதி' என்னும் பட்டத்தை சங்கீத வித்வத் சபையின் மூலம் பெற்ருர்.

6 இவர் வாசிக்கும் இசைக் கருவியின் பெயர் ஷெனய். இவர் பத்மஸ்ரீ பட்டம் பெற்ற பிரபல பாடகர். வடநாட்டுக் காரர்.

7 இந்தியாவின் சிறந்த சிற்பக்கலைஞர்களில் இவரும் ஒருவர். போபால் விஷவாயு கொலையைக் கண்டு மனம் வெதும்பி அதற்காக சிறப்பாக ஒரு நினைவுச் சின்னத்தைச் (பெண் உருவத்தை) செதுக்கி அந்தச் சிலையை போபாலில் யூனியன் கார்பைடு தொழிற்சாலை முன்பே நிறுவியிருக்கிருர்.

8 பிப்ரவரி மாதம் இந்தியாவில் சென்னை உட்பட பல மாநிலங்களுக்குப் போப்பாண்டவர் விஜயம் மேற்கொண்டது நமக்குத் தெரியும். போப்பாண்டவரின் அன்புக்குப் பாத்திரமான தமிழர் இவர்.
இவர் கார்டினலாக ரோமில் இருக்கிருர். பெங்களூரில் ஆர்ச் பிஷப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

9 முதல் இந்தியத் தலைமை ராணுவ தளபதி. ஆனால் இரண்டாவது பீல்டு மார்ஷல். எண்பத்து ஐந்து வயதுக் காரரான இவருக்கு இந்த ஆண்டு ராணுவ தினத்தின்போது பீல்டு மார்ஷல் பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தார்கள். இன்னும் சுறுசுறுப்பாக இருக்கும் மனிதர் இவர்.

தொகுப்பு: **தாம்பிரவருணி.**



6



7




8



9

தெரிகிறதா?

விடைகள்:
1. சிரல்லா கிரேவல்,
2. கடிப்தா சென்குப்தா,
3. மார்கரெட் ஆல்வா,
4. பாக்கியஸ்ரீ,
5. டி. கே. பட்டம்மாள்,
6. பிஸ்மில்லாகான்,
7. ருத் வாட்டர் மேன்,
8. லூர்துசாமி,
9. ஜெனரல் கரியப்பா (பீல்டு மார்ஷல்).



that ultra feminine touch only a woman can think of...

No one understands a woman quite like another woman.

And PETITE bras are specially designed by a woman...

To give you all the extra finishing touches that only a woman understands...

Like soft, supple elastic that doesn't sag.

Lightweight hooks and plastic clasps that don't break easily.

Beautifully embroidered cotton cups in exclusive designs and patterns.

A choice of three basic colours (black, white & skin) in different models.

Introducing

ஏஞ்ஜல்:பாம்

Exclusive bras designed by a woman.

angelform®

petite

FEMINA PRODUCTS
Madras 29.

JAISONS FP 1386

குணபம் நேர்கையில்...

2



"நோ சார், கண்டிப்பா அந்த பை-
னுக்கு வேலை கொடுத்தே ஆகணும்" உமா அழுத்தந்திருத்தமாகக் கூறினள்.

அது எப்படி உமா? அந்தப் பையன் பேச்சிலே மரியாதையே இல்லையே துளிக் கூட. முன் அனுபவம் இருக்கான்னே எல்லாரும் கேட்டுண்டிருந்தா, எங்களுக்கு எப்படி முன் அனுபவம்கிடைக்கும்னு நம்பளேயே பதில் கேள்வி இல்லே கேட்கறன்?

"நோ சார், நா அப்படி நினைக்கலே. அவனுக்கு பயம். அனுபவம் இல்லேன்னு சொல்லிட்டா எங்கே வேலை கிடைக்காமப் போயிடுமோ என்று நம்பளேயே சிந்திக்க வெச்சுட்டான் பதில் கேள்வி கேட்டு. அங்க தான் அவனோட புத்திசாலித்தனம் தெரியறது. இந்த மாதிரி ஆள்தான் நமக்குத் தேவை. கண்டிப்பா அவனே செலக்ட் பண்ணியே ஆகணும்" தீர்மானமாக அவள் கூறியதும் குருமூர்த்தி அடங்கிவிட்டார். அவரை மீறி அவள் தீர்மானம் செய்வது என்பது மிகவும் அரிது. அப்படி செய்துவிட்டால் கண்டிப்பாக அதில் ஒரு நியாயம் மறைந்திருக்கும். அதற்காகத்தான் அவள் போராடுவாள் என்பது குருமூர்த்திக்கும் தெரிந்த விஷயம்தான் என்றாலும் எப்பொழுதாவது அவர்களுக்குள் இப்படி தர்க்கம் நடப்பதும் முடிவில் குருமூர்த்தி அடங்கிப் போவதும் சகஜம்தான்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் நியமன ஆர்டர் அனுப்பச் சொல்லிவிட்டாள் உமா.

* * * * *

போஸ்ட் மேன் போட்டுவிட்டுப் போயிருந்த கவரைப் பிரித்துப் பார்த்துவிட்டு, மகிழ்ச்சியுடன் உள்ளே ஓடினன் ஹரி.

"சித்ரா, சீக்கிரம் வாயேன்" கத்தினன். துணி துவைத்துக் கொண்டிருந்த சித்ரா என்னமோ ஏதோவென்று ஓடோடி வந்தாள்.

கடிதத்தை அவளிடம் காட்டியபோது அவளும் சந்தோஷப்பட்டாள். "என் ஹரி,

ஜத்யா சுப்ரமண்யம்

எதிர்த்துப் பேசினேன்னு பயந்துண்டிருந்தியே. பாரு ஆர்டர் வந்துடுத்து. நீ கேட்டது நியாயமான கேள்வி. அவாளுக்கே அது உறைத்திருக்க வேண்டும். அதான் உடனே ஆர்டர் அனுப்பி இருக்கா. எது எப்படியோ ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணு. அம்மாவுக்கும் நமஸ்காரம் பண்ணிட்டு நல்லபடியா வேலையிலே சேரு. பாவம் அவ ளும் நமக்காக நாயா உழைக்கிறா'' சொல்லிவிட்டுப் போனாள் சித்ரா.

சிநேகிதர்களுக்கு விஷயத்தைச் சொல்ல கடிதத்துடன் சென்றான் ஹரி.

* * * * *

அன்று ஒன்றாம் தேதி. ஆபீஸில் உமா நுழைந்ததும் அவளுக்கு முதலில் குட்மார்னிங் கூறியது ஹரிதான். சிரித்தபடியே பதில் குட்மார்னிங் சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தாள். புதியவர்களின் வருகையால் ஆபீஸ் கொஞ்சம் கலகலப்பாக இருப்பதாகப் பட்டது. அவர்களுக்கு வேலை கற்றுத் தரும் பழையவர்களின் கர்வம் கலந்த குரல் சற்று எடுப்பாகவே கேட்டது.

உள்ளே சென்று தன் வழக்கமான வேலைகளை முடித்துக் கொண்டு நாராயணனை அழைத்தாள்.

''யெஸ் மேடம்'' என்றபடி உள்ளே வந்தவனிடம் ''எல்லாரும் வேலையில் ஜாய்ன் பண்ணியாச்சா?'' என்றாள்.

''ஓ யெஸ். எவ்ரிபடி ஹாஸ் ஜாய்ன்ட்.''

''ஓ.கே. அவங்களுக்கு மூணு மாசம் வரை புரொபேஷன் பீரியட்னு போட்டிருக்கு இல்லையா? அதனால் அதுவரை அவர்கள் வேலையில் ஏதாவது தவறு செய்தால் அவர்களிடம் எரிந்து விழுந்தோ, திட்டவோ கூடாது என்று எல்லாரிடமும் நான் கூறினதாக கூறுங்கள். தவறுகளை மென்மையாக சுட்டிக்காட்டி அவர்களுக்கு திருத்தி கற்றுத் தரச் சொன்னதாகவும் சொல்லுங்கள்.

''ஓ.கே. மேடம்.''

நாராயணன் வெளியேறியதும் உமா தன்னுடைய வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள். நேற்று மாலை அடிக்கப்பட்ட கொட்டேஷன்கள் அவள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை படித்து ரேட்டை பரிசீலித்து அதற்கான எக்ஸ்பென்ஸ் எஸ்டிமேஷன் மொத்தத்தில் எவ்வளவு பர்ஸன்ட்டேஜ் என்று கணக்கிட்டுத் திருப்திகரமாக இருக்கவே கையெழுத்திட்டு அனுப்பிவிட்டு அந்தமாதத்து ஸ்டேட்மென்டுகளைப் பார்வையிடத் தொடங்கினபோதுதான் கையில் ஒரு ஃபைலுடன் உள்ளே நுழைந்தான் ஹரி.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''மானேஜர் சார் உங்ககிட்டே கொடுக்கச் சொன்னார்'' ஃபைலை அவனிடம் கொடுத்துவிட்டுத் தயங்கி நின்றான்.

''என்ன?'' என்று கேட்டாள்.

''வந்து.... அன்னிக்கு இன்டர்வியூவில் அப்படி மரியாதையில்லாமல் பதில் சொன்னதற்கு தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். எங்கே வேலை கிடைக்காமல் போய் விடப் போகிறதோ என்ற பயத்தில் அப்படி பேசிவிட்டேன். பிறகு வருத்தப்பட்டேன்.''





''இட் இஸ் ஆல்ரைட்'' புன்னகையுடன் கூறினவள் அவனைப் பார்த்தாள். சிறிது விரிந்த காது மடல். மூக்கு நுனி. ஓ! அப்பா ஞாபகமே வருகிறது. அவனிடம் ஏதாவது கேட்க வேண்டும்போல் இருந்தது. ஆனால் நேரமில்லை. வேலை தலைக்குமேல் இருக்கவே பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தாள்.

பிறகு என்ற சந்தர்ப்பம் பின் அன்றிலிருந்து ஐந்தாம் நாள்தான் வந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. பத்து மணிக்கு மேல் வந்த அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தரை செக் பண்ண எடுத்தாள். புதிதாகச் சேர்ந்திருந்தவர்கள் பெயர்கள் தனியாகவும் மற்றவர்கள் பெயர் தனியாகவும் இருந்தது. புதியவர்கள் பெயரை பார்த்துக் கொண்டு வரும் போது ஹரியின் பெயருக்கு எதிரில் அன்று லீவ் போடப்பட்டிருந்ததைக் கண்டு திகைத்தாள். உடனே நாராயணனிடம் அது பற்றி கேட்டபோது, அவன் —

''யெஸ் மேடம். அவன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதனால் ஆஸ்பத்திரிக்கு போய்விட்டு மத்தியானம் வருவதாக போன் செய்து சொன்னான். ஐ திங்க் ஹரி வில் கம் இன் தி ஆஃப்டர்நூன்'' என்றான்.

''ஓ.கே. இஃப் ஹரி கம்ஸ், உடனே என்னிடம் அனுப்புங்கள்'' என்று சொன்னாள்.

சரியாக ஒரு மணிக்கு வந்த ஹரி நாராயணன் சொன்னதன் பேரில் உடனே உமாவின் அறைக்குள் நுழைந்தான். அவன் வருகையை உடனே இன்டர்காம்மூலம் தெரிந்துக் கொண்ட உமா உள்ளே நுழைந்தவனை கம்பீரமாக நிமிர்ந்து பார்த்தவள் துணுக்குற்றாள்.

கன்னிச் சிவந்த முகம், கலைந்த தலை, தூக்கமில்லாத கண்கள், புழுதி படர்ந்த ஷர்ட். ரொம்பவும் அலைந்து களைத்து வந்திருந்தவனிடம் என்ன சொல்வது. ஒரு மாதம் முடிவதற்குள் லீவு எடுக்கக் கூடாது என்று சொன்னால் வேதனைப் படுவானோ? சட்! அவன் வேதனைப்படுவானே என்று பரிதாபப்பட்டால், இந்தப் பதவியில் அமர எனக்குத் தகுதி கிடையாது. ரூல்ஸ் ஆர் ரூல்ஸ். இப்படி நினைத்தவள், அவனைப் பார்த்து, ''இதோ பாருப்பா, இந்த கம்பெனி ரூல்ஸ் பிரகாரம் ஒரு மாசத்துக்கு ஒருநாள் தான் புரொபேஷன் பீரியட்ல எடுக்கலாம். அதுகூட சேர்ந்து முப்பது நாள் முழுதாகக் கழிந்த பிறகுதான் எடுக்க ஆரம்பிக்கலாம். அப்படி சேர்ந்த முப்பது நாட்களுக்குள் லீவு எடுத்தால் ஒரு நாள் சம்பளமும் இரண்டு நாள் லீவும் கட்டாகும். இந்த விதிமுறை தெரியுமா? அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டரைப் படித்துப் பார்த்தாயா?'' கொஞ்சம் கடினமாகவே பேசிவிட்டாள்.

''யெஸ் மேடம். தெரியும். தெரிந்துதான் எடுத்தேன். வேறு வழியில்லை. மன்னித்து விடுங்கள்.''

"எனி ஹவ் அரை நாள் லீவு நீ எடுத்ததற்காக உனக்கு ஒரு நாள் லீவும் அரை நாள் சம்பளமும் குறைக்கப்படும். நீ போகலாம். வருத்தமாக வெளியே வந்தான். அவனுக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. அதற்காக கம்பெனி விதிமுறைகளை மீறி இவனை மன்னிக்க முடியாது. அப்படிச் செய்தால் மற்றவர்களும் இதே தவறை வேண்டுமென்றே கூடச் செய்யலாம். ஒருக்காலும் அதை அனுமதிக்க முடியாது. இருந்தாலும் அவனிடம் அப்படி கண்டிப்பாக பேசியிருக்கக் கூடாதோ? அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. எதற்காக இந்தப் பையனுக்காக தன் மனது இரக்கப்படுகிறது என்று.

மணி ஐந்து அடிக்க பத்து நிமிடம் முன்பு ஹரி மறுபடியும் ஒரு பைலுடன் உள்ளே நுழைந்தான். டேபிளில் பைலை வைத்துவிட்டு தலை குனிந்தபடி மௌனமாகத் திரும்பிச் சென்றவனைக் கூப்பிட்டு, "இந்தரை மணிக்கு என்னை வந்து பார்" என்று கூறினவள் அவன் முகத்தில் ஒரு திகைப்பும் பயமும் பரவியதைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

(தொடரும்)

புக் ஷெல்ஃப்

தெய்வ வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவ்வப்போது அருளிய வாக்குகளைத் தொகுத்துத் தந்துள்ளார் கௌசிகன். இளையோருக்கும், இல்லத்தரசிகளுக்கும், வீட்டுத் தலைவருக்கும் தேவையான அறிவுரைகள் உள்ளன. விலை ரூ. 20/—

மனமும் பிரார்த்தனையும்

சோர்ந்து கிடக்கும் மனிதனைத் தட்டி எழுப்பிப் புத்துணர்ச்சி ஊட்டி வாழ்க்கையில் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் சிந்தனைகளைத் தந்துள்ளார் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி. விலை ரூ. 9/—

அறுசுவை உணவை ஆக்கிப்பாருங்கள்

ஏராளமான சமையல் குறிப்புக்களை இல்லத்தரசிகளுக்கு உதவும் வகையில் கொடுத்திருக்கிறார் லட்சுமி மணி. விலை ரூ. 10/—

கண்ணதாசன் கதம்பம்

வெவ்வேறு பத்திரிகைகளில் பல்வேறு காலக் கட்டங்களில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய கதை, கட்டுரை, கவிதைகளைச் சுவைபடத் தொகுத்துள்ளார் இராம. கண்ணப்பன். விலை ரூ. 15/—

மேலே குறிப்பிட்ட நான்கு புத்தகங்களின் பதிப்பாளர் — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை—17.

கருத்தடைக் களஞ்சியம்

பெண்களுக்குப் பெரும் பிரச்னையான கருத்தடை முறைகளைப் பற்றிச் சில யோசனைகளைக் கூறுகிறார் டாக்டர் எஸ். ஆறுமுகநாதன். விலை ரூ. 2.50/—

சாந்தி நிலையம், 108, உஸ்மான் சாலை, சென்னை—17.

வீட்டில் இருந்தபடியே சுலபமாகச் சம்பாதிப்பது எப்படி?

வித்தியாசமான முறையில், மனத்துக்கு உற்சாக மூட்டும் வகையில் புதிய பல தொழில்களைப் பற்றி அறிவுரை கூறுகிறார் ரமணியன். விலை ரூ. 5/—

பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, சென்னை—17.

பொது அறிவுக் கதம்பம்

கலைக்களஞ்சியம் பாணியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பல செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார் திரு. சம்பந்தம். விலை ரூ. 23/—

ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம், ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை

கவிஞர் கண்ணதாசன் தனக்கே உரிய தமிழில் சுப்ரபாதத்தை மொழி பெயர்த்தும், திருப்பாவைக்கு விளக்க உரையும் தந்துள்ளார். விலை ரூ. 5/—

வாழ்க்கை என்னும் சோலையிலே.....

தன்னுடைய சமகாலத்து விஷயங்களின் விமரிசனம், தன் வாழ்க்கை அனுபவங்கள் எனப் பலவற்றைப் பற்றி எழுதியுள்ளார் கவிஞர் கண்ணதாசன். விலை ரூ. 5/—

மேலே குறிப்பிட்ட மூன்று புத்தகங்களின் பதிப்பாளர்கள் — கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை—17.

ஸாம வேத ஸந்த்யா வந்தனம்	விலை ரூ. 1.50/—
ருக் வேத ஸந்த்யா வந்தனம்	விலை ரூ. 1.75/—
ஸூதக ஆசௌச விளக்கம்	விலை ரூ. 1.25/—
ஔபாஸனம், பிரம்மயக்ஞம், சிராத்த நியமங்கள்	விலை ரூ. 1.25/—

பரம்பரையாக வரும் நியம நிஷ்டைகளைக் கூறி எப்படிச் செய்ய வேண்டும் என விவரிக்கும் நூல்கள்.

பவானி புக் சென்டர், ஸ்டேஷன் ரோடு, சென்னை—33.

சிறந்ததையே வாங்கிடுபவர் தேர்ந்தெடுப்பது, காளி காப்பர் பாட்டம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்



ஏனென்றால், நிகரில்லாத பல அனுகூலங்களை ஒன்றாக அளிப்பது காளி மட்டுமே.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ("எவர்சில்வர்") வகை பாத்திரங்களில் உன்னதத்திற்கு 35 வருடங்களுக்கும் மேலாக பெயர்பெற்ற காளி பிராண்ட், இப்போது காப்பர் பாட்டம் பாத்திரங்கள் தயாரிப்பில் நெ. 1 ஆக விளங்குகிறது.

காளி காப்பர் பாட்டம் சமையல் பாத்திரங்கள் தரும் நன்மைகள்:

* **துரித சமையல்.** சமையல் வேலைநேரம் பாதியாகக் குறைகிறது. காரணம், வெப்பம் கடத்துவதில் (வெள்ளிக்கு அடுத்தபடியாக) செம்பு உலோகமே மிகச்சிறந்த திறனுள்ளது.
* **குறைவான எரிபொருள் செலவு.** சமையல் முழுவதையும் மிதமான (LOW) தீ மட்டத்திலேயே செய்துவிடலாம். சூடு ஒரேசீராக பரவுவதால், உணவு சில பகுதிகள் வேகாதிருப்பதும் தீய்ந்துபோவதும் தவிர்க்கப்படுகிறது.
* **நீடித்திருக்கும் பெறுமானம்.** ஸ்டெயின்லஸ் ஸ்டீலும் செம்பும் அணுவிற்கு அணு இணைந்திருப்பதால், அவற்றின் கூட்டு இணைபிரியாதது. மேலும், பாத்திர வெளிச்சுவரின் அடிப்பகுதி களைச்சுற்றிலும் கூட செம்பு "மூடியிருப்பதால்", தீயின் வெப்பம் முழுமையாகப் பயன்படுகிறது; சூடு ஒரேசீராகப் பரவுகிறது.

இல்லத்தரசிக்கு அதிக ஓய்வு நேரம். வேலைக்குச் செல்லும் பெண்ணிற்கு துரித சமையல் அனுகூலம். அனைவருக்கும் எரிபொருள் செலவில் சேமிப்பு, பக்குவமான சமையல், பணத்திற்கு நீடித்தகால பலன்.

kali

போலிகள் ஜாக்கிரதை. 'Kali' டிரேடு மார்க் உள்ளதா என கவனிக்கவும்.

kali

விற்பனை ஏஜென்ட்:

ஸ்ரீ வித்யா ஏஜன்ஸீஸ், கும்பேசுவரர் சன்னதி, கும்பகோணம்-612001

ரீஜனல் ஏஜன்ட்டுகள்:

சம்மு & கோ., த.பெ. எண் 1049, ம.கா. ரோடு, எர்ணாகுளம், கொச்சின்-682 011 போன்: 31139
ஈஸ்ட் இண்டியா கம்பெனி, 3, அம்ரிதா பேனர்ஜி ரோடு (காளிகாட் P.O. எதிரில்), கல்கத்தா-700 026 போன்: 471840
விக்டரி மெட்டல்ஸ், 101, கேத்வாடி மெயின் ரோடு, பம்பாய்-400 044 போன்: 380 075/354507.
J.C. மன்சந்தா, 15A/38, கரோல் பாக், புது தில்லி-110 055 போன்: 562019.

M85.91 Tm.

ரூ. 500 மட்டுமே கட்டுங்கள்

PREETT

HEAVY DUTY MIXER GRINDER
450 Watts 30 mins.



வட்டி இல்லாத தவணை முறை

ரூ. 100 வீதம் 6 மாதத் தவணை


கம்பெனி நிர்ணயித்த விலை ரூ. 1,100

2 வருட உத்திரவாதம்
ஆயுள் கால இலவச சர்வீஸ்

சுந்தர் ஸ்டோர்ஸ்,
68, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 17. Tel.: 443834
ராதிகா & கோ.,
288/6, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-21.
ஸ்ரீ பார்வதி [illegible]
127, பீட்டர்ஸ் லேன், பீட்டர்ஸ் ரோடு சந்திப்பு, Tel.: 475658.
90, பீட்டர்ஸ் ரோடு, புதுக் கல்லூரி ஷாப்பிங் - காம்ப்ளெக்ஸ்.
226, புரசைவாக்கம் நெடுஞ்சாலை.
10, I மெயின் ரோடு, கஸ்தூரிபாய் நகர், அடையார் பஸ் டெப்போ எதிரில்.
பல்லவா & கோ.,
247, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-21. Tel.: 554185
ஸ்ரீ மதுரை மீனாக்ஷி & கோ.,
291/1, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-21.
ராதா எலெக்ட்ரானிக்ஸ்
160, நெல்சன் மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை-94, Tel.: 424929.
மீனாட்சி வெல்லக்ஸ் மார்ட், சிதம்பரம். Tel.: 2625
ஆனந்தகுமார் T.V. சென்டர், கடலூர் N.T.
கோலாகா காஸ் சர்வீஸ், மெயின் பஜார், நெய்வேலி. Tel.: 3001.
ராஜன் கார்ப்பரேஷன், பாலக்கரை, திருச்சி-8. Tel.: 24893.
ஸ்ரீ சத்யா ஏஜென்ஸீஸ், தெப்பகுளம், திருச்சி-2, Tel.: 29260.
டி.ஜி.எஸ். ஏஜென்ஸீஸ், தஞ்சாவூர். Tel.: 1406
எ. வெங்கட்ராமன், மயிலாடுதுறை. Tel.: 2753.
எ.எம். சோமசுந்தரம் செட்டி & பிரதர்ஸ் காரைக்கால். Tel.: 305.
மெட்ரோ பர்னிச்சர் மார்ட், நாகப்பட்டினம். Tel.: 741.
ஷண்முகநாதன் ஸ்டோர்ஸ், புதுக்கோட்டை, Tel.: 2716.

ஸ்ரீ அழகர் என்டர்பிரைஸஸ் (ஸ்ரீ செந்தில் ஏஜென்ஸீஸ்) மதுரை, Tel.: 33652.
ராஜன் கார்ப்பரேஷன், மதுரை. Tel.: 34645 pp.
இதாலயா என்டர்பிரைஸஸ், டி.எம்.எச். காம்பௌண்ட், மதுரை, Tel.: 22996.
ஜெயலக்ஷ்மி ஸ்டோர்ஸ் ராஜபாளையம், Tel.: 2725.
என்.ஆர். வேலாயுதராஜா, ராஜபாளையம், Tel.: 2680.
பாரத் டிரேடர்ஸ், திண்டுக்கல், Tel.: 4822.
கே.கே. முத்தையா நாடார் & சன்ஸ்., ராமநாதபுரம், Tel.: 396.
தேவதாஸ் [illegible] கார்ப்பரேஷன் திருநெல்வேலி, Tel.: 4209.
ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ், வடக்கு பஜார், பாளையங்கோட்டை, Tel.: 5706.
வி.பி.ஆர். மெட்டல் கம்பெனி, சேலம், Tel.: 65580 p.p.
ராஜன் கார்ப்பரேஷன் (சுந்தரம் ஆஸ்பத்திரி அருகில்) சேலம், Tel.: 62623.
ஜெம் ஏஜென்ஸீஸ், ஐந்து ரோடு, சேலம்.
காமதேனு ஏஜென்ஸீஸ், தர்மபுரி, Tel.: 244.
கே. பாலகுருவ செட்டியார் சன்ஸ் & கோ., ஈரோடு, Tel.: 74189.
அபிராமி ஸ்டோர்ஸ், போஸ் பஜார், ஓசூர்.
ஹோம் நீட்ஸ் கோஸ்பேட், வேலூர்.
தனலக்ஷ்மி என்டர்பிரைஸஸ், திருவண்ணாமலை, Tel.: 2313 p.p.
டி.பி. நாகராஜ செட்டி, திருப்பத்தூர்.
டி.பி.ஜெ. ஏஜென்ஸீஸ், திருப்பத்தூர், Tel.: 440.

ஏதோ ஒரு மிக்ஸி அல்ல — இது ஒரு ttk தயாரிப்பு



தலைநகரில் தூதுவர்களின் திருமதிகள்

"ஸ்ரீமதிதூதுவர்கள்" தலைநகரில்எப்படித் தங்களது ஓய்வு நேரங்களைச் செலவழிக்கிறார்கள் என்பதை ஆராய முற்படும் முன் தய்வான் ஏஜண்ட் ராம ஸ்வரூப் பற்றிய உளவு முதல் பக்கச் செய்தியாகியது. இதனால் சற்று தாமதமும் ஏற்பட்டது. கிடைத்த ஓரிரு பேட்டிகள் ரத்து செய்யப்பட்டன. 69 எம்பஸிக்களைக் கொண்டிருக்கும் சாந்தி பத் என்னும் இடம் சாணக்யபுரியில் இருக்கிறது. அனைத்து தேசங்களும் தங்களது தூதுவர்களைக் குவித்துள்ள பிரதான, "பிரிஸ்டீஜியஸ்" இடம் இந்த ஏரியாவை சாணக்யபுரி என்று அழைக்க வேண்டும் என ஜவஹர்லால் நேரு ஆசைப்பட்டார். இந்த ஏரியாவை குட்டி "உலகம்" என்றே கூறலாம். காரணம் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற தேசியக் கொடிகள் கம்பீரமாகப் பறப்பதைக் காணலாம்.

இந்திய அரசின் அனுமதியின்றி எந்தத் தூதுவரும் பொதுக் கூட்டத்திலோ, மாநிலங்களின் விஜயத்தையோ, வெளிநாட்டு பிரயாணத்தையோ ஏற்க முடியாது. இப்படியான பழக்க வழக்கத்தை நமது 160 தூதுவர்களும் வெளிநாடுகளில் கடைபிடிக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் "திருமதி தூதுவர்களது" ஓய்வு நேரமல்ல, முழுநேரமும் "போர்" அடிக்காதா? இதனால்தான் குடியரசு கொரியாவின் தூதுவர் தனது மனைவி திருமதி எஸ். எச். ஷின் அவர்களை ஹிந்தி கற்றுக் கொள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்.

அமெரிக்க தூதுவரின் "திருமதியோ" கணவனுக்குத் தெரியாது ஐ. என். ஏ. என்னும் புகழ்பெற்ற மார்க்கெட்டிற்கு மாலை நேரத்தில் காரை ஓட்டிக் கொண்டு காய்கறி

வாங்கிட வருகிறான். போலீஸ் பாதுகாப்புடன்.

ஒரு சில "எம்பசிகள்" தங்களது பணியாளர்களை விட்டே "சப்ஜி" பெற்றுக் கொள்கிறார்கள். அந்த எம்பசியின் எம்பிளாயிகள்தான் "ராஜா" மாதிரியிருப்பார்கள். காரணம் அந்தத் தூதுவரகம் மற்றவைகளைவிட "ஏழ்மை எம்பசி." பாண்டிச்சேரியை விடக் குட்டியான பரப்பளவு ஜனத்தொகை உள்ள தேசங்கள் தங்களது தூதுவரகங்களுக்கு என்ன பணத்தொகை அனுப்ப முடியும். இதுபோன்ற குட்டி எம்பசிகளின் போர்டுகளை கோல்ப் லிங்ஸ் என்ற இடத்தில் வசந்த் விஹார் எனும் இடத்தில் காணலாம். ஆக, கோல்ப் லிங்ஸ் அருகே இருக்கும் கான் மார்க்கெட், சுந்தர் நகர் மார்க்கெட்டில் மாலை 5 மணி ஆனால் போதும். பற்பல உலக பாஷைகளைக் கேட்கலாம். ஐந்து ஆறு பேர்கள் கும்பலாக வருகிறார்கள். ஒரு குடும்பமே வந்தால் போதும் C. D. போட்ட காரில். கடைக்காரர்கள் எண்ணுவார்கள், "இன்று நரி முகத்தில்தான் விழித்தோம்" என்று.

டென்மார்க் எனும் தேசத்தின் தூதுவரகம் 2. கோல்ப் லிங்கில் உள்ளது. தனது மனைவி குழந்தைகளுடன் எம்பசிக்கு அருகே இருக்கும் அம்பாசிடர் ஓட்டலினுள் தோசப் பிரகாஷிற்கு வந்து, "தோசை, உப்புமா"வை பிரதி ஞாயிறு மாலை சாப்பிடுவதைக் காணலாம்.

இதே போன்று இத்தாலி, அயர்லாந்து, மெக்ஸிகோ தேசங்களின் தூதுவர்களின் மனைவிகள் லோதி கார்டனில் குளிர்காலமான டிசம்பர் — ஜனவரியில் சூடான வெயிலில், உட்கார்ந்து கொள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் வருகிறார்கள். ஒரு சில கூட்டு சேரா நாடுகளின் தூதுவரகங்களில் இரவு நேர சாப்பாடு "காக்டேல்" நடைபெறும். இதில் கலந்து கொண்டு அவரவர்கள் தங்களது வீடு திரும்ப நள்ளிரவு ஆகிறது. இந்த காரணத்தால் தூதுவரகங்களின் பாதுகாப்புக்காக இருக்கும் தில்லி போலீசாரின் தனிப் பிரிவு சிறந்த செக்யூரிட்டி அளிக்கிறது.

பெரிய பெரிய தேசங்களின் தூதுவர்கள் சாதாரணமாக வெளியே வர மாட்டார்கள். உதாரணமாக அமெரிக்க அம்பாசிடர், ரஷ்ய அம்பாசிடர் சைனா தூதுவர். இவர்களெல்லாம் பிரதமரின் பார்ட்டி, ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் விருந்து, குடியரசு தினம், சுதந்திர தினம் போன்றவைகளில் கலந்து கொள்வார்கள், தங்களது "திருமதிகளுடன்." ஜூனியர் பணியாளர்கள், அதாவது முதல் இரண்டாவது மூன்றாவது செயலாளர்கள் போன்ற பதவியிலிருப்பவர்களும் தங்களது எம்பசி உண்டு, வெளியுறவுத் துறை அமைச்சரகத்தில் நடக்கும் கூட்டம் உண்டு என்று இருப்பார்கள்.

அமெரிக்க ரஷ்ய மற்றும் 24 பெரிய எம்பசிகளின் ஊழியர்களின் குழந்தைகள் படிக்க, அவரவர்களது மொழியில், பள்ளிக்கூடமே இருக்கிறது. ஆனால் உயர் படிப்புக்கு அந்தந்த தேசங்களுக்குத்தான் போக வேண்டும். சைனா தூதுவரின் "திருமதி" தங்களது தேசக் குழந்தைகளுக்கு சைனா எம்பசியின் பின்புற மூன்று மாடிக் கட்டிடத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று இரண்டு மூன்று மணிநேரம் பாடம் சொல்லித் தருகிறார்.

முஸ்லிம் தேச தூதுவர்கள் தங்களது குடும்ப சமேதராய் வெள்ளிக்கிழமைகளில் ஹஜரத் நிஜாமுதீன் மஜீத், ஜிம்மா மஜீத் போன்ற தொலைவில் உள்ள இடங்களில் நமாஸ் படிக்கப் போவார்கள்.

வடஇந்திய சூழ்நிலையில் பல தூதுவர்களின் துணைவியார்கள் இருப்பதால், அவர்களுக்கு "சமோசா, பேல்பூரி" பிடிக்கிறது.

பெரும்பாலான தூதுவரகங்களில் அம்பாசிடர், கான்சல் ஜெனரலின் செகரட்டரிகள், இந்தியப் பெண்மணிகளாக இருக்கிறார்கள். குறிப்பாக, எந்த தேசத்தின் தூதுவரகங்களுக்குச் சென்றாலும், விசா செக்ஷனில் இரண்டு மூன்று இந்தியப் பெண்மணிகள்.

நம் நாட்டு ஐ. எப். எஸ். (இந்தியன் ஃபாரின் சர்வீஸ்) அதிகாரிகள்தானே பெரும்பாலான தேசங்களில் இந்தியத் தூதுவர்களாக இருக்கிறார்கள். ஊழியர்களையும் எடுத்துக் கொள்ளலாம். குடும்பத்துடன் சென்று மூன்று அல்லது ஐந்து வருடம் வெளிநாட்டில் தங்க இந்திய அரசு அனுமதிக்கிறது. இந்தியா திரும்பி வந்தால், இருந்த தேசத்தின் பழக்கவழக்கம், பாஷைகள் சற்று சுலபமாக வருகிறது. அந்த தேச சமையலையும் ருசிகரமாகச் செய்திட தயாராகி வருகிறார்கள் பல இந்தியத் தூதுவர்களின் துணைவியர்.

பிரேமா.

நாம் பயன்படுத்தும் பூட்ஸ்களில் ஓரங்கள் தேய்ந்து வெண்மையாக இருக்கும். இதை எவ்வளவு பாலிஷ் செய்தாலும் வெண்மை மாறாமல் இருக்கும். முட்டையிலுள்ள வெள்ளைக் கருவைச் சிறிது எடுத்து வெண்மையான பகுதியில் பூசிவிடுங்கள். கொஞ்சம் உலர்ந்தபின் அதன்மீது பாலிஷ் போடுங்கள். ஆஹா! இப்போது வெண்மை மறைந்து புதிதாகிப் பளபளக்குமே!

— எஸ். விஜயா சீனிவாசன்.

அம்மாடியோ ! அம்மாவோடு ஆசையுடன் விளையாட நேரமே போதாதே !

உங்கள் அருமைச் செல்வத்தின் எதிர்கால வாழ்வுக்கு
இன்றே போலியோ சொட்டு மருந்து அளித்திடுங்கள்

உங்கள் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து இளம்பிள்ளை வாத நோயிலிருந்து பாதுகாப்பு அளித்திடுங்கள்

வார நாட்களில்


மாலை : 3 முதல் 6 வரை ஞாயிறு : விடுமுறை

மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ சொட்டு மருந்து டிரிபிளாண்டிஜென்
மற்றும் மீஸில்ஸ் வாக்ஸின்

அளிக்கப்படும் இடம் :

தமிழ்நாடு தாதா பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

10, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் நகர்,
(ஆயிரம் விளக்கு மசூதி அருகில்) சென்னை-600 086.
தொலைபேசி : 470656 479603



PALGHAT GROUP COMPANIES

No. 16, Nana Street, T. Nagar, Madras 600 017.

Helps to save and solve Financial needs to its Members.

POSITION AS ON
31.12.85

1. Deposits	3,07,90,800
2. Investment in Banks & Buildings	67,55,100
3. Chits in Force	3,51,50,000
4. No. of accounts	19,206

OUR BUSINESS

FIXED DEPOSITS
RECURRING DEPOSITS
CASH CERTIFICATES
SAVINGS DEPOSITS
CHITS

LOANS AS PER RULES ON:
CHITS
DEPOSITS
BUILDINGS AT MADRAS

MARCHING TOWARDS GOLDEN JUBILEE

GROUP COMPANIES

PALGHAT PERMANENT FUND LIMITED
PALGHAT CHIT FUNDS (P) LIMITED
PALGHAT CREDIT CORPORATION

BRANCHES: MADRAS - COIMBATORE - PALGHAT - HYDERABAD

"கல்கி"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	78–00
ஆறு மாதச் சந்தா	ரூ.	39–00

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	190/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	95/-

"மங்கையர் மலர்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	36/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	18/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	86/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	43/-

"கோகுலம்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	70/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	35/-

சந்தா தொகையை M.O. அல்லது I.P.O. அல்லது டிமாண்டு டிராப்டு மூலம் அனுப்ப வேண்டுகிறோம்.

மானேஜர் * கல்கி * சென்னை-600032



சொல்ல

* சென்ற இதழில் 'எங்கள் மக்கள் கலைஞர்' பற்றிய பேட்டி கண்டேன். பந்தாக்களுடன், கர்வத்துடன் இருக்கும் திரை உலக அண்ணேக்கள் மத்தியில் ஒரு அபூர்வ கலைஞர். சிறப்பாகப் பேட்டியை வெளியிட்ட உமக்கு எம் பாராட்டுதல்கள்.
விஜய் ஸ்ரீனிவாசன், நெருஞ்சிப்பட்டு.

* இதுவரை—என் குழந்தைகளை இஷ்டப்படி வளர்த்து கஷ்டப்படுகிறேனே என்று கண்கலங்கும் தாய்மார்கள் கட்டாயம் கனகவல்லி சாரங்கபாணியின் கருத்துக்களின்படி இளந்தளிர்களை வளர்த்து வருவார்களேயானல், இல்லந்தோறும் இன்பம் பொங்குமே!
அலமேலு கண்ணன், வடுவூர்.

* தன் கணவனின் குடும்பத்திற்காகக் கவலைப்படும் மீராவை ரகுநந்தன், அவள் கணவனுக இருந்தும், "வேறே ஜாகை பாத்துக்க" என்று சொல்வதும், அதற்குப் பதிலடியாக 'என் வீடு, எனக்கும் உரிமையிருக்கு' என்று மீரா சொல்வதும் நூற்றில் ஒரு வார்த்தை.
கோபாலகிருஷ்ணன், மார்த்தாண்டம்.

* 100 யோசனைகள் எங்களுக்குப் பயனுள்ளது மட்டுமல்ல, பத்திரப்படுத்த வேண்டியதும் கூட. அபார்ஷன் கட்டுரை பல சந்தேகங்களை நிவர்த்தி பண்ணியது.
திருமதி. எம். சித்தாமணி, சிதம்பரம்.

* 'சுபா'வின் இனிய 'வெள்ளிக் கனவுகளை' 'வியாழக்கிழமை' அன்றுப் படித்தேன்! சூப்பர்ப்....!
இடவை இராஜன், திருவிடைமருதூர்.

* இவர்களைத் தெரியுமா? சில அரசியல் தலைவர்களைப் படத்துடன் குறிப்புக்களைக் கொடுத்து கண்டுபிடிக்கச் சொன்னது பாராட்டத்தக்கது. இதைப் போன்று இன்னும் எத்தனையோ தெரிந்த நபர்கள் ஆனல் தெரியாத செய்திகள் இருக்கின்றன. அவர்களைப் பற்றியும் போடுங்களேன். பாராட்டத் தக்க முயற்சி.
கே. ருக்குமணி, சென்னை—2.

* சமையல் எண்ணெய்கள் பற்றிய விவரமான தகவல்கள் எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. தகவலுக்கு நன்றி.
ப்ரியதர்சினி, கும்பகோணம்—1.

* குழந்தைகளுக்கு மருந்தில் இனிப்பைக் கலந்து ஊட்டுவது போல, இம்மாத இதழில் 'பூச்சிகள் தொல்லை'—பொறுக்க முடியலை' கட்டுரையை அனைவருக்கும் புரியும்படியாக திரு. எஸ். டி. ராகவன் மிக அருமையாக, நகைச்சுவை ததும்ப, எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்? மிகவும் உபயோகமுள்ள, போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய கட்டுரை.
எஸ். ராஜகோபால், திருச்சி—16.

* சென்ற இதழ் இம்மாத இல்லத்தரசி போட்டியில் பரிசுபெற்ற குறிப்புக்களில் முதல் பரிசு பெற்ற குறிப்பின் தலைப்பு மாறிப் போய்விட்டதே! 'தயிர் முறுக்கு' என்று இருந்திருக்க வேண்டும். சரிதானே!
லலிதா திருக்கடவூர்

(சரிதான். தவறாகக் 'கோதுமை தயிர் வடை' என மாறிப் போயிருக்கிறது. தவறுக்கு வருந்துகிறோம். ஆ—ர்.)

ஆரம்பிக்கிறோம்

முதல் பரிசு: * 'கார்டன்' புடவை

நீர்நெல்லிக்காய் பொரியல் (பொடி மாஸ்)

தேவையான பொருட்கள்:

நெல்லிக்காய் நல்ல பெரியதாக — 25,
உருளைக்கிழங்கு — 2,
தேங்காய் — 1 மூடி,
ப. மிளகாய் — 6 (அ) 8,
இஞ்சி — 1 துண்டு,
தேங்காய் எண்ணெய் — 4 டீஸ்பூன்,
பெருங்காயம் — சிறிதளவு,
மஞ்சள் தூள் — சிறிது,
பெரிய வெங்காயம் — 1,
க. பருப்பு — 1 டீஸ்பூன்,
உ. பருப்பு — 1 டீஸ்பூன்,
கடுகு — சிறிது,
கருவேப்பிலை — 1 கொத்து,
மசாலா தூள் — ½ டீஸ்பூன்,
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

நெல்லிக்காயை வாங்கி, 2 நாள் முன்பே கொதிக்கும் வெந்நீரில், உப்பு தேவையான அளவு போட்டு, அதில் நெல்லிக் காயைப் போடவும். 2 நாள் நன்றாக ஊறி உப்பு பிடித்திருக்கும். அதை எடுத்து நீரை வடிகட்டி இட்லி வேகவிடுவது போல ஒரு ஐந்து நிமிடம் வேக விடவும். ரொம்பவும் வேகக் கூடாது. வெந்ததும் எடுத்து உதிர்த்து, கொட்டைகளை எடுத்து விடவும். பிசையக் கூடாது. உதிர்க்கவும்.

உருளைக்கிழங்கு தோலை நீக்கி வேகவிட்டு உரித்து வைத்துக் கொள்ளவும். பெரிய வெங்காயத்தைத் தோலுரித்து சிறிய, சிறிய துண்டங்களாக நறுக்கவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு போட்டு, வெடித்ததும் உ. பருப்பு, க. பருப்பு போட்டுச் சிவந்ததும், மஞ்சள் தூள் போட்டு நறுக்கிய இஞ்சி, ப. மிளகாய், கருவேப்பிலை எல்லாம் போட்டு, வெங்காயத்தையும் போட்டு வதக்கவும்.

நன்றாக வதங்கியதும், உரித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு, நெல்லிக்காய் இவற்றைப் போட்டு, ஐந்து நிமிடம் வதக்கவும். சிறிதளவே உப்பு போடவேண்டும். பெருங்காயத்

இம்மாத

தூள், மசாலாத் தூள் இவற்றைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கி, இறக்கி வைத்து, தேங்காயைத் துருவிக் கொட்ட வேண்டும்.

பூரி, சப்பாத்தி, சாப்பாடு எல்லாவற்றிற்கும் தொட்டுக் கொள்ளச் சுவையாய் இருக்கும்.

— கமலா, சேலம் — 16.

இரண்டாம் பரிசு: * டீ செட்

பச்சை சுண்டைக்காய் பொரியல்

தேவையான பொருட்கள்:

பச்சை சுண்டைக்காய் — ¼ கிலோ,
கடுகு — 1 ஸ்பூன்,
மிளகாய் வற்றல் — 2,
உளுத்தம் பருப்பு — 1 ஸ்பூன்,
சிறிது பெருங்காயம்,
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

நாட்டுச் சுண்டைக்காய் (அ) பச்சைச் சுண்டைக்காயை நசுக்கித் தண்ணீரில்

இம்மாத இல்லத்தரசிக்கு நடுவர்கள்:
ராதா நகர் மாதர் சங்கம்,
குரோம்பேட்டை,
சென்னை — 44.

* ராஜலட்சுமி, கீதா, வசந்தி, சுலோசனா, சரோஜா, கல்யாணி, ராதா, விஜயலட்சுமி.



லேசாக அலச வேண்டும். இதை நீர், புளி விட்டு வேக வைத்து நீரை வடித்துவிடவும். பிறகு வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு, அது காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், மிளகாய் வற்றல் இவற்றைத் தாளித்துச் சுண்டைக்காயைப் போட்டு, அதனுடன் வேக வைத்த துவரம் பருப்பு, தேங்காய் சேர்த்து நன்றாக வதக்க வேண்டும்.

—பிரேமா கோபாலன், சென்னை—47.

மூன்றாம் பரிசு: * குடை.

வெந்தயப் பொரியல்

தேவையான பொருட்கள்:

வெந்தயம் — 3 ஸ்பூன்,
து. பருப்பு — 2 ஸ்பூன்,
கடலை பருப்பு — 1 ஸ்பூன்,
ப. மிளகாய் — 4 அ 5,
தேங்காய் — அரை மூடி,
தாளிக்க — கடுகு,
கருவேப்பிலை, துளி இஞ்சி,
ருசிக்குத் தேவையான அளவு உப்பு.

செய்முறை:

வெந்தயம், பருப்பு வகைகளை ஒரு மணி நேரம் ஊற வைத்து அடி கெட்டியான பாத்திரத்தில் வேக வைக்கவும். (குக்கரில் வைத்தால் மிகவும் குழைந்து விடும். வெந்தயம், பருப்புகள் மலர்ந்து இருக்கும் பருவம் வரை வேக விடவும். அவ்வாறு வேகவிடும் பொழுது தண்ணீருடன் சேர்ந்து (வற்றாமல்) உதிரி உதிரியாக ஆகும்வரை அளவாகத் தண்ணீர் விடவும்.

வெந்த பிறகு இலுப்பச் சட்டியில் 4 (அ) 5 ஸ்பூன் கடலை எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் கடுகு, இஞ்சி, கருவேப்பிலை, மிளகாய் மஞ்சள் பொடி சிறிது தாளித்து வெந்தயம், பருப்பு வகைகளையும் போட்டு உப்புத்தூள், துருவிய தேங்காய் போட்டுக் கிளறி இறக்கி விடவும்.





* மீனாட்சி. * கமலா.





* வசந்தா. * பிரேமா.

இல்லத்தரசி

தேவையானால் எலுமிச்சம்பழம் ஒரு மூடி ஆறிய பிறகு பொரியலில் பிழிந்து கொள்ளலாம்.

—மீனாட்சி சுந்தரம், கோவை—19.

ஆறுதல் பரிசு: * குடை.

வதக்கிய கேப்ஸிகம்

தேவையான பொருட்கள்:

குடை மிளகாய் (பெரியது)— 1½ கிலோ,
உருளைக் கிழங்கு — ½ கிலோ,
வெங்காயம் — 3,
சீரகம் — ½ டீஸ்பூன்,
தேங்காய்த் துருவல் — 2 டேபிள் ஸ்பூன் அளவு,
எண்ணெய் (அ) நெய் — 3 டேபிள் ஸ்பூன்,
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

குடைமிளகாய்களை அலம்பித் தலையை வெட்டி விதைகளை எடுக்கவும். பிறகு உள்ளே உப்பைத் தடவி வைக்கவும். உருளைக்

கிழங்கை வேக வைத்து தோலை நீக்கி, நசுக்கி வைத்துக் கொள்ளவும்.

வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக்கி வைக்கவும்.

எண்ணெயைச் சூடாக்கி சீரகத்தையும், வெங்காயத்தையும் போட்டுப் பொன்னிற மாக வதக்கவும். வதக்கியபின் நசுக்கிய உருளைக்கிழங்கு, தேங்காய்த் துருவல் இவை களைப் போட்டு நன்றாகக் கலக்கவும். இதனை உருண்டைகளாக்கி வைத்துக் கொள்ளவும்.

இந்த உருண்டைகளை மிளகாய் கொள்ளும் அளவு உள்ளே வைத்து வாணலி யில் எண்ணெய் விட்டு நன்றாக வதக்கி இறக்கி வைத்துக் கொள்ளவும்.

— வசந்தா ராகவன், மைசூர்.

ஆறுதல் பரிசு: * குடை

முளை கட்டின பாசிப் பயறு பொரியல்

தேவையான பொருட்கள்:

முருங்கைக் கீரை — ஆய்ந்தது,
முளைகட்டிய பாசிப் பயறு — 1 கப்,
காரட் துருவல் — 1 கப்,
வேக வைத்துத் துருவிய பீட்ரூட் — 1 கப்,
வெள்ளரிக்காய்த் துருவல் — 1 கப்,
பொடியாகநறுக்கியபெரியவெங்காயம்—
பொடியாக நறுக்கிய பெரிய வெங்காயம் — 2,
பச்சை மிளகாய் — 5 (அ) 6,
துருவிய தேங்காய் — ½ மூடி,
எண்ணெய் — 2 தேக்கரண்டி,
எலுமிச்சை — 1 மூடி,
உப்புத் தூள், உளுத்தம் பருப்பு.

செய்முறை:

எண்ணெய் விட்டுகடுகு,உளுத்தம்பருப்பு, தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய், உப்புப் போட்டு வதக்கி, கழுவி, நீர் வடித்த முருங்கைக் கீரையைப் போட்டு,(வெள்ளரிக் காய் துருவும்போது கிடைக்கும்) நீர்விட்டு மிதமான வெப்பத்தில் 10 நிமிடம் வேக விடவும். பிறகு, பாசிப்பயறு, காரட், துருவலைப் போட்டு 5 நிமிடம் வேகவிட்டு, பீட்ரூட் வெள்ளரித் துருவலைக் கொட்டி கலந்து எலுமிச்சையைப் பிழிந்துவிட்டு தேங்காய்த் துருவலைக் கொட்டி இறக்கி விட வைக்கவும்.

இதே கலவையில் வேகவைத்த இரண்டு உருளைக்கிழங்கை பிசைந்து கலந்து உருட்டி, கடலைமாவில் தோய்த்து போண்டாவாகப் போட்டுமாலைநேரச் சிற்றுண்டிக்குக்கொடுக் கலாம்.

— சுப்புலட்சுமி, மங்களூர்.





ஒடிசலான தோற்றமும் ஆபத்துதான்

நீங்கள் உடலைச் சதையைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று நடுத்தர வயதுப் பெண்கள் நினைத்துச் சாப்பாட்டைக் கட்டுப்படுத்துவது சகஜம். ஆனால், சில, சிறிய வயதுப் பெண்கள், தாங்கள் எப்போதும் மிக ஒடிசலான தோற்றத்துடன், ஒயிலாகத் தோன்ற வேண்டும் என்று நினைத்துப் பட்டினி கிடந்து ஒல்லியாக முயற்சிப்பது மிக அபாயகரமான நிலை.

முகவாய்க் கட்டை எலும்பு தூக்கிக் கொண்டு, கன்னத்தின் எலும்புகள் மேலே எழும்பி, கண்கள் உள்ளே போய், கழுத்து நீண்டு, பாவாடையை கட்டிக் கொள்ள முடியாத அளவுக்கு இடுப்பு சுருங்கி — இது தான் தற்கால யுவதிகளின் கற்பனையில், ஒயிலாகக் காட்சியளிப்பது போலும். ஒட்டி உலர்ந்துபோய் எலும்புக் கூடாகக் காட்சி அளிக்கும்போது, தாங்கள் ஏதோ தேவதைகளாகக்காட்சி அளிக்கிறோம்என்றஎண்ணத்தில் பட்டினி கிடந்து வதைத்துக் கொள்ளும் யுவதிகள் பலர் உண்டு.

படுத்தால் எழுந்திருக்கவே முடியாத அளவுக்குச் சக்தியற்று, சற்று வேகமாக அடி எடுத்து வைத்து நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் மூச்சு வாங்கும் நிலை ஆகியவை ஏற்படும் அளவுக்கு உடலைப் பட்டினிப் போட்டு, நாளடைவில் பசி என்பதே இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்நிலைக்கு ஆளாகும் ஒரு நபரை, 'அனொரெக்சியா' **(Anorexia)** எனும் கோளாறு பிடித்துள்ளது எனலாம்.

இந்நோய் பீடிக்கப்பட்டிருப்பதின் அடையாளங்கள்: (1) பசியின்மை, வாந்தி எடுத்து விட வேண்டும் என்று எப்போதும் உள்ள உணர்வு. (2) பலஹீனமாக இருந்தும், அது பற்றி மற்றவருக்குத் தெரியக் கூடாது என்று, தான் சாதாரணமாக இருப்பதாகவே காண்பித்துக் கொள்ளும் முயற்சி. தன் வாழ்க்கையில், தன் பாலுணர்வின் பங்கு பற்றிய ஒரு இனம் புரியாத பயம் தன் மனத்தில் இருப்பதாலேயே சில பெண்கள், தம் உடம்பு முழு வளர்ச்சியடைந்து, தாம் கர்ப்பம் அடையும் நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து.

முதன் முதலாக இந்நோய்க்குச் சிகிச்சை அளித்தவர் டாக்டர் ரிச்சர்டு மார்ட்டன் எனும் ஆங்கிலேயர். இந்நோய் பீடித்திருப்பதற்கான அறிகுறிகள் கொண்ட 17 வயதுப் பெண்ணை இவரிடம் அழைத்து வந்தார்கள். அவளுக்கு மாதாந்திரத் தீட்டு நின்று போயிருந்தது. பசியின்மை, எடை குறைவு, மலச்சிக்கல், மிகக் குறைந்த உடல் உஷ்ணம், மிக மெலிந்த உடல் போன்ற அறிகுறிகள் இருந்தன. சிகிச்சைக்கு வந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு அவள் இறந்துவிட்டாள். அமெரிக்காவில் மட்டும் சுமார் 1:00,000 நபர்கள் இக்கோளாறினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இதில் 15 சதவீதம் நபர்கள் நிச்சயமாக மரணமடைவார்கள் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இங்கிலாந்திலும் இந்நோய் வேகமாகப் பரவி வருவதாகக் கூறப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்த வரையில், சரியான புள்ளி விவரங்கள் இல்லாமையால், நிச்சயமாக, இக்கோளாறு பற்றி ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

இக்கோளாறு இருப்பவர்கள், திடீரென்று தங்களுடைய எடையைப் பற்றி மிகவும கவலைப்படுவார்கள். விரல்களைத் தொண்டையில் விட்டு வாந்தியை வருவித்துக் கொள்கிறார்கள். மலமிளக்கிகளையும் **(Laxatives)** அதிகமாகச் சிறுநீர் போகச் செய்யும் **(Diureties)** மாத்திரைகளையும் உட்கொள்கிறார்கள். தங்கள் உடல் எடையைக் குறைக்க முயற்சிக்கிறார்கள்.

அனெரெக்சியா நோயாளிகளில் சுமார் 92 சதவீதம் பெண்கள்தான் என்று கூறப்படுகிறது. மிக ஒல்லியாக, ஒயிலாகக் காட்சியளிக்க வேண்டுமென்று ஆசை கொண்டவர்கள் இந்நோய்க்கு ஆளாகிறார்கள். "பூப்படைந்த பெண்ணிடம் யாராவது, "நீ குண்டாக இருக்கிறாய்" என்று தற்செயலாகக் கூறிவிட்டாலும், உடனே அதை சீரியஸாக எடுத்துக் கொண்டு, பட்டினி இருக்கத் தொடங்கிவிடுவாள். 'அத்தகைய பருவம் அது' என்று ம்யூனிச் நகரிலுள்ள மாக்ஸ் ப்ளாங்க் சைக்கியாட்டிரிக்ஸ் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த புரொபசர் டெட்லவ் ப்ளூக் **(Detlav Ploog)** என்பவர் கூறுகிறார்:



அனெரெக்சியாவால் பீடிக்கப்பட்ட பெண்களைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நடத்திய போது — அப்பெண்களில் கணிசமான எண்ணிக்கையினர், பெற்றோர்களால், குறிப்பாகத் தாய்மார்களால் — மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டவர்கள் என்றும், அவ்வாறு செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டதால், தமக்குத் தாமே முடிவெடுக்கும் சக்தியை இழந்துவிட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் செல்லம் கொடுப்பதில் தவறில்லை. ஆனால் வளர்ந்த பிறகும் செல்லம் கொடுத்து அவர்களை இன்னமும், குழந்தைகளாகவே கருதி, அவர்கள் தாங்களாகவே எடுக்க வேண்டிய முடிவுகளைத் தாமே எடுத்து, எதற்கும் வேறு ஒருவரைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடுகிறார்கள். இது மிகப் பெரிய தவறாகும்.

சில வீடுகளில், "என் பெண்ணுக்குச் சமையலறை எங்கிருக்கிறது என்றே தெரியாது, காப்பி சாப்பிட்டுவிட்டு டபரா டம்ளரைக் கீழே வைக்கக் கூடத் தெரியாது"



என்று மிகப் பெருமையாகக் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவதால், ஏதோ, தாங்கள் உயர்ந்த அந்தஸ்துடையவர்கள் என்பது போன்ற உணர்வை அவர்கள் பெறுகிறார்கள் போலும். மேலும் பெண், பிள்ளை எதிரிலேயே அவர்களைப் பற்றி, "அவர்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று மற்றவர்களிடம் கூறும் பெரியவர்கள் மிகப் பெரிய தவற்றைச் செய்கிறார்கள்.

"ஓ என் பெண் ஆண்பிள்ளை மாதிரிதான்" என்று கூறிப் பெருமையடைகிறார்கள். அப்பெண், வளர்ந்து பெரியவளாகும் போது நடையுடை, பாவனை மனப்போக்கு இவை எல்லாவற்றிலும் ஆண்பிள்ளை மாதிரியே இருப்பதற்கு முயற்சிக்கிறாள். குழந்தைகள், வளர்ந்து பெரியவர்களாகி தம் வீட்டிலுள்ள சூழ்நிலைக்கு மாறுபட்ட சூழ்நிலையில் வசிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, என்ன செய்வது, எப்படி முடிவெடுப்பது என்று வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள். எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கக் கூடியவர்களாகத் தங்கள் குழந்தைகளைப் பெரியோர்கள் வளர்க்க வேண்டும்.

இளம் பெண்கள் மாத்திரம் இக்கோளாறினால் பீடிக்கப்படுகிறார்களே, அது எப்படி? நமது சமூக, கலாச்சார மதிப்பீடுகளே இதற்குக் காரணம். அழகுள்ள பெண்கள் போற்றப்படுகிறார்கள். இரண்டும்கெட்டான் வயதுப் பெண்களே இக்கோளாறினால் அதிகமாகத் தாக்கப்படுகிறார்கள்.

ஆதாரம்: சயன்ஸ் டுடே

அனுப்பியவர்: ராஜி.

சமூக கண்ணோட்டத்தில் தாய்க்கென்று ஒரு கற்பனை உருவம் உண்டு. புஸ்தகங்களிலோ, டீ.வி. யிலோ, விளம்பரத்தில் தாயை எப்படி பிரதிபலிக்கிறார்கள் என்று பாருங்கள். தாய் விதவிதமாகச் சமைத்துப் போடுவாள். பிள்ளை நல்ல புதுச்சட்டையை சகதியாக்கிக் கொண்டால், சிரித்துக் கொண்டே கழற்றி உடனே சோப்புப் போட்டு பளிச்சென்று தோய்த்து உலர்த்துவாள். குழந்தைகளுடன் பந்து விளையாடுவாள், தோட்ட வேலை செய்வாள், பாதி ராத்திரியில் உடம்பு சரியில்லாத குழந்தைக்கு மார்பு தடவி விடுவாள். இது எல்லாம் செய்யும் பொழுதும் பளிச்சென்று உடையுடுத்து அலங்காரம் செய்து கொண்டிருப்பாள். சிரித்த முகத்துடன் இருப்பாள்.


இப்படியெல்லாம் நிஜ வாழ்வில் இருப்பது முடியாத காரியம். அதை ஒருமுன் உதாரணமாகக் கொண்டு நம்மால் அப்படி இருக்க முடியவில்லையே என்று நினைத்து ஏங்குகிறோம் இல்லையா?

நம் தாய்மை இயற்கையானதல்ல

தாயாக இருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கும். நிறைவைக் கொடுக்கும். உண்மைதான். ஆனால் இது சில சமயங்களில் தான், தினம், தினம், நாள் பூராவும் இந்த நிலை நீடிக்காது. சில சமயம் ஏமாற்றமாகவும், சில சமயம் சோர்வூட்டுவதாகவும், அலுப்பாகவும் சில சமயம் ஆத்திரமாகவும் இருக்கும்.

குழந்தை பிறந்த உடன் ஏற்படுகிறதே அது தான் அதிகமான இன்பத்தைக் கொடுக்கும் நேரம்.

ஒன்பது மாதங்களாகக் காத்திருந்து, குழந்தை ஒழுங்காகப் பிறக்க வேண்டுமே, பிரசவம்சுலபமாகஇருக்கவேண்டுமேஎன்று கவலைப்பட்டதெல்லாம் போய் முழுசாக அழகாக எதிர்பார்த்தது போல் ஆணோ, பெண்ணோ பிறந்து, எல்லோரும் வந்து





பார்த்து, குழந்தையின் லக்ஷணங்களை தாய், தந்தை, தாத்தா, பாட்டியுடன் ஒப்பிட்டு சிலாகித்து, குழந்தைக்கு அன்பளிப்பும், தாய்க்கு மலர்ச் செண்டும் கொடுத்துச் செல்லும்பொழுது, தான் பெரிதாக ஏதோ சாதித்து விட்டோம் என்ற மதர்ப்பில் தோன்றும் பெருமிதம் பின்பு அந்தத் தாய்க்கு தொடருமா என்பது சந்தேகம்தான்.

முதல் மாதத்தில் குழந்தையை வீட்டுப் பெரியவர்களும், மற்றவர்களும் கவனித்துக் கொள்வார்கள். பச்சை உடம்பு என்று தாய் பரிந்து பரிந்து உணவளித்து, எண்ணெய் ஸ்நானம் செய்வித்து, பெண்ணை அதிகம் அலுங்காமல் நலுங்காமல் கவனித்துக்கொள்வாள். சுலபமாக பிரசவம் ஆகியிருந்தால் கூட 'ரொம்ப கஷ்டப்பட்டாள்' என்று வந்தவர்களிடம் விவரிப்பாள். (கண் பட்டுவிடக் கூடாதே என்பதற்காக) குழந்தையை எடுத்து விடுவதைத் தவிர புதுத்தாய்க்கு வேறு வேலையில்லாமல் பார்த்துக் கொள்வாள்.

தன்னையே நம்பி, தன்னால் மட்டுமே ஜீவித்திருக்கும் குழந்தையை அணைத்துக் கொள்ளும் பொழுது தாய்க்கு ஏன் ஒரு மதர்ப்பு ஏற்படாது?



ஆனால் இது எல்லோர்க்கும் ஏற்படும் நிலையல்ல. எதிர்பார்ப்புகளிடையே பிறக்காமல், மாமியார் விரும்பும் பிள்ளையாக இல்லாமல், எந்தப் பாட்டியையோ கொண்டு நிறம் மட்டாக, பிறந்த மாத்திரத்தில் பளிச்சென்று இல்லாமல், தோல் சுருங்கி, உடல் குறுகி, கண் இடுங்கி, சின்னக் குரங்குக் குட்டி போல் இருக்கும் குழந்தையைப் பார்த்ததும், பல தாய்களுக்கு அன்பு பீறிட்டு விடாது., பாசம் பெருகிவிடாது. அப்படி இருக்கும் என்று எதிர்பார்த்த பெண், தனக்கு அப்படியில்லையே என்ற குற்ற உணர்வு கொள்ளலாம்.

குழந்தை பிறந்த உடன் ஏற்பட்ட அந்த ஆனந்தமும், புதுமையும் சில நாட்களில் குறைந்து விடும். பிறகு குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் முழு நேர வேலைதான் மிஞ்சும்.

இதெல்லாம் ஒரு பெண்ணின் மனநிலையை பெரிதும் பாதிக்கும். குழந்தையை நாள் முழுவதும் கவனித்துக் கொள்ளும் பொழுது ஒரு சலிப்பேற்படும். இதுதான், நல்ல தாய் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, ஒரு தோல்வி மனப்பான்மையில் காரணமில்லாமல் அழுகை வரும். தான் தனியாக, கையில் கதறும் குழந்தையுடன் நிற்பதுதான் தெரியும்.

இதற்குமேல், யாராவது "நீதான் முதல் முதல் பிள்ளை பெற்று விட்டாயோ, ஒவ்வொருத்தர், நாலு, அஞ்சு பெற்று வளர்க்கவில்லையா? எங்கம்மா ஆனா போட்டுக் கொண்டான்?" என்று ஏசும் போது அழுகைதான் பொங்கும்.

இப்படி ஏற்படும் பயம், தன்னம்பிக்கையற்ற நிலை இவை எல்லாம் நியாயமானதே. எந்தப் பெண்ணும் இந்தப் பதவிக்குப் பயிற்சி பெற்றவளல்ல. எந்தத் தாயாலும் அவ்வளவு பொறுப்பாக, அவ்வளவு சாமர்த்தியமாக அவ்வளவு அன்பாக, அவ்வளவு ஆர்வத்துடன் நாள் முழுவதும் செயல்பட முடியாது.



சலவை தோறும் பொலிவு... சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது !

வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... போராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது! அடைந்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS SU 331 2517 TM



CLARION/SS/85101

சில சமயங்களில், ஏதோ இயந்திர கதியில் குழந்தையுடைய தேவைகளை கவனிப்பது, வீட்டு வேலைகளைச் செய்வது, என்று நாள் முழுவதும் போய்விடும். குழந்தையைக் கொஞ்சக் கூடத் தோன்றாமல் அசதியாக இருக்கும். குழந்தையுடன் ராத்தூக்கம் முழித்து, பகலிலும் ஓய்வு இல்லாமல் இருந்தால், எவருக்குமே சோர்வாக அலுப்பாகத் தான் இருக்கும். இதே நிலையில் இருந்து அனுபவப்பட்டவர்களால் மட்டுமே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

குழந்தையைக் குளிப்பாட்டி, பால் கொடுத்து விட்டு, தூங்க வைத்துவிட்டு, பின்பு தானும் சாப்பிட்டுச் சமையலறையை ஒழித்துவிட்டு வந்து படுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தால், அதற்கு முன்பே குழந்தை விழித்துக் கொண்டிருக்கும். புத்தகங்களில் போட்டிருப்பது போல் சின்னக் குழந்தை கூட இரண்டு மணி நேரம் சேர்ந்தாற் போல் தூங்காது.

குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும், வீட்டு வேலையில் உதவி செய்யவும், ஆள் இல்லாவிட்டால், வீட்டை முன்போல் சீராக வைத்துக் கொள்ள முடியாமல், மாலையில் கணவன் வருமுன் அலங்காரம் செய்து கொண்டு நிற்க முடியாமல், வந்தவருக்கு காப்பி கூட உடனே கலந்து கொடுக்க முடியாமல், புதுத் தாய், தடுமாறி மனம் தளர்ந்து தான் போவாள்.

இப்படிப்பட்ட உணர்வுகளிலிருந்து விடுபட உங்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படச் செய்ய, உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, உங்களுக்காகவே உங்கள் சந்தோஷத்திற்காகவே, சிறிது நேரம் ஒதுக்குவது மிகவும் அவசியம்.

1. வாரத்தில் ஒரு பாதி நாளோ, ஒரு மாலைப் பொழுதோ, ஒரு விதமான கட்டாயமான வேலையும் செய்யாமல், உங்களுக்காகவே ஒதுக்குங்கள். இந்த நேரத்தில் உங்களுக்குப் பிடித்த, நீங்கள் ஆசையாக விரும்பிச் செய்ய வேண்டும் என்று எண்ணும் காரியத்தைச் செய்யவும். என்ன செய்ய வேண்டும் என்பதை முன் கூட்டியே தீர்மானித்து, அதில் முழுக் கவனத்தையும் செலுத்தி அனுபவித்துச் செய்யவும்.

2. மற்ற தாய்களுடன் கலந்து பேசி, பிரச்னைகளை விவாதித்து, எப்படித் தீர்க்க வேண்டும், தீர்க்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

3. நீங்கள் வீட்டிலேயே இருந்தாலும், குழந்தைகள் சிறிது பெரியவர்களான பின்பு, என்ன செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களோ, அதில் அக்கறை எடுத்துக் கொண்டு, அதைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

4. மாதம் ஒருமுறையாவது குழந்தைகள் இல்லாமல், ஆசையாகத் திட்டமிட்டு, கணவருடன் மட்டும் வெளியே போகவும்.

5. உங்கள் வயதொத்தவர்களுடன் மட்டுமல்லாமல், எல்லா வயது தாய்களுடனும் நெருங்கிய தொடர்பு கொள்ளவும். அவர்களின் அனுபவம் பல சமயங்களில் உங்களுக்கு உதவும்.

6. குடும்பத்துடன் லீவுக்கு உல்லாசப் பயணம் செல்லுகையில், அது உங்களுக்கும் சந்தோஷத்தை அளிக்க வல்லதாக, உங்கள் நித்திய வேலைகளிலிருந்து ஒரு மாறுதலாக இருக்கக் கூடியதாக உங்களுக்கும் ஓய்வு அளிக்கக் கூடியதாக இருக்கும்படி தேர்ந்தெடுக்கவும்.

7. உங்கள் குழந்தைகளின் வயதொத்த குழந்தைகள் உள்ள மற்ற தம்பதிகளைத் தெரிந்து கொள்ளவும். ஒருவர் பொறுப்பில் மற்றவர் சமநேர அடிப்படையில், குழந்தைகளை விட்டுவிட்டு நிச்சிந்தையாக வெளியே செல்லச் சௌகரியமாக இருக்கும்.

8. உதவிக்கு ஆள் இல்லாமல் எல்லா வேலையையும் நீங்களே செய்ய முயலாதீர்கள். இது உங்கள் உடல், மனநிலையை பெரிதும் பாதிக்கும். வீட்டில் கணவன், மற்றவர்களையும் பொறுப்பில் பங்கேற்கச் செய்யுங்கள்.

9. குழந்தை வளர்ப்பில், தாய்மையில், உங்களால் முழுமையடைய முடியுமா, முடியாதா என்பது முக்கியமில்லை. அடைந்தால் சந்தோஷம்தான். ஆனால் இது முடியாவிட்டால், தலையைப் பிய்த்துக் கொள்ளாதீர்கள். அப்படி உணர வேண்டும் என்று உங்களைக் கட்டாயப்படுத்தாமல், உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய செயலை, வடிகாலைத் தேடிக் கொள்ளுங்கள்.

— ஜெயா. வி. ராமன்.



நடிகைகளுக்கு மட்டும்...

அடிக்கடி ஒப்பனை செய்து கொள்வதால் பெண்களின் சருமத் தோல் விரைவில் கெட்டுவிடுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு தினமும் நல்ல தேனை அவர்களுடைய முகங்களிலும் கழுத்திலும் தடவிக் கொண்டு ஒரு அரை மணி நேரம் கழித்து முகத்தையும் கழுத்தையும் குளிர்ந்த நீர் விட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும். பன்னீரால் கழுவினால் இன்னும் நல்லது.

- பங்கஜம்

கோடுகள் கோலமாவதில்லை

14

காற்று படு சுகமாய் வீசுகிறது. ஒற்றிக் கொடுக்கிறது. தலைமயிரைக் கலைக்கிறது. புடவைத் தலைப்பை அலைக்கிறது. தொட்டுத் தொட்டு விளையாடி சூழ்நிலையில் ரஸவாதம் செய்கிறது.

''அழகாயில்லே.....'' கேட்டுவிட்டு அவளைத் திரும்பிப் பார்க்கிறான் பிரபு.

நிலா வெளிச்சத்தில் கீழே மைசூர் நகரம் கனவு பட்டணமாய் மினுக்குகிறது. அடிவாரத்திலேயே லலித மஹால் பாலஸ் ஒரு பொம்மை மாளிகையாய் சமைந்திருக்கிறது. தூ....ரத்தில் அவன் சுட்டிக்காட்டிய திசையில் கண்ணம்பாடி அணைக்கட்டின் மேல் விளக்குகள் கோத்து வைத்த முத்து வரிசையாகக் கண்ணடிக்கின்றன.

காற்றில் மெல்லிய சிலிர்ப்பு.

'ஹம்ம்ம்' மென்று தோளை குலுக்கி சிலிர்க்கிறாள் காதம்பரி.

''சில்லுங்கறதா.....''

அந்தக்குரலில் இருந்தகரிசனத்தில் அவள் திரும்பி அவனை நிமிர்ந்துப் பார்க்கிறாள். மங்கிய வெளிச்சத்தில் கருவிழிகள் ஒளிருகின்றன. சற்றேவிரிந்த உதடுகளின் வளைவை, தோளின் சரிவை..... லேசான ஒளி எடுத்துக் காட்ட, அவன் பார்க்கிறான். இவள் மட்டும் அவனுக்குக் கிடைப்பாளேயானால்....

கிடைப்பாளா.....

இவள் கிடைப்பாளா....

இவ்வளவு அருகாமையிலிருந்தும், எட்டாதத் தொலைவிலிருப்பது போன்ற பிரமையைத் தோற்றுவிக்கிறாளே, எப்படி சாத்தியமாகிறது இவளுக்கு.....!

''எப்பவுமே ரொம்ப அவசியமானாதான் பேசறதா. பாக்கியெல்லாம் ம், ஆமாம், இல்லே.... அவ்வளவுதானா. சாமுண்டி ஹில்ஸ்லே இந்த மாதிரி ஒரு பர்பெக்ட் ஸெட்டிங்குக்கு கூட்டிண்டு வந்திருக்கேன். இங்கே அதைக் கூடக் காணுமே....''

அவள் ஒருமுறை சிரித்துவிட்டு, மறுபடி இயற்கையில் லயிக்கிறாள். இந்த நிலவு, நிசப்தம், காற்று, அமைதி, தூரத்து விளக்குகள்.... எத்தனை அழகு!

''ஆனாயோசிச்சுப்பார்க்கச்சே,உன்னோட இந்த சுபாவங்கூட எனக்குப் பிடிச்சிருக்குன்னுதான் தோணறது. அதுவே உனக்கு ஒரு ஸ்பெஷல்.... ஸ்பெஷல்.... கவர்ச்சியாயிருக்கு.....''

''என்ன சொன்னீங்க....''

''லுக் ஹியர், யூ ஆர் நாட் எ டீன் ஏஜர்.... நான் சொல்றது புரியலையா....?''

புரியாமல்....? அவனுக்குத்தான் அவளைத் தெரியாது.

சட்டென்று அவள் உணருகிறாள். அவன் கை அவள் கையின்மேல் படிவதை. ஒரு நிமிடந்தான். படக்கென்று விலக்கிக் கொண்டு அவனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையில் மாறுதல் இருக்கிறது. இதுவரை தெரிந்தசகஜம்மறைகிறது. இதென்னவம்பு... அவனை முதன்முதல் தனியாக சந்தித்ததே இன்றுதான். அதற்குள் கூப்பிட்டானே யென்று கூட வெளியே வந்தது தப்போ....!

''போகலாமா'' வென்று கைப்பிடிச் சுவரிலிருந்து எழுந்திருக்கிறாள்.

அவன் உட்கார்ந்தேயிருக்கிறான்.

''ஏன் காதம்பரி.... இன்னமும் உனக்குப் புரியாமலிருக்க முடியாது. இத்தனை நாள் யார் கிட்டவும் சடுபடாத என் மனசு.... எனக்கே தெரியல்லே.....''

அவள் பேசவில்லை. தலைகுனிந்து நின்றபடியே இருக்கிறாள்.

மறு பேச்சின்றி எழுந்து காரைத் திறக்கிறான் பிரபு. வளைந்து வளைந்து கீழே வருகையில் மாறி மாறித் தெரியும் தூரத்து விளக்குகளையே பார்த்துக் கொண்டு வருகிறாள் காதம்பரி.

ஊருக்குள் வந்ததும்,

''இந்திர பவனுக்குப் போகலாமா.... லெட் அஸ் ஹாவ் டின்னர் டுகெதர்....'' என்றபோது, அவன் குரல் பழைய, அவளுக்குப் பரிச்சயமான பிரபுவினுடையதாயிருக்கிறது.

நல்ல விடாக்கண்டன்!

''ஐயோ, என் டின்னர் ரெடியா பண்ணி வெச்சிருக்கே.....'' என்கிறாள்.

அவன் பேசாமல் திரும்பி பக்கவாட்டில் அவளைப் பார்க்கிறான்.

அந்தப் பார்வை உறுத்த, அவள், ''நாம் அதையே ஷேர் பண்ணிக்கலாமே. நீங்களும் வீட்டிலேயே சாப்பிடுங்களேன்'' என்கிறாள் மெள்ள.

காதில் வாங்கிக் கொண்டானோ.....

கார் நேராக சாயாஜி ரோடைக் கடந்து இந்திர பவன் வாயிலில் போய்தான் நிற்கிறது. எதுவும் சொல்லாமல் இறங்கிப் போகிறான் பிரபு. அவள் உட்கார்ந்திருக்கிறாள்.

தான் அசட்டுத்தனமாய் நடந்துக்கொள்வதாய் தோன்றுகிறது. ஒன்று பழகினால் தைரியமாக நிமிர்ந்து நேராகப் பழக வேண்டும். இல்லையா, 'இதெல்லாம் இங்கே வெச்சுக்காதே. ஸாரி'யென்று சொல்லிவிட்டு கப்சிப்பென்று விலகி இருக்க வேண்டும். இரண்டுமில்லாமல் எதற்காக ஒரு இரண்டுங்கெட்டான் பெண்ணைப் போல்..... அவள் படிப்பென்ன, பார்க்கும் தொழிலென்ன.... யாரிடமாவது பர்மிஷன் கேட்க வேண்டுமா? ஒரு ஸ்திர புத்தி, செயல் இல்லாமல் தயங்கி, மென்று விழுங்கிக் கொண்டு. இதென்ன நடத்தை.... யூ ஆர் பிஹேவிங் லைக் எ ஊன் ஏஜர் என்றே அவன் சொன்னால்கூடத் தப்பில்லையே.....

கோமளா வரதன்

கையில் ஒரு பேப்பர் பை பொட்டலத்தோடு வேகமாய் வருகிறான் பிரபு.

''போரடிச்சுடுத்தா.... தோசையை உடனே லேட் பண்ணிட்டான்....'' என்று வெகு சகஜமாய் சொல்லிக் கொண்டே பொட்டலத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு, ஏறிக் கொள்கிறான்.

வீட்டில், ரஸம் அவனுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. 'மைசூர் ரசம், மைசூர் ரசம்னுவாங்க. தமிழ்நாட்டு ரசம் ரொம்ப நல்லாயிருக்கே.....''யென்று ருசித்துசாப்பிடுகிறான். சற்றுமுன் நடந்தது, கேட்டது எதுவும் அவனுக்கு நினைவிலிருப்பது போலவே தோன்றவில்லை.



வாயில் கதவைத் திறந்து குட் நைட் சொல் கையில், அவள் தோள் மேல் அவன் கை படிகிறது. அவள் விலக முயற்சிக்கையில் அழுத்துகிறது. அவள் அவன் கண்களுக்குள்ளே 'இதெற்கெல்லாம் என்ன அர்த்த' மென்றுதேடுவதுபோலபார்க்கிறுள். அவன் அசையவில்லை. தனக்கே உரிய அந்த மோகனமான புன்னகையோடு, அவளையே தீர்க்கமாய் பார்க்கிருன். இமைக்கவில்லை. கடைசியில் அவள்தான் பார்வையை விலக்கி, தாழ்த்திக் கொள்கிருள்.

'நார்மலா இரேன், காதம்பரி. அப்புறமா போன் பண்ணறேன். குட் நைட்....' தடுமாற்றம் சிறிதுமில்லாமல் சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் வெளியேறுகிருன் விபு.

கதவைச் சாத்திவிட்டு நேராக படுக்கையில் போய் விழுகிருள் காதம்பரி.

சந்தேகமேயில்லை. இனியும் சம்சயத்துக்கு இடமேயில்லை. அவன் பார்வையில், பேச்சில் எத்தனை திடம்! என்னவோ அவள் இசைவைத் தெரிந்துக் கொண்டு விட்டவன் போலவே ஒரு தன்னம்பிக்கை.....

ஆனல்.... ஆனல்.... அவளுக்கு இதெல்லாம் வாய்க்குமா..... பிணைப்புகளே வேண்டாம். உறவு என்னும் வாக்கியமே உதவாது என்றுதானே விதித்திருக்கிறது அவளுக்கு. சங்கிலியிலிருந்து தனியாய் கழன்று விழுந்து விட்ட ஒற்றை வளையம்போல்..... நீள நெடுஞ்சாலையில் ஒண்டியாய் வளர்ந்துவிட்ட தனி மரம்போல்....

ஆம்! தோப்பாகாத தனிமரந்தான் அவள். தனி மரந்தான்.....

இல்லாவிட்டால், ஒருவனை வரித்தாளே, அந்த வாழ்க்கை ஒழுங்காக அமைந்திராதோ. ஆரம்பத்திலிருந்தேவா கசப்பான அனுபவமாக அமையும். ஒவ்வொரு சம்பவமும் நினைவில் இன்னமும் துருத்திக்கொண்டு நிற்கிறதே......

கல்யாண தினத்தன்றே....

தாத்தாவின் நாசூக்கே அலாதி. வெகு நயமாக ஓசைப்படாமல் காரியங்களை செய்வார். அப்படியே கல்யாணத்தையும் நடத்தினர்.

முதலிரவு!

டாக்டருக்கும் மேலே படித்தவளானலும் பெண். அதுவும் எந்த மாதிரி சூழ்நிலையில் வளர்ந்தவள். ஒரு தாம்பத்யத்தின் ஊடல், கூடல், சல்லாப பிணக்கு விவகாரங்களை இலை மறைவு காய் மறைவாய் பார்த்து அறிந்துக் கொள்ளக்கூட பிரமேயமேயில்லாமல் வேதாந்தியான தாத்தாவால் வளர்க்கப்பட்டவள்.

முதன் முதல் அவர்கள் தனியாக சந்திக்கிருர்கள். ஏட்டுப் படிப்பில், எப்படியெல்லாம் சித்தரித்துக் காட்டப்பட்ட சந்தர்ப்பம் அது. தயங்கித் தயங்கி மேலே கூரையையும் அவனையும் ஓரக் கண்ணுல் பார்த்து, வளர்த்துக் கொண்டிருந்த கற்பனைகளின் சுகத்தில் தோய்ந்து கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தாள். போதாக்குறைக்கு காலையிலிருந்து பார்த்தவர்களெல்லோரும் அவர்கள் ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்து வியந்து வியந்து பாராட்டியதில் பொங்கி ததும்பிக் கொண்டிருந்த மனம்.....

கீழுதட்டைக் கடித்து நித்யா தன்னைப் பார்த்த பார்வையில் அர்த்தங்களைப் படிக்க முயன்று கொண்டிருந்த வேளை.

''நான் என்னமோ நினைச்சேன். உங்க தாத்தா கில்லாடிதான்....'' என்ருள். எதற்காகச் சொல்கிருன். அவளுக்கு அவனைத் தேர்ந்தெடுத்து வளைத்துப் போட்டுவிட்டதற்கா....

அப்போதுதான் அறையை கவனித்தாள். மிகையில்லாமல், கவனித்தால்தான் தெரியும்படி இருந்த அலங்காரம். புது விரிப்புகள், கீழே பட்டுப் பாய், கூஜாவில் பால் அருகில் பழத் தட்டு, ஊதுவத்தியின் நறுமணம், மெத்தை விரிப்பின்மேல் உதிரியாக மல்லிகை மலர்கள்.... எப்போது, எப்படி, அவளறியாமல் அவள் அறையையே அலங்கரித்தார் அவர்.....

''ரூமெல்லாம் ஜோடிச்சு.... ம்! முதலிரவுக்கு ஏற்பாடு பண்ணியிருக்காராக்கும்,


உங்களுக்கு போதுமான அளவு ஓய்வு நேரமில்லாததால், பலகணியில் நாலு செடித் தொட்டி வைத்து வளர்க்க விருப்பமிருந்தும் இயலவில்லை என்னும் நிலையிருந்தா ''பூண்டு அல்லது வெங்காயச் செடி வளர்க்கலாம்.

பார்க்க 'லில்லி' செடிபோல் பச்சையாக பளிச்சென்று, விரைவில் வளரும் இவை. பனி, குளிர் ஆகியவைகளால் பட்டுப் போகாது. ஆறு அங்குல மண் இருந்தால் கூட போதுமானது என்பதால் கள்ளிப் பலகை பெட்டிகளில் கூட வளர்க்கலாம். கொஞ்சம் வெயிலும், சிறிது தண்ணீரும் கூட போதுமானது.

முழு பூண்டை பற்களாகப் பிரித்து தண்ணீரில் போட்டு வைத்தால் முளை விட்டு வரும். அதன் பிறகு அவற்றை ஐந்து அங்குல இடைவெளி விட்டு தனித் தனியாக விதைத்து வைத்தால் சீக்கிரம் வளரும். வெங்காயச் செடியில் பூக்கும் பூ பார்க்க வெகு அழகாக இருக்கும். பூச்சிப் பொட்டுகள் பூண்டு, வெங்காயச் செடிகள் இருக்கும் பக்கம் அணுகாது.

— பாத்திமுத்து சித்தீக்





"டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் நெடுங்கால ரகஸ்யத்தை இப்போது நானும் அறிவேன்"

"அது என்னுடைய கூந்தலை நாள் முழுவதும் கருமையாகவும், பட்டுப் போல் மிருதுவாகவும் வைத்திருக்கிறது.

டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் மகிமையை, அழகான நீண்ட கூந்தலுடைய ஒரு இளம் பெண்ணிடமிருந்து அறிந்து கொண்டேன். அவளும், அவள் தாயாரும் பல வருடங்களாக டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தை உபயோகித்து வருகிறார்களாம்.

இப்போது நானும் அவர்களுடைய ரகஸ்யத்தை பகிர்ந்து கொண்டு நாள்தோறும் டாபர் ஆம்லா தைலத்தை உபயோகித்து வருகிறேன். அது எனது கூந்தலுக்குத் தகுந்த ஊட்டமளிப்பதுடன், அதன் இயற்கை எழிலையும் அதிகரிக்கச் செய்கிறது. குளுமையான, மென்மையான மணமுடைய டாபர் ஆம்லா கூந்தல் தைலம், உங்கள் கூந்தலை மிருதுவாகவும், பட்டுப்போலவும் திகழச் செய்யும்.


இது பல பெண்கள் நீண்ட காலமாக பகிர்ந்து கொண்டுவரும் ஒரு ரகஸ்யம்."



டாபர் ஆம்லா ஹேர் ஆயில்

ஜெயபிரதா டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் ரகஸ்யத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

டாபர் (டாக்டர் எஸ்.கே. பர்மன்) பி.லிட்.,
ஹர்ஷா பவன், பிளாக்-இ,
கன்னாட் பிளேஸ், புது தில்லி-110001.



❝என் கணவர் எப்போதும் சரியான முடிவையே எடுப்பார். உதாரணத்திற்குப் பாருங்களேன்! "யூனிட் இணைந்த ஆயுள் இன்சூரன்ஸ்" திட்டத்தில் (ULIP) சேரலாம் என்று அவர் எடுத்த முடிவு!

ULIPல் அப்படி என்ன விசேடம் என்று நீங்கள் கேட்கலாம்.... நான் சொல்கிறேன்.... ஏன் என்றால் ULIP பற்றின எல்லா விவரங்களும் எனக்குத் தெரியும்.

சிறந்த திரும்பப் பெறும் பண அளவு, விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு அடங்கிய திட்டம் ULIP மட்டுமே. எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த நண்பர் ராமகிருஷ்ணன் சமீபத்தில் ஒரு ஸ்கூட்டர் விபத்தில் இறந்து விட்டார். ULIP அவர் குடும்பத்திற்கு ரூ. 45,000 கொடுத்தது. இவ்வளவிற்கும் அவருடைய முதலீடு இரண்டு ஆண்டுகளில் ரூ. 6000 மட்டுமே.

வேறு எந்த திட்டத்தில் இவ்வளவு அனுகூலங்கள் உள்ளது?

ஆண்டு ஒன்றுக்கு என் கணவர் ULIPக்கு ரூ. 3000 மட்டுமே செலுத்துகிறார். ஆனால் இந்த மொத்த தொகைக்கும் வருமான வரி சட்டம் செக்ஷன் 80C பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

[illegible] ஆண்டுகளில் செலுத்தப்பட்ட தொகை ரூ. 30,000 மட்டுமே ஆயினும் குறைந்த பட்ச திரும்பப் பெறும் தொகை ரூ. 50,000 ஆக இருக்குமே!

அன்பு நிறைந்த என் கணவர் தம் குடும்ப நன்மைக்கு இதைச் செய்தார் என்ற மனநிறைவு மட்டுமின்றி அவருடைய முதலீடு "யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா" வின் பாதுகாப்பில் இருக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

உங்கள் குடும்ப நன்மைக்கு மிக எளிதாக இதைச் செய்யலாம். இன்றே கனரா வங்கியின் கிளை அல்லது யூனிட் ட்ரஸ்டின் அங்கீகாரம் பெற்ற ஏஜண்ட் மற்றும் முக்கிய பிரதிநிதியை அணுகுங்கள்.❞

மேலும்!
திட்ட இறுதியில்
இலக்குத் தொகைக்கு போனஸ்!
5% பத்து வருட திட்டத்துக்கு
7.5% பதினைந்து வருட திட்டத்துக்கு

யூனிட் டிரஸ்ட் ஆ:ப் இந்தியா

(அரசு பொது உடைமை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம், பம்பாய் 400 020.

பிராந்திய அலுவலகம்:
ரெஜினா மான்ஷன், 46, செகண்ட் லைன் பீச்,
சென்னை 600 001, போன்-27433/24146

ஆந்திரப்பிரதேச அலுவலகம்:
27/11/6B, மேரி சாலை, கவர்னர்பேட்டை,
விஜயவாடா-520 002, போன்-63964

கேரளா அலுவலகம்:
XII/758, தேக்கமடம் சாலை,
திருச்சூர் 680 001, போன்-24690

தமிழ்நாட்டில் முக்கிய பிரதிநிதிகள்:

- சேலம், திரு N.K. இங்கர்சால், சேலம்-636 002 போன்-51520
- திருச்சி, திரு. M. ராமலிங்கம், திருச்சி-620 001 போன்-28280
- வட ஆற்காடு, திரு P. நாராயணன், வேலூர்-632 012 போன்-21575
- கோவை, பெரியார், நீலகிரி, திரு. A. தனபால், கோயம்புத்தூர்-641 018 போன்-34776
- மதுரை, ராமநாதபுரம், திரு M. ராமமூர்த்தி, மதுரை-625 002 போன்-அலுவலகம்-30160 வீடு 43179
- தஞ்சை, திரு K. முத்துசாமி, தஞ்சாவூர்-613 007 போன்-வீடு-1224

ULIP-நேசப்பிணைப்பிற்கோர் நேர்த்தியான திட்டம்.

Sista's – UTI.454.85.TM C

பலே! நம்பளைப்பத்தியெல்லாம் தெரியாது போலிருக்கு.... உனக்கென்ன இது நிஜமாவே முதலிரவா....'' கேட்டுவிட்டுக் கண்ணடிக்க,

கூச்சத்தில் நெளிந்து கொண்டிருந்த அவள் திடுக்கிட்டாற்போல் அவனைப் பார்க்க.... சிரித்துக் கொண்டே முரட்டுத்தனமாய் இழுத்தணைத்து இதழ் பதித்தான்.

''நிஜத்தை சொல்லணும்னா, இது எத்தனையாவது இரவுன்னே எனக்குத் தெரியாது....'' என்று அவன் சிரிக்கையில், அவள் விலகி நின்று அவனைப் பார்க்கிறாள்.

என்ன சொல்கிறான் இவன்.

''என்ன அப்படிப் பார்க்கிறே, ஒண்ணும் தெரியாதவளாட்டம். இத்தனைப் படிச்சிருக்கே. ஆணும் பெண்ணும் சேர்ந்து இந்த மாதிரியெல்லாம் படிக்கச்சே.... யார்கிட்டயும் நெருக்கமா பழகாமயா இருந்திருப்பே. ஏகப்பட்ட பேர் இல்லேன்னாலும், பொறுக்கிறாப் போல ஒருத்தன் ரெண்டு பேர்....''

சேச்சே! அவள் மேலும் கூச,

''வாட் டூ யூ மீன்?'' என்றான். ''நீ ஒரு வர்ஜின், உனக்கு ஒரு அநுபவங்கூட கிடையாதுன்னா சொல்றே.... மை காட்! உன்னை விட்டு வெச்சாங்களா பசங்க. நான்.... நான் பத்தொன்பது வயசிலே அப்பாவாயிட்டேன். சரியா பத்தொம்பதே வயசுதான் எனக்குன்னா பார்த்துக்கோயேன்.... அப்போ ஜாஸ்தி எக்ஸ்பீரியன்ஸ் இல்லையா, அந்த சகவாசத்தைக் கழட்டிவிடத்தான் கொஞ்சம் சிரமப்பட்டேன்.''

அவள் அதிர்ந்துபோய்சிலையாகநின்றாள்.

அவர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமாயிருந்த, கம்பீரமானவனென்று தாத்தா சிலாகித்திருந்த நித்யானந்தனை அவள் தெரியவில்லை. இவனைத் தெரிந்திருந்தால் தாத்தா கிட்டே சேர்த்திருக்க மாட்டார்....

அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டு போனான்.

''இதுவே கல்யாணமாகாத தாய்னா ஏக அமர்க்களப்படும். ஆண் பிள்ளையா இருக்கறதிலே ஒரு சௌகரியம். எதுக்கும் டோண்ட் கேர்னு அவன் பாட்டுக்கு ஜாலியா போயிண்டேயிருக்கலாம். கல்யாணமாகாத தகப்பன்னு ஒருத்தரும் சொல்ல மாட்டார்கள். என்ன சொல்றே நீ.....'' ஏதோ ஜோக் சொல்லுவதைப் போல சொல்லிவிட்டு அவன் சிரிக்கையில் அவளுக்கு அருவருப்பாயிருந்தது. மனத்திலெல்லாம் கரப்பான் பூச்சி ஓடின மாதிரி அருவருப்பு. அந்த க்ஷணத்தில் அவனைப் பற்றிய பிரமை பளீரென்று விலகியது. ஏன், அவனே கூட விலகிப்'போனான். கொஞ்ச நாள் சேர்ந்திருந்தாலும் மனத்தளவில் அவள் விலகியேதான் இருந்தாள். அப்புறம் அந்த அத்தியாயம் ஓய இவ்வளவு காலமாயிற்று.

இனிமேலாவது நிம்மதியாயிருக்கலாம் என்றால் இவன்.... இந்த பிரபு, அடுத்த அத்தியாயத்துக்கு அடியெடுத்துக் கொடுக்கிறான்.

ஆதரவான மனிதர்கள் மத்தியில் அமைதியாய் காலம் கழியும் என்றிருக்கையில், எங்கிருந்து வந்து சேர்ந்தான் இவன்.....

திடீரென்று அழுகை முட்டிக் கொண்டு வருகிறது காதம்பரிக்கு!

(தொடரும்)

கட்டடத்தின் சிமெண்ட் கூரை ஒழுகினாலும், சுவற்றில் வெடிப்புக்கள் ஏற்பட்டாலும், சிமெண்ட், வெல்லம், ஜெர்மன் காவி எனப்படும் Red Ochre ஆகியவைகளை 12:5:3 என்ற விகிதத்தில் கலந்து வேண்டிய அளவு தண்ணீர் விட்டு கட்டியாக்கி, அதன் ஒரு பகுதியை மேலும் தண்ணீர் ஊற்றிக் கலவையாக்கிக் கொண்டு, சுவரின் வெடிப்பில் கலவையை ஊற்றி, மேற்பகுதியைக் கட்டியான கலவையால் அடைத்து, 12 மணி நேரம் உலர வைத்தால், ஒழுகுவது நின்றுவிடும்.

ஆதாரம்: Invention and Intelligence.

— கனகா செங்கைமுத்து.




அமுதம் டீ அறிமுகம்

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சென்னை நகரின் அமுதம் அங்காடிகளில், 'அமுதம்' என்னும் புது தேயிலையை அறிமுகப்படுத்தியுள்ளது. ''தரத்தில் இன்றைக்கு உள்ள எந்த முதல் தர தேயிலைக்கும் குறைந்த தில்லை இந்த 'அமுதம் தேயிலை'. அதே சமயம் விலையிலே ஒரு கிலோவுக்கு எட்டு ரூபாய் குறைவானது'' என்கிறார்கள் இதன் தயாரிப்பாளர்கள்.

அமுதம் டீ நீலகிரி தேயிலை கூட்டுறவு சங்கத்தின் தயாரிப்பு.

மௌனஷ்மி.



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள். சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

“என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்”...

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் கால கட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்.

தனியாகவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/6746/R/TAM

பால் நினைந்தூட்டும் தாயினும்...

தாய் தந்தையர் அற்ற — அல்லது ஏழை பெற்றோரின் பெண் குழந்தைகளின் புகலிடமாக டி. ஈ. எல். சி. யின் குழந்தைகள் காப்பகம் மிளிருகின்றது. பள்ளிக்குச் செல்லும் வயதிலே விட்டுவிட்டால் மணப் பருவம் வரை பெற்றோர் கவலையே பட வேண்டியதில்லை. ஒரு பெண்ணை வளர்த்து ஆளாக்கவே தடுமாறுகின்ற நிலையில் 200 பெண் குழந்தைகளை தன் பிள்ளைகளாகவே பாவித்து வளர்த்து வருகிறார் சகோதரி ஹில்ட்ரட் ஃபிட்சே (Hiltrud Fichte)

''ஆசிரியர் ஸ்டிரைக் எப்ப முடியும்? பிள்ளைகள் வீட்டுலே தொல்லை பண்ணுதே?'' என்று ஆசிரியர் வேலை நிறுத்தத்தின்போது அலுத்துக் கொண்டார் இந்நாளைய குடும்பத் தலைவி. ஆனால் எந்த ஆசிரியர் வேலை நிறுத்தமும் டி. ஈ. எல். சி காப்பகத்தைப் பாதிக்கவில்லை. குழந்தைகள் எப்போதும் அமைதியாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிப் படிப்பு மட்டுமல்ல; கல்லூரிப் படிப்பு வரை படிக்கின்றனர். சில பெண்கள் தாமே தொழில் நடத்த தையல், எம்பிராய்டரி, நர்சிங், கற்றுக் கொள்கின்றனர். உசிலம்பட்டி என்று வெளியிடங்களில் சென்றும் படிக்கின்றனர். படித்தவர்கள் சிலர் இதே இடத்தில் வேலையிலும் சேருகின்றனர். சில பெண்களின் திருமணத்தையும் ஹில்ட்ரட் ஃபிட்சே நடத்தி வைக்கின்றார். பெற்ற தாய் போல அரவணைத்துப் பிரசவமும் பார்க்கிறார். குழந்தைகளோடு குழந்தையாக வாழ்கிறார். சிரிக்கிறார்; கண்ணீர் விடுகின்றார். நோயுற்ற குழந்தையை இரட்டிப்பு கவனிப்பாகக் கவனிக்கிறார். அங்குள்ள 200 பெண்களைக் காக்கும் அன்னையாக வழி நடத்திச் செல்லும் ஆசானாக விளங்குகிறார்.

* * * * *

பரபரப்பான சந்தடிமிக்க மயிலாடுதுறையின் இதயப் பகுதி; தியேட்டர், கடைகள் என்றெல்லாம் நாகரீகம் உச்ச நிலையில் இருக்கும் நடுவிடம். இப்படிப்பட்ட பகுதியில் பெரும் பரப்பில் தென்னை, மா, என்று அற்புதமான இயற்கைச் சூழலிலே காப்பகம் அமைந்துள்ளது. மருந்துக்கு ஒரு இலை பூமியில் இருக்க வேண்டுமே! மூச். கிணுகிணுவென்று குழந்தைகளின் மகிழ்ச்சி ஒலி. ஊஞ்சலில் ஆடுவோர், ஓடுவோர் என்று விளையாட்டுப் பரவசம். இன்னுமொருபுறம் இனிய குழல் இசை. இந்தச் சூழலில் ஹில்ட்ரட் வளர்க்கும் குழந்தைகள் ஏன் சிறந்த பிரஜைகளாக உருவாக மாட்டார்கள்!

"ஜெர்மனியிலே இருந்து வந்தாலும் இந்தக் குழந்தைகளைப் பார்க்கும்போது என் மனம் உருகுகிறது. இவர்கள் அன்பே உருவானவர்களாக இருக்கிறார்கள். இவர்களை வளர்ப்பதில், அன்பு காட்டுவதிலுமே நான் முழுமையான நிறைவு அடைகிறேன். இதே முறையில் தொண்டாற்றி அன்பு காட்டும் நல்மனங்களை எனக்குப் பிறகு அனுப்புவீராக என்றே நான் கிறிஸ்துவிடம் பிரார்த்திக்கிறேன்" என்கிறார் இந்த அன்னை.


— ஜீவா ராஜசேகரன்.





முதுமை ஒரு சுமையா?

பெரும்பாலான இல்லங்களில் அனைத்து வேலைகளையும் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ள வேலையெதுவும் இல்லாமல் தான் ஒரு சுமையோ என்னும் கழிவிரக்கத்திலேயே காலம் தள்ளும் பல தாத்தா, பாட்டிகளைப் பார்க்கிறோம். அவர்கள் வாழ்வில் பல மேடு பள்ளங்களைத் தாண்டி, இன்னல்களையும், இன்பங்களையும் அனுபவித்து சோர்வையும், நோவையும் எதிர்த்து வாழ்வின் கடைசிப் படிகளில் நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள். நாமும் ஒருநாள் முதுமை நிலையை அடைந்தே ஆகவேண்டும். அப்படி இருக்கும்போது அவர்களை வருத்தப்படச் செய்யலாமா? சில 'முதிய' யோசனைகள்.



1. இதோ நாகராஜன். இவர் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி. போரில் ஒரு காலை இழந்தவர். சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தால்கூட ஆறடி உயரமும் அதற்கேற்ற பருமனும். அடர்த்தியான மீசையும் பார்ப்பவரைக் கொஞ்சம் பயப்படுத்தவே செய்யும். ஆயினும் அந்த கம்பீரமான முகத்தில் சதா சோகம் சிந்தும் கண்கள். மகன், மருமகள், பேரன் ஆகியோருடன் நான்காவது மாடியிலுள்ள ஒரு பிளாட்டில் வசித்து வருகிறார். மாமனார் தங்களுடன் வந்த இந்த ஒரு வருட காலமும் அவரை நன்கு கவனித்துக் கொண்டால்கூட அவர் மனத்தில் ஏதாவதொரு குறையும், ஏக்கமும் மண்டிக் கிடப்பதை மருமகள் ராதாவால் உணர முடிந்தது.

ஒருநாள் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. எப்போதும் சக்கர நாற்காலியில் அமர்ந்து ஏதாவது புத்தகம் படிக்கும் மேஜர் அன்று சிறிய பால்கனியில் பேரன் விநோதுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். ஐந்து வயது விநோத் சின்னச் சின்ன மண் தொட்டிகளில் முளைத்திருந்த வெண்டைச் செடிகளைத் தாத்தாவிடம் காட்டிக் கொண்டிருந்தான். அவர் சட்டிகளைக் கையில் ஏந்தி செடிகளை ஆர்வமுடன் பார்வையிட்டார். ராதாவிற்குப் புரிந்துவிட்டது. மறுநாளே வெவ்வேறு அளவுகளில் பூந்தொட்டிகள் வந்து இறங்கின. ஓராண்டில் காய்த்து, பயன் தந்து மறையும், பூச்செடி, காய்கறி விதைகள் வந்தன. அடுத்த பத்து நாட்களில் நீளமான பெஞ்சுகளில் அழகழகான தொட்டிகள் அமர்ந்தன. இப்போது விநோதும், அவன் தாத்தாவும் சதா தோட்டத்தில்தான். ஐந்து அடிக்கு எட்டடியுள்ள அந்த குட்டி பால்கனி அவர்களது சொர்க்கமாயிற்று. இப்போது வீட்டில் மேஜரின் அட்டகாசமான சிரிப்பும், உரத்த குரல் பேச்சும் எதிரொலிக்கிறது. வீடே மகிழ்ச்சியில் தளும்புகிறது. இயலாமையும், வயோதிகமும் மேஜரை ஒன்றுக்கும் உதவாதவர் என்ற நிலைக்குத் தள்ளிய சமயம் ஐந்து வயது விநோத் அவரை மீண்டும் நம்பிக்கை உலகுக்கு இழுத்துவந்துவிட்டான். இப்போது அவர் பேரனுக்கு உற்ற நண்பனான தாத்தா. அவனுக்காக அவர் இனி மகிழ்வோடு வாழ வேண்டும்.

2. நாகராஜன் வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது சங்கரிப் பாட்டியின் கதை. மகன், மருமகள் இருவரும் வேலைக்குப் போகிறார்கள். கணவர் இறந்து பத்து வருடங்கள் ஓடிவிட்டன. மருமகளுக்கு உதவுகிறேன் என்று காலை வேளையில் இவர் சமையலறைக்குள் நுழைந்து ஒன்றை எடுக்க ஒன்று விழ என்று ஏதாவது தவறு செய்ய வீட்டில் எப்போதும் சச்சரவுதான். சந்திராவுக்கு மாமியார் சமையல் அறைக்குள் வருவதே பிடிக்கவில்லை. பேரன், பேத்திகளும் அடிக்கடி பாட்டியை ஏமாற்றிவிட்டு, அம்மாவிடம் ஓடிப் போய் அடம்பிடித்துத் தொல்லை செய்தார்கள். மனம் உதவி செய்ய பரபரத்தாலும் வயோதிகம் காரணமாகத் தன்னால் எதுவும் செய்ய இயலவில்லையே என்று சங்கரிப் பாட்டியின் புலம்பல். தான் எல்லோருக்கும் பாரம் என்ற வகையில் முணுமுணுப்பு. இதனால் பிள்ளையும் எரிச்சலுற்றுத் தாயாரைக் கடிந்து கொண்டான். ஒருநாள் இரு பேரக் குழந்தைகளுடன் அருகிலுள்ள ஈஸ்வரன் கோவிலுக்குச் சென்று அமர்ந்தார்.




காலை 7 முதல் 8½ வரை குழந்தைகள் பிராகாரத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். எட்டரை மணிக்கு வீடு சென்ற சங்கரிப் பாட்டிக்கு ஆச்சரியம் காத்திருந்தது. பின்னை வாயெல்லாம் பல்லாக நிற்க, மருமகள், "அம்மா, அப்பவே வேலையெல்லாம் முடிந்து விட்டது. எங்கே உங்களைக் காணுமே என்று கவலைப்பட்டேன். நல்லகாலம் வந்துவிட்டீர்கள்" என்றாள் அன்போடு. சங்கரிக்கு கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. மறு நாள் முதல் 'காலை வேளையில் ஈஸ்வரன் கோவிலில் பாட்டியும் பேரக் குழந்தைகளும் ஆஜர். இது நாளடைவில் மாறி அடுத்த வீட்டுப் பெண்களும் தங்கள் குழந்தைகளைக் கொண்டுவிட, நாளாக ஆக, சுமார் 10, 15 குழந்தைகளுடன் பாட்டி தினமும் கதை, பாட்டு என்று ஒரு தெய்வீக 'க்ரஷ்'ஷையே நடத்தத்துவங்கிவிட்டார். இப்போதெல்லாம் பாட்டி முகத்தில் சதா சிரிப்புத்தான்

தான் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதால் எத்தனை வீடுகளில் காலை நேரம் அமைதியாக, சண்டைச் சச்சரவு இன்றி கழிகிறது என்று பெருமைப்பட அறிந்தவரா? இல்லை 'பரோபகாரம் இதம் சரீரம்' என்பதைச் செயலில் விளக்கும் ஓர் ஒப்பற்ற ஜீவன் இவர்.

3. தன்னைச் சமூகம் ஒதுக்கினாலும் தான் அதனோடு வலிய ஒட்டிக் கொள்ளும் இயல்புடையவர் லீலாபாய். அறுபத்தைந்து வயது முதுமையிலும் குமாரியாக இருப்பவர். ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியையாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். உழைக்கும்வரை பெற்றோருக்கும், உடன் பிறந்தவர்களுக்கும் வாழ்வைத் தியாகம் செய்தவர். வசந்தம் பூத்த வேளை வரதட்சணைப் பூனைக் குறுக்கிட்டதால் சகுனத் தடை ஏற்பட்டது. அதன்பின் திருமணமே வாழ்வில் மணக்காததால் இன்று இவர் தனி மரம். ஆனால் தன்னம்பிக்கை வேர் பரப்பிய, தழைத்த மரம். முதியோர் இல்லத்தில் இப்போது' வாழ்கிறார்.

விடுதியிலுள்ள அனைத்து முதியோர்களுக்கும் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி என்று எல்லா மொழிகளிலும் கடிதம் எழுதித் தருகிறார். புத்தகங்கள் படித்துக் காட்டுகிறார். ராமகிருஷ்ணர் குட்டிக் கதைகள் முதல் கீதையின் தத்துவம் வரை பேசி மற்றவர்கள் மனத்தை மகிழ்விக்கிறார். நிறைய கார்டு, கவர் வாங்கி வைத்துக் கொண்டு மினி போஸ்டாபீஸ் நடத்துகிறார்.

இவர்கள் மட்டுமல்ல. பாரிசவாயுவால் இடது கை, கால், சுவாதீனமிழந்தாலும் ஈஸிசேரில் அமர்ந்து கோலங்கள் கற்பிக்கும் கர்நாடக அவ்வா கனகவல்லி, கண்கள் இரண்டும் மங்கி, பார்வை மறைந்தாலும், மாலையில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பஜனைப் பாடல்கள் சொல்லிக் கொடுக்கும் கேரளத்து அம்மாமை சாந்தம்மா. 80 வயதில் தான் வசிக்கும் முப்பத்து இரண்டு வீடுகள் அடங்கிய பிளாட்டில், அனைவருக்கும் பால் கூப்பன் வாங்கி, எலெக்ட்ரிக் பில் கட்டி, காஸ் தீர்ந்தால் சொல்லி உதவி வரும் சுவாமிநாதன் ஆகியோர்களும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்கள். முதுமையைச் சவாலாக ஏற்று உள்ளத்தால் இளைஞர்களாக வாழ்கிறார்கள்.



இளையவர்கள் பங்கு என்ன?

இன்று மகன், மகளாக, மாப்பிள்ளை மருமகளாக, பேரன், பேத்திகளாக இளமையுடன் பவனி வரும் நாமும், ஒரு நாள், தாத்தா, பாட்டியாக மாற வேண்டியவர்கள். அப்போது நம்மை மதித்து நம் பிள்ளைகள் நடக்க நாம் முன் உதாரணமாகத் திகழ வேண்டியது நமது தலையாய கடமை.

முதியோர்கள் பங்கு என்ன?

முதியவர்கள் வாழ்க்கை நமக்குக் காட்டுவது என்ன? மனிதன் எந்த நிலையிலும் மற்றவருக்கு உதவி செய்பவனாக வாழ முடியும் என்பதுதான். கண் இழந்தவருக்கு வாய் பாடலாம்; கால் இழந்தவருக்குக் கைகள் வேலை செய்ய முடியும்;

எனவே மற்றவர்கள் தங்களை கவனிக்க வேண்டும், தங்களுக்கு உதவ வேண்டும் என்று சதா எண்ணிக் கொண்டு இருக்காமல் மற்றவர்களுக்குத் தம்மால் என்ன உபகாரம் செய்யமுடியும் என்று யோசிக்க வேண்டும். தன்னால் இந்த மாதிரியான காரியங்களை, சிறு உதவிகளைச் செய்யமுடியும் என்று ஒவ்வொரு முதியவரும் உணர்ந்துக்கொண்டுவிட்டால் அவர்களுக்குத் தள்ளாத முதுமையிலும் வாழ்க்கை இனிக்கும்.

தாம்பரம் லக்ஷ்மி சங்கர்.



அழகுக்கு சில டிப்ஸ்

மிகவும் சுலபமாக, வீட்டு வேலைகளிலேயே தங்களை அழகு படுத்திக் கொள்ளச் சில எளிய வழிகள்.

காப்பிக்குத் தண்ணீர் கொதிக்க வைக்கிறோம் அல்லவா? அந்தத் தண்ணீர் கொதிக்கும்போது ஆவி வருகிறது. உதடுகளை அழுந்தப் பொருத்தி மூடிக் கொண்டு, ஒன்றிரண்டு நிமிடம் முகம் முழுக்க ஆவி படும்படி பிடித்தால் முகத்தில் சருமத் துளை அடைப்புக்கள் நீங்கி, பரு, சிறு கட்டி, கறுப்புப்புள்ளி போன்றவை தோன்றுதலும், எண்ணெய் வழிதலும் தடுக்கப்படும். மிக இயல்பான 'ஸ்டீம்பாத்' இது.

எல்லாருக்கும் துணி துவைக்க, பாத்திரம் தேய்க்க, வீடு துடைக்க, வேலைக்காரியை அமர்த்த முடியுமா? விலைவாசியோடு போட்டி போடுகிறதே வேலைக்காரியின் சம்பளம், டிமாண்ட்கள்...! டிடர்ஜென்ட் சோப், க்ளீனிங் பவுடர் முதலியன உபயோகிப்பதால் நகங்கள் வலுவிழந்து பொலிவிழக்கின்றன. வெதுவெதுப்பான நீரில் உப்புப் போட்டு, கைகளை ஐந்து நிமிடம் ஊற வைத்துக் கொள்ளுங்கள். ஊறும் போதே ஒரு கையால் மறுகையை மஸாஜ் செய்வது போல் நீவி விடவும். இரவில் லேசாய் தேங்காய் எண்ணெயைப் பஞ்சில் தொட்டு நகங்களுக்குத் தடவலாம்.

வீட்டில் ஒரு பெண், வேலை செய்கையில் நடக்கிற நடை... அடேயப்பா... ஒரு பாத யாத்திரை பூர்த்தியாகும் குமரி... முதல் இமயம் வரை...! அந்தப் பாதங்களுக்கு சிசுருஷை வேண்டாமா? எவ்வளவு வேலை செய்கிறோம்? இன்னும் ஐந்து நிமிடம் பாதங்களுக்காக ஒதுக்கி, இதமான வெந்நீரில் சிறிது உப்பைக் கரைத்து, பாதங்களை அந்த பேசினில் வைத்து, பாதங்களை மஸாஜ் செய்தபடி, விரல் இடுக்கு, நகங்களைச் சுற்றிய அழுக்கைத் தேய்த்து எடுக்கவும்.

குதிகால் வலிக்கு, ஒரு அரைச் செங்கல்லை சூடுபடுத்தி, அதன் மேல் ஒரு துணியைப் போட்டுத் தேய்க்கவும். கிராமப்புற வாசதிகள் கல்லின்மேல் ஆடுதொடா இலை போட்டு இதமாய் மிதிக்கவும். அதேபோல் மழமழப்பான கூழாங்கல் கொண்டு, பாத ஓரங்களைத் தேய்த்தால் பித்த வெடிப்பின் சொரசொரப்பு நீங்கும். பித்த வெடிப்பில் சமய சந்தர்ப்பம் இல்லாமல் புடவை அடிப் பாகம் மாட்டி, வலிப்பதும், கிழிப்பதும் தடுக்கப்படும்.

பயறு, கஸ்தூரி மஞ்சள் இரண்டையும் கலந்து அரைத்து, உடம்புக்குப் பூசிக் குளிப்பது மிகவும் நல்லது.

— கனகவல்லி சாரங்கபாணி.



பண்டைக் காலத்தில்



இலக்கியம் படைத்த அணிகலன்கள்

ஒப்பனை, ஆடை, அணிகலன்கள் அணிவதுடன் இணைந்த கலை, அன்றாடத் தேவைகளுக்கு, திருமணம் போன்ற மற்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு, சமய வழிபாட்டிற்கு, பருவநிலை, காலம், நேரம், தகுதி இவற்றிற்கு ஏற்ற வகையில் மகளிர் அலங்கரித்துக்கொள்கின்றனர்.

கூந்தல்; கண்கள், சருமம், நகம் என உடல் உறுப்புகளுக்கு ஒப்பனைப் பொருள்கள் இன்று கடைகளில் மலிந்து கிடக்கின்றன. ஒப்பனைக் கலையில் தேர்ந்த கலைஞர்கள் தொழில் முறையாகவும் உலகெங்கும் இக்கலையை வளர்த்துள்ளனர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வகையிலும், சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஒப்பனை செய்துகொள்வதற்கும் ஒப்பனை நிலையங்கள் உள்ளன. நாட்டியம், நாடகம், திரைப்படக் கலைகளுக்கு ஏற்ற வகையில் வல்லுநர்கள் உள்ளனர். தொன்மை காலந்தொட்டு வந்த கலையாகும்.

பண்டைய காலங்களிலும், ஒப்பனை நிலையங்கள், ஒப்பனைக் கலைஞர்களின் திறனை இலக்கிய நூல்களில் காண்கிறோம்.

பரத முனியின் நாட்டிய சாஸ்திரத்தில் அணிகலன்களின் வர்ணனையை ஏற்கெனவே பார்த்தோம். அணிகலன்களுக்கு ஏற்ற வகையில் ஒப்பனையும் கூறப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய நூல்களில் கூறப்படும் ஐந்திணை ஒழுக்கங்களுக்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கின்றன. தலைவன் பிற நாடுகளுக்குச் சென்றிருக்கும்போது, அழகான உடைகள் அணியக் கூடாது. கூந்தல் ஒரு வேணியில் (பின்னல்) தொங்க வேண்டும். பிரிவில் வெண்ணிற ஆடை அணிந்தும், அணிகலன்கள் குறைந்த அளவிலும், ஒப்பனையைத் தாழ்த்தியும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ததா ப்ரோஷி தகாந்தா யா வ்யஸனுபிஹ
தாஸ்ச யா:
வேஷ: ஸ்யான்மலினஸ் தாஸாமேக
வேணிதரம் சிர:
பிப்ரலம்பே ஹி நார்யாஸ்து சுத்தோ
வேஷோ பவேதிஹ
நாத்யாபரண ஸம்யுக்தோ ந சாபி,
மிஜயான்வித:

அணிகலன்களுக்கு ஏற்ற இடங்களில் அணிய வேண்டும். மேகலையைப் பரிகசிக்கும் வண்ணம் மார்பில் அணியக் கூடாது! கண்களுக்கு அழகாக மை தீட்டி, உதடுகளுக்குச் சாயம் பூசியும், பற்களுக்கு ஏற்ற வண்ணங்களும் தடவ வேண்டும். பற்களுக்கு மஞ்சள் (Turmeric) பூசுவது அழகூட்டும். முத்துப் பற்களுடன், தாமரை இதழ் வண்ணம் தீட்டினால் மேலும் மலரும்.

நேத்ரயோரஞ்சனம் கார்யமதரஸ்ய ச
ரஞ்சனம்
தந்தானும் விவிதா ராக சதுர்ணும்
சுக்லதா ததா
ராகாந்தரவிகல்போகத சோபா(நயா)
திகோஜ்வல:
......முக்தாபா: தசோபானு:......தந்தா:
ஸ்யு: பத்மபல்லவரஞ்சனு:

உடல் உறுப்புக்களுக்கு நான்கு மூல நிறங்களாவன: கறுப்பு, நீலம், மஞ்சள், சிவப்பு. இந்த நான்கு வகை வண்ணங்களைப் பல்வகை விகிதங்களில் கலந்து பற்பல மாற்று வண்ணங்களை செய்யும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன நாட்டிய சாஸ்திரத்தில். யார், யார் எந்த நிலைகளில், எவ்வகை அணிகலன், உடைகளுடன், தக்க ரச பாவங்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டுமென்றும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

'நெற்றியில் திலக வகைகள் பல இருந் தன. தண்டி என்னும் வடமொழி கவி எழுதிய தசகுமாரசரிதத்தில் கூறப்படுகிறது. "வியர்வை முத்துக்கள் அவன் சந்தன திலகத்தைக் கரைத்து அழித்தன." (உத்பித்ய மானச்ரம ஜலபுலக பின்ன சிதில சந்தன திலகம்). மேகசந்தேச காவியத்தில் காளி தாசன் அலகாபுரியில் இருந்த ஒரு கல்பக மரத்தை வருணிக்கும்போது கூறுகிறான்.

'அம்மரம் பல வண்ண ஆடைகள், கண் ணுக்கு அழகூட்டும் மது, மலர் அணிகலன் வகைகள், தாமரை பாதத்திற்கு பூச சாயம் எல்லாவற்றையும் ஒருங்கே அள்ளிக் கொடுத் தது' என்கிறான்.

இரகு வம்சத்தில் புஷ்பக விமானத்தில் பறக்கும்போது சீதையின் கன்னத்தில் படிந்த தாழம்பூ மகரந்தத்தை குறிப்பிடுகிறான். இராமன், சீதை ஒப்பனை செய்து கொண்டு அருகில் வந்து அமர்வதற்கு நேரமாகுமெனை, காற்றில் மிதந்து வந்த தாழம்பூ மகரந்தத்தூள் சீதையின் கன்னத்தில் படிந்து அவள் செந் நிற இதழ்களுக்கு அழகூட்டின என்கிறான் காளிதாசன்.

வேலாநில: கேதரரேணுபிஸ்தே ஸம்பா
வயத்யானனமாயதாக்ஷி
மாமக்ஷமம் மண்டனகாலஹானேர்
வேத்தீவ பிம்பாதர பத்தத்ருஷ்ணம்:

மானவிகா அக்னிமித்ரம் நாடக காவியத் தில் காளிதாசன் வஸந்தருது மலர் வனத்தை பெண்ணின் எழிலுக்கு ஒப்பிடுகிறான். சிவப்பு அசோக மலர்கள் சிவந்த அதரங்களை யும், நீல, மஞ்சள், சிவப்பு, நீல குரபக மலர் கள், இலைகளுடன் இழைந்து முகத்தின் அழகை வெல்லும் வகையிலும், எள் செடி யின் மலர்களைச் சுற்றியிருந்த வண்டுகள் மையிட்ட கண்கள் கொண்ட நெற்றித் தில கத்தை மிஞ்சுவது போலவும் இருந்தன என வர்ணிக்கிறான். சாகுந்தலத்திலும் காட்டி யிருந்த மரங்கள் சகுந்தலைக்கு வேண்டிய ஒப்பனைப் பொருள்களை அளித்ததை வர் ணித்துள்ளான் / (வனதேவதாகரதலைரா பர்வபாகோத்திதை தத்தான்யாபரணனி).

குமார ஸம்பவத்தில் காளிதாசன் வர்ண னையில் பல ஒப்பனை முறைகள் பிரதிபலிப் பதைக் காணலாம். தரையில் சற்று பாதத்தை அழுத்தி வைத்தபோது செம்பஞ்சு சாயம் பூசியிருந்த நகங்கள் ஒளியினால் செந்நிறம் கொப்புளிப்பது போல இருந்ததாம். (அப் யுன்னாங்குஷ்டநக ப்ராபி: நிக்ஷேபணாத்ராக மிவோத்கரந்தௌ).

பார்வதியின் திருமணத்திற்காக ஒப்பனை மகளிர் ஒப்பனை செய்ததை வெகு விரிவாக வர்ணிக்கிறான். கூந்தலுக்கு நறுமணமுள்ள புகை, மேனிக்கு அகில் சாந்து, கோரோசனை யால் வரையப்பட்ட வரிகள், உதட்டில் சாய மிட்டுத்தேன் மெழுகினால் மேலும் அழகூட்டி, பாதங்களுக்கு வண்ணம் பூசி, பல்வகை மலர்கள், பொன், இரத்தின அணிகலன்களை அணிவித்ததைக் கூறியுள்ளான்.

கி.ராதாகிருஷ்ணன் I.P.S





பிரச்சனையைப்

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு என அங்கஹீனமோ, மூளை வளர்ச்சிக்குன்றியோ பிறக்காமல், நார்மலாகப் பிறந்து வளர்வது என்பது எத்தனை அரிது எனத்தான் தோன்று கிறது, ஆங்காங்கே இப்படிப்பட்ட உடல் நலக் குறைவுள்ளவர்களைப் பார்க்கும் போது.

மன, மூளை, வளர்ச்சிக் குறைவுகளிலே தான் எத்தனை விதங்கள். அப்படிப் பாதிக் கப்பட்ட குழந்தைகளைப் பார்க்கும்தோறும் கண் கலங்காமல் இருக்க முடியவில்லை.

ஸ்பாஸ்டிக்ஸ் (Spastics) எனப்படும் மூளை யைப் பாதிக்கும் குறைபாடு பற்றி நண்பர் கிருஷ்ண பிரசாத் கூறினார்:

"இது மன வளர்ச்சி, மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் நோய் அல்ல. மூளை யின் ஒரு பகுதியே பாதிக்கப்பட்டதால் ஏற் பட்ட குறைபாடு. இதை 'ஸ்பாஸ்டிக்ஸ்' என்று சொல்கிறார்கள். இந்தியாவிலேயே இதற்காகவே என்று தனியாக ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது நிலையம் இது" என்கிறார்.

சென்னை தரமணியில் அமைதியேஉருவான பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பள்ளி யின் போஷகர்கள் இதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள். முன்னாள் கவர்னரின் மனைவி திருமதி சாந்தி சாதிக் அலி ஆரம்பித் தாராம் இந்நற் பணியை. முதலில் சில கூட் டங்கள் கவர்னரின் இல்லத்திலேயே நடந்த தாம். இப்படிப்பட்ட குழந்தைகளைத் திரட்டி அவர்களுக்கென்று ஒரு பள்ளியை நிறுவி, கூடியவரை சாதாரணக் குழந்தையின் நிலைக் குக் கொண்டுவர வேண்டுமென்பதே இவர் களின் விருப்பம். பிறகு அயனவரத்தில் ஒரு இல்லத்தில் இந்த ஸ்பாஸ்டிக் சொஸைட் டியை ஆரம்பித்தார்கள். இப்போது தரமணி யில் சொந்தக் கட்டிடத்தில் இயங்குகிறது.

'ஸ்பாஸ்டிக்' கோளாறு ஏன் ஏற்படுகிறது?

பெண் கர்ப்பமாக இருக்கும்போது கடுமையாக நோய்வாய்ப்பட்டாலோ, தொற்று நோய் வந்தாலோ, பிரசவக் கோளா றாலோ, ஆயுதக் கேஸாக பிரசவம் மாறும் போது தலையில் அடிப்பட்டாலோ, குழந்தை

கீழே விழுந்து அடிபட்டாலோ எதனாலும் இந்தப் பாதிப்பு ஏற்படலாம்.

மூளையின் ஒரு பகுதி பாதிக்கப்படுவதால் குழந்தைகள் சாதாரண குழந்தையின் வளர்ச்சியைப் பெறுவதில்லை. உடல், மன வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

இதற்கும் மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும் மனநோய்ப்பட்டவர்களும் சம்பந்தமில்லை. ஆனால் ஸ்பாடிக்ஸ் எனும் இந்த மூளை பாதிப்பால் மற்ற பல கோளாறுகளும் இணையலாம் என்கிறார்கள்.

'ஸ்பாஸ்டிக்' கோளாறைக் கட்டுப்படுத்த முடியுமா?

முழுவதுமாகச் சரிப்படுத்த முடியாது என்கிறார் இப்பள்ளியின் முதல்வர் கிருஷ்ண பிரசாத்.

புரிந்து கொள்ளுங்கள்

''இங்குதான் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். தன்னுடைய குழந்தைக்கு ஏதோ ஒரு கோளாறு என்றவுடன் டாக்டரிடம் போகிறார்கள். அவர் மூளை வளர்ச்சி, மன வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளின் காப்பகத்துக்கோ, அவர்களுக்கான டாக்டரிடமோ அனுப்புகிறார்கள்.

பெற்றோர்கள் என்ன ஏதுவென்று தெரியாமலே ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறார்கள். வசதி இல்லாதவர்களோ இது நம் தலையெழுத்து என்று விட்டு விடுகிறார்கள்.


ஆனால் ஓரளவு படித்தவர்கள் குழந்தைக்கு என்ன பாதிப்பு என்று பார்க்க வேண்டும். ஸ்பாஸ்டிக்ஸிற்கு முழுமையாக மருந்து கிடையாது. இடைவிடாத மனப் பயிற்சி, உடற் பயிற்சியின் மூலம் அவர்களை ஓரளவு 'நார்மல்' நிலைக்குக் கொண்டு வரலாம். அதற்கு மிகுந்த பொறுமை வேண்டும். கற்றுக்கொடுப்பவர்களுக்கும் வேண்டும். பெற்றோர்களுக்கும் வேண்டும்...''

ஸ்பாஸ்டிக்ஸால் பாதிக்கப்படும் குழந்தைகள் சத்துக் குறைவாலும் பிடிக்கப்படுகின்றன. அவர்களுக்கு டாக்டர் சாக்கோ, ஜி. குமரேசன், ராஜகோபால் முதலானோர் அடிக்கடி விசிட் செய்து மருத்துவ உதவி அளிக்கிறார்கள்.

''அதேபோலத்தான் எங்களுடைய கமிட்டியில் இருக்கும் அங்கத்தினர்களும். திருமதி குமார ராணி மீனா முத்தையா, கொர்னீலியஸ், திருமதி மெய்யப்பன், சாரதா கந்தா ஆகியோர்களெல்லாம் தங்களுடைய இடைவிடாத வேலைகளின் நடுவே இந்தப் பள்ளிக்கென்றே தனி நேரத்தை ஒதுக்கிச் சேவை செய்து வருகிறார்கள்.'' என்கிறார்.

மூளையில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக பல லட்சக்கணக்கான குழந்தைகள் ஒன்றுக்கும் உதவாமல் போய்விட்டன.





இப்படிப் பாதிக்கப்பட்ட குழந்தை தன்னுடைய வீட்டில் இருப்பதே அவமானம் என நினைக்கும் குடும்ப அங்கத்தினர்கள் இதையே மறைத்து விடுகிறார்கள். எனவே நிஜமாகவே இப்படிப்பட்ட கோளாறுகள் எத்தனை சதவிகிதம் இருக்கின்றன என உண்மையான கணக்கே எடுக்க முடியாமல் போய்விடுகிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பாதிக்கப்படும் இப்படிப்பட்ட குழந்தைகளை இடைவிடாத பயிற்சியின் மூலம் சாதாரண குழந்தையின் நிலைமைக்குக் கொண்டு வரலாம். அதற்குத் தேவை நல்லமனங்கள். பலருக்குஏராளமான ஓய்வுநேரம் கிடைக்கிறது. அதை என்ன செய்வது என்று தெரியாமல் வீண் பொழுதை. விபரீத பொழுதாகக் கழிக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட சேவையில் இறங்கினால் வாழ்க்கை பயனுடையதாக இருக்குமே.

இதையேதான் நானும் சொல்கிறேன். நாங்கள் சென்னையில் மேலும் இரண்டு சென்டரை நிறுவ நினைத்துள்ளோம். யில் ஒன்று ஆரம்பித்திருக்கிறோம். வாய்ப்பும், ஆர்வமும் உள்ளவர்கள் ஸ்பாஸ்டிக் சொஸைட்டியைத் தொடங்கலாம். பாதிக்கப்பட்ட குழந்தைகளைத் திரட்டி பயிற்சி கொடுக்கலாம். எப்படிக் கொடுக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என நாங்கள் சொல்லித்தரக் காத்திருக்கிறோம். மருத்துவர்கள், மனோதத்துவ நிபுணர்களை இணைத்துச் செய்யலாம். சிக்கலான சில கேஸ்கள் வரும்போது நாங்களும் உதவி செய்வோமே!''
என்கிறார் கிருஷ்ண பிரசாத்.

குழந்தைகளை ஒரு பெரிய ராட்சத பலூனில் படுக்க வைத்து அசைய வைப்பது. படிகட்டுகள் கொண்ட சிறிய ஏணியில் ஏறி இறங்குவது. நிலைக்கண்ணாடியின் முன் நடக்க வைப்பது. எளிய பாடமுறைகள் எனப் பல வகைகளிலும் ஸ்பாஸ்டிக் குழந்தைகளுக்கு இங்கு பயிற்சி தருகிறார்கள்.

இவர்களின் சேவைச் சிறப்பைக் கருதி பல்லவன் போக்குவரத்து ஒரு பஸ்ஸைக் கொடுத்திருக்கிறது. அதன் மூலம் அங்கங்கே உள்ள குழந்தைகளைத் திரட்டி வந்து மாலை வரை பயிற்சி கொடுத்து அனுப்புகிறார்கள்.

''ஹாஸ்டல் வசதி இருக்கிறதா?'' எனக் கேட்டேன்.

''இல்லை. ஹாஸ்டல் வைத்துக் கொள்ளவும் நாங்கள் தயாராக இல்லை. ஸ்பாஸ்டிக் குழந்தைகளை அவர்களின் பெற்றோரிடமிருந்து பிரித்துவிடக் கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கையே. அவர்கள் சாதாரண சூழ்நிலையில் வளர வேண்டும். பெற்றோரும் அவனிடம் அக்கறை எடுத்துக் கொண்டு அவனுடைய முன்னேற்ற வழிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்.''

மூளை பாதிக்கப்பட்ட இக்குழந்தைகளுக்கு முழுவதும் இலவசமாக இந்தச் சேவை செய்யப்படுகிறது.

''ஸ்பாஸ்டிக் — ஒரு நோயல்ல. ஒரு குறைபாடு. அவ்வளவுதான். அதைப் புரிந்து கொண்டு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முறையான பயிற்சி மூலம் ஓரளவு சாதாரண நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். ஆயிரக்கணக்கில் மருந்துகளுக்குச் செலவு செய்யாமல் பிரச்னையைப் புரிந்து கொண்டால் போதும்'' என்கிறார் இவர்.

